விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 08 வெள்ளிக்கிழமை (20.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மகிந்தவின் இராஜதந்திர வலையில் இந்தியா மீண்டும் விழுந்துவிட்டது!

## இந்தியக் குழுவின் விஜயம் குறித்து தினமணி சாடல்

**(சென்னை),** ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரித்த இராஜதந்திர வலையில் இந்தியா மீண்டும் விழுந்துள்ளதாக தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் தினமணி பத்திரிகை தனது ஆசிரியர் கருத்தில் குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம் செய்வதைத் தடுக்கும் நோக்குடனேயே ஜெனிவாத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கிய இந்தியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை இலங்கை அரசாங்கம் வரவேற்றுள்ளதாக இப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் இலங்கை விஜயம் தொடர்பில் தினமணி பத்திரிகை எழுதியுள்ள ஆசிரியர் தலையங்கத்திலேயே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கடந்த திங்கட்கிழமை இலங்கை சென்றடைந்தவுடன், மாற்றி அமைக்கப்பட்ட பயணத் திட்டத்தை இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிடுகிறது. (23ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் குழுவினர் அரசுக்கு நன்றி தெரிவிப்பு

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய பாராளுமன்றக் குழு வடக்கு அபிவிருத்தி மற்றும் நலன்புரித் திட்டங்களை அவதானித்ததன் பின்னர் அரசாங்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்திருப்பதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

வடக்கில் யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களை பார்வையிடுவதற்கும் அதேநேரம் இந்திய நிவாரணங்களை பகிர்ந்தளிப்பதற்குமான இந்திய (24ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் உயிரோடுதான் இருக்கிறார்

## அடித்துச் சொல்கிறார் பழ.நெடுமாறன்



(சென்னை)

மரணத்தை வென்ற மாவீரன் உயிரோடுதான் இருக்கிறார் என்பதை நம்பத் தகுந்த ஆதாரங்கள் மற்றும் முந்தைய வரலாறுகளில் இருந்தே பேசுகின்றேன். தம்பி நிச்சயம் ஒருநாள் வருவார். தமிழீழ விடுதலைக்கு மறுபடியும் தலைமை தாங்குவார். இவ்வாறு தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் விகடன் மேடை நிகழ்வின்போது தெரிவித்தார்.

கேள்வி: இறுதி யுத்தத்தில் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டார் என்று பலரும் சொல்கின்றனர். ஆனால், நீங்களோ பிரபாகரன் உயிரோடு இருப்பதாகத் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். ஏன்?

பதில்: 1984-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி சிங்கள இராணுவம் பிரபாகரனைக் சுட்டுக் கொன்று விட்டதாக செய்தி வெளியானது. உலகத் தமிழர்கள் அனைவரும் பெரும் அதிர்ச்சியில் ஆழ்ந்தனர். எங்கள் குடும்பம் உறங்காமல் தவித்துக் கிடந்தது. அடுத்த (24ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் குழு யாழ்.அரச அதிபரை சந்திக்கவில்லை

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரைச் சந்திக்கவில்லை. இந்தியக் குழுவின் யாழ்ப்பாண விஜயத்தின்போது, யாழ்ப்பாண அரச அதிபரை சந்திப்பதற்கான ஏற்பாடு நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்திய வீடமைப்புத் திட்டம் மற்றும் மீள் குடியமர்வு (24ஆம் பக்கம் பார்க்க)

## லலித், குகன் இருவரும் உயிரோடு இருப்பது உறுதி.

### கொழும்பில் பரபரப்பு தகவல்

(கொழும்பு)

கடந்த 12-ம் திகதி வரை தெமட்டகொடவில் உள்ள கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த லலித் மற்றும் குகன் ஆகிய முன்னிலை சோஷலிசக் கட்சியின் தலைவர்கள் நேற்று அதிகாலை 2.20 மணியளவில் அங்கிருந்து வேறு இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக நம்பத்தகுந்த தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் இருவரும் பொலிஸாரின் நலன்புரி பணியக தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கடந்த 12-ம் திகதி செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து, அவர்கள் அன்றைய தினம் இரவே, அங்கிருந்து கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவிற்கு மாற்றப்பட்டனர்.

இது பற்றிய தகவல்கள் கிடைத்திருந்த போதிலும் அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதால், மாற்று ஊடகங்கள் அந்த தகவலை வெளியிடவில்லை.

இந்த நிலையில் ஏஜ-சி026 என்ற இலக்கத்தை கொண்ட (24ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது பற்றி ஜனாதிபதி ஆராய்வார்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஆளும் கட்சியின் தலைவர்களின் கருத்துக்களை ஆராய தீர்மானித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது இந்த விடயங்களை உறுதிப் படுத்தினார்.

நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தின்போது நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான கருத்துக்களை கட்சித் தலைவர்கள் சந்திப்பில் முன்வைக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும் கலந்து கொண்டார்.

இதன்போது (24ஆம் பக்கம் பார்க்க)

## புயல்வேகத்தில் செல்லும் சுஷ்மா சுவராஜுக்கு இலங்கை அரசின் மறுவாழ்வுப் பணி திருப்தியாம்

### பன்னாட்டுக் குழுவை அனுப்பக் கோருகிறார் சீமான்

(சென்னை)

இலங்கையில் தமிழர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் குறித்து நேரில் கண்டறியச் சென்ற பாராளுமன்ற குழுவின் தலைவரான சுஸ்மா சுவராஜ், ஒரே நாளில் வன்னி முகாமில் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு வரை புயல் வேகத்தில் பயணம் செய்து ஆங்காங்கே வாழும் சிலரிடம் மட்டும் பேசிவிட்டு, இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வு தொடர்பாக அந்நாட்டு அரசு மேற்கொண்டு வரும் பணிகள் திருப்தியளிப்பதாகத் தெரிவித்துள்ளது வியப்பளிக்கிறது என நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ள விடயம் வருமாறு,

வன்னி முகாமில் இன்னமும் இருக்கின்ற தமிழர்களிடம் நாடாளுமன்றக் குழுவினர் பேசியபோது, அவர்கள் ஒரு அச்சத்துடனேயே தங்களிடம் பேசியதாக தமிழ்நாட்டில் இருந்து சென்ற 2 உறுப்பினர்கள் கூறியுள்ளனர். தங்களோடு பேசிய அம் மக்களின் கண்களில் அச்சம் தெரிந்தது என்று மற்றொரு காங்கிரஸ் உறுப்பினரான கிருஸ்ணசாமி கூறியுள்ளார்.

முல்லைத்தீவில் மக்களிடம் பேசியபோது அங்கு ஏராளமான இராணுவத்தினரும், சாதாரண உடையில் உளவுப் பிரிவினரும் குவிக்கப்பட்டிருந்தனர் என்று பல நாளிதழ்களில் செய்திகள் வந்துள்ளன. ஆனால், இராணுவத்தின் (23ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் மீனவர் கடலில் வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடலில் தொழிலுக்கு நேற்று மாலை சென்ற குடும்பஸ்தர் ஒருவர் வலிப்பு நோயினால் கடலில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் குருநகர் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த அல்பிரட் ஜெயக்குமார் (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் இவரும் இவருடைய சகோதரரும் குருநகர் கடலுக்கு வலை பார்க்கச் சென்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-11)

# இந்தியக் குழுவின் வருகையால் தப்பபிப்பிராயங்கள் நீங்கின

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகை ஊடாக பல தவறான பிரசாரங்கள், தவறான அபிப்பிராயங்கள் இல்லாமல் போயுள்ளது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு 6 நாள் விஜயத்தை மேற் கொண்டு வருகை தந்த இந்திய நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான நாடாளுமன்ற குழுவினர் 2 நாள்விஜயத்தைமேற்கொண்டுநேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

இந்தக் குழுவினர் யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்றுக் காலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உள்ளிட்டோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் பின்பு ஊடகவியலாளர் களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய நாடாளுமன்றக் குழுவினருடன் வட மாகாணத்தில் போருக்குப் பின்பு மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும், இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளினால் செயற்படும் பாதிப்புத் தொடர்பாகவும், இலங்கை, இந்திய நட்புறவின் அடையாளமாகமேற்கொள்ளப்பட்டுவரும்இந்தியவீட்டுத் திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடினோம்.

இந்திய நாடாளுமன்றக் குழுவினர் இங்கு வந்து நிலைமையை நேரில் பார்வையிட்டதன் மூலம் பலராலும் மேற்கொள்ளப்பட்டு வந்த தவறான பொய்ப் பிரசாரங்கள்,தவறான அபிப்பிராயங்கள் தகர்த்தெறியப்பட்டுள்ளன.

அத்தோடு மக்களின் உண்மை நிலைமையை நேரில் சென்று பார்வையிடுவதன் மூலம் பல உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில்,

சமூக விரோதச் செயல்களில் சிலர் ஈடு பட்டு வருகின்றனர்.அது தொடர்பாக பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு சமூகத்தில் உள்ள குறைபாடு களுக்கு அரசியல் சாயம் பூச வேண்டாம்.

சமூக விரோதச் செயல்கள் ஜனாதிபதியின் கொள்கையல்ல.பொய்ப் பிரசாரத்தில் ஊடகங்கள் ஈடுபடாது குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டுங்கள்.நல்லதைச் செய்யும்போது யாராக இருந்தாலும் பாராட்டுங்கள். குற்றங்களை மட்டும் சுட்டிக்காட்டுவதை ஊடகங்கள் கைவிட வேண்டும்.

உலகம் முழுவதும் குற்றச் செயல்கள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

இலங்கையில் வட மாகாணத்தில் மட்டும் தான் குற்றச் செயல்கள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.சகல பகுதிகளிலும் குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன.

எனவே சமூகக் குறைபாடுகளுக்கு அரசியல் சாயம் பூச வேண்டாம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார். (ந-6)

## பொதுமக்கள் திரண்டு திருடனைப் பிடித்தனர்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் வீடு புகுந்து திருட முயன்ற தென் பகுதியைச் சேர்ந்த திருடன் ஒருவன் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கந்தர்மடம் குமாரசாமி வீதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

பழைய இரும்பு முற்றும் போத்தல்கள் சேகரிப்பவர் போல நடமாடிய மேற்படி நபர் வீட்டின் பின்பகுதியால் வீட்டின் உள்ளே நுழைந்து அங்கு திருட்டில் ஈடுபட்டார்.

இதன்போது வீட்டில் இருந்தவர்கள் சத்தமிடவே அவர் மதிலால் பாய்ந்து தப்பிச்சென்றுள்ளார். ஆயினும்பொதுமக்கள்ஒன்றுசேர்ந்து அவரை பிடித்து கட்டி வைத்தனர்.

இதன்பின்னர்சம்பவஇடத்திற்குவந்தயாழ்ப் பாணப்பொலிஸார்குறித்தநபரைக்கைதுசெய்து பொலிஸ்நிலையத்திற்குஅழைத்துச்சென்றனர்.

மேலும் குறித்த நபர் புத்தளத்தைச் சோந்தவரென விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இதேவேளை குறித்த நபர் வைத்திருந்த மோட்டார் சைக்கிளில் நம்பர்த் தகடு இருக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

## சாரதியை தாக்கியவர் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயணம் செய்வதற்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்ஸினை மறித்த போது நிற்காமல் சென்றதனால் பஸ் சாரதியினை தாக்கியவர் யாழ்.நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதல் சம்பவம் கடந்த சனிக்கிழமை காளிகோவிலடி உரும்பிராய் பலாலி வீதியில் இடம்பெற்றுள்ளது. இதில் 764 இலக்க யாழ்–புன்னாலைக்கட்டுவன் பஸ் சாரதியே இவ்வாறு தாக்கப்பட்டவராவார்.

சந்தேகநபர் மீது பஸ் சாரதியினை தாக்கினார் என்றும், பஸ்ஸிற்கு சேதம் விளைவித்தார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டு அன்றைய தினமே கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றைய தினம் குறித்த வழக்கு யாழ்.நீதவான் மா.கணேசராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி எம்.றெமிடியஸ் குறித்த நபரினை பிணையில் விடுதலை செய்யுமாறு பிணை விண்ணப்பம் செய்திருந்தார். இதனை அடுத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியிலான இரு ஆட்பிணையில் குறித்த நபர் அனுமதிக்கப்பட்டார். (ந-4)

## வெளிநாட்டிற்கு அனுப்புவதாக மோசடி செய்த பெண்ணுக்கு 6 மாதம் கடூழியச் சிறை

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி மூவரிடம் பண மோசடி செய்த பெண்ணிற்கு 6 மாத கடூழியசிறைத்தண்டனையும் 6 மாத சாதாரண சிறைத் தண்டனையும் 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் யாழ்.நீதிமன்றினால் விதிக்கப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு உரும்பிராயினைச் சேர்ந்த மூவரிடம் வெளிநாட்டில் வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதாகக் கூறி 90 ஆயிரம் ரூபாய் பணத்தினை பெற்றுள்ளார்.

ஏமாந்தவர்கள் கோப்பாய் பொலிஸில் செய்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து அச்செழு வடக்கு நீர்வேலியைச் சேர்ந்த குறித்த பெண் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதுவரை காலமும் நடைபெற்ற இவ் வழக்கில் சுத்தவாளி என வாதாடிவந்த பிரஸ்தாப பெண், நேற்றுமுன்தினம்குறித்தவழக்குயாழ்.நீதவான் மா.கணேசராஜா முன் னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது குறித்த பெண்ணுக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டமையால் குறித்த பெண்ணிற்கு தண்டனையாக 6 மாத கடூழியச் சிறைத்தண்டனையும் 6 மாத சாதாரண சிறைத்தண்டனையும் 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ந-4)


## உடன் தேவை

பத்திரிகை விநியோகஸ்தர் சொந்தமாக மோட்டார் சைக்கிள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்
வலம்புரி.



## பதவி வெற்றிடம்

- ★ கணனி ரைப்பிங்(தமிழ்)
- ★ கணனி பக்க வடிவமைப்பாளர்கள்
- ★ கணனி விளம்பர வடிவமைப்பாளர்கள்
- ★ Hard Ware

மேற்குறித்த திறன் மற்றும் அனுபவம் நிறைந்த இருபாலாரிடமும், இருந்து விண்ணப்பம் கோரப் படுகின்றது. பொருத்தமானவர்கள் தமது சுயவிபரம் கொண்ட விண்ணப்பத்தை தயார் செய்து

மனிதவள முகாமையாளர்
வலம்புரி
இல3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


## நல்லூர் பிரதேச சபையின் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் கோழிப்பண்ணைகளை நடத்துபவர்கள் அல்லது 50ற்கும் மேற்பட்ட கோழிகளை வீடுகளில் வளர்ப்பவர்கள் அனைவரும் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன் நல்லூர் பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் சுற்றுச் சூழல் உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சபைத்தலைவர் ப.வசந்தகுமார் கேட்டுள்ளார். (ந)

## வழிகாட்டல் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாகச் சேவை, இலங்கை கணக்காளர் சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகள் நல்லூர் பிரதேச சபை தலைமையலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமைபிற்பகல்3மணிக்குஆரம்பமாகவுள்ளதாக நல்லூர்பிரதேசசபைச்செயலாளர்அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை வழிகாட்டி வகுப்புகள் வடக்கு உதவிக்கணக்காய்வாளர் த.பாலசுப்பிரமணியத்தால் நடத்தப்படவுள்ளது. (ந-9)


**YAALH ENGLISH ACADEMY**
(077 3212 711)

வழங்கும் இன்றைய தேவை

BASIC + INTERMEDIATE + ADVANCED
**PRACTICAL ENGLISH COURSES**
FOR ADULTS + SCHOOL STUDENTS

கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.

True ease in Language Use
comes from proper practice,
not chance
As they walk with grace,
who've learned to dance !

(8169)

வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்



## ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

தாவடி தெற்கு, கொக்குவில்.

### வருடாந்த மஹோற்ஸவம் – 2012

அம்பிகை அடியார்களே,

அம்பாளின் வருடாந்த மஹோற்ஸவம் 21.04.2012 சனிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 05.05.2012 சனிக்கிழமை சித்திரா பௌர்ணமி தின தீர்த்தோற்ஸவத்துடன் நிறைவு பெறும்.

### விசேட தினங்கள்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 21.04.2012 சனிக்கிழமை | பகல் 11.00 மணி |
| கைலாசவாகனம் | 29.04.2012 ஞாயிற்றுக்கிழமை | மாலை 7.00 மணி |
| சப்பறம் | 03.05.2012 வியாழக்கிழமை | மாலை 7.00 மணி |
| இரதோற்ஸவம் | 04.05.2012 வெள்ளிக்கிழமை | முற்பகல் 10.00 மணி |
| தீர்த்தோற்ஸவம் | 05.05.2012 சனிக்கிழமை | பகல் 11.30 மணி |
| பூங்காவனம் | 06.05.2012 ஞாயிற்றுக்கிழமை | மாலை 6.00 மணி |

பகல் உற்ஸவம் காலை 8.00 மணிக்கும் இரவு உற்ஸவம் மாலை 5.00 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும்.

அம்பாள் அடியார்கள் இப்புனித மஹோற்ஸவ நாட்களில் ஆசார சீலர்களாக வருகை தந்து தரிசித்து அவளின் திருவருளால் அனைத்து நலன்களும் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாகுக.

சுபம்

ஸ்ரீ வட,பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
தாவடி தெற்கு, கொக்குவில்.

ரவி ஐயர்
ஆதீனகர்த்தா

(8203)



## தவறிவிட்டது

தனுஷ்கோடி பேரின்பதாசன் இல. 208, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம், ATM கார்ட் வேறும் பல முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் வவுனியா பஸ் நிலையத்தில் 12.04.2012 அன்று தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

த. பேரின்பதாசன் (கண்ணன்)
இல.208, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.
TP:- 0770753835

(C-6406)



## வான் விற்பனைக்கு

டொயாட்டோ LH102, சுப்பர் GL, 59-xxxx, 1993. டுவல் A/C, 2L, எலோவீல், அட்ஜஸ்டபிள் சீற், வெள்ளை.

T.P.No. : 0750387351

(C-6402)

# இன்று ஒரு தகவல்

## அரசனும் துறவியும்

ஒரு ஊரிலே ஒரு துறவி இருந்தார். அவர் ஒரு புத்த சமயத் துறவி. அந்த ஊர் மன்னன் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டான்.

ஒரு நாள் புறப்பட்டுச் சென்று புத்த துறவியின் பாதங்களை தொட்டு வணங்கினான். இதன்பின் சொன்னான்; ஐயா...! நான் உங்களை அரண்மனைக்கு அழைத்து கொண்டு போவதற்காக வந்துள்ளேன்... என்னுடன் வாருங்கள்" என்று அழைத்தார்.

"இவர் என்ன சொல்கிறார். நான் மிகவும் எளிமையானவன்... எனக்கு எதற்கு அரண்மனை வாசம்? இப்படியாக துறவி கூறுவார் என்று நினைத்தான்.

ஆனால், அந்தத் துறவி என்ன செய்தார் தெரியுமா?

"அப்படியா... சரி,போகலாம்.. போய் உன் இரதத்தை கொண்டு வா.. அரண்மனைக்குப் போகும் போது அதற்கு தகுந்த மாதிரி ஆடம்பரமாகத்தான் போக வேண்டும்" என்று கூறினார் துறவி.

துற்வி இப்படிக் கூறியதும் அந்த மன்னனுக்கு மனிதினுள் சந்தேகம் எழுந்தது.

"இவர் உண்மையில் துறவிதானா? ஏமாற்றுப் பேர்வழி மாதிரித் தெரிகிறதே" என்று நினைத்தார்.

இருந்தாலும் ஒன்றுமே செய்ய முடியாது. இரதத்தைக் கொண்டு வந்தார் துறவி. அதில் ஏறி அமர்ந்துகொண்டார். பக்கத்திலே ராஜா. அவர் மிகவும் உற்சாகமாக வருகிறார். இவர் மிகவும் சோகமாக இருக்கிறார்.

"துறவி மரத்தடியிலேயே வாழப் பழக்கப்பட்டவர்... அரண்மனையிலே எளிமையான ஒரு இடத்திலே உட்கார்ந்து கொள்வார்" என்று நினைத்தான்.

ஆனால், அப்படி எதுவுமே நடைபெறவில்லை. அரண்மனைக்கு வந்து இறங்கியவுடன் அந்தத் துறவி... அதைக் கொண்டுவா... இதைக்கொண்டு வா... என்று கட்டளை பிறப்பித்தார்.

அரண்மனையில் இருந்தால் அரசனைப்போல இருக்க வேண்டும். இரவு முழுவதும் சீரான தூக்கம். பகலிலே அரண்மனை தோட்டத்திலே உலா வரவேண்டியது. பின்னர் நீச்சல் தடாகத்திலே குளிக்க வேண்டியது... இப்படியே பொழுதைப் போக்கினார்.

அந்த அரண்மனையிலே துறவி மகிழ்ச்சியாக இருக்கிறாரே... மன்னனாலே அப்படி இருக்கி முடியவில்லை. அவருக்கு எந்தவிதமான கவலையும் இல்லை. இவனுக்கு அரசாங்கக் கவலைகள்.

துறவி இப்படியாக இருப்பதை பார்ப்பது இவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஒருநாள் அவரிடம் சென்று...நான் உங்களிடம் கதைக்க வேண்டும் என்று சொன்னார்.

துறவி பார்த்தார்; "நான் இந்த அரண்மனைக்கு வரும் போதே நீ என்னிடம் ஏதோ சொல்ல வேண்டும் என்று நினைத்தாய். ஏன் கால தாமதமானது? நீ அநாவசியமாக உன்னைத் தொந்தரவு செய்து கொள்கிறாய். உனது கவலை எனக்கு புரிகிறது என்றார் துறவி.

நான் மரத்தடியில் இருக்கும் போது அடிக்கடி சந்திப்பாய். ஏதாவது விளக்கம் கேட்பாய். இங்கே வந்த பின்னர் உன்னை சந்திப்பது கூட அபூர்வமாக இருந்தது. நீ கேட்கப் போவது எனக்கு தெரியும்... இருந்தாலும் மறுக்காமல் கேள்" என்றார்.

" வேறு ஒன்றுமில்லை. இப்பொழுது எனக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்? நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். என்னால் அப்படி இருக்க முடியவில்லை. இவ்வளவுக்கும் நீங்கள் முன்பு மரத்தடியில் இருந்தது போலில்லை.

தங்கத்தேர் கேட்கிறீர்கள். விலையுயர்ந்த ஆடைகள் அணிகிறீர்கள். சுவையான சாப்பாடு... இப்படியாக இருக்கும் போது உங்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் ? இதுதான் மன்னன் கேள்வியாக அமைந்தது.

" இதற்கு பதில் என்னிடம் உள்ளது. என் கூட புறப்பட்டு வா. இந்த நகரத்திற்கு வெளியே போவோம் என்று கூறி அவரை ஊரின் எல்லைக்கு அழைத்து கொண்டு போனார்.

அங்கே போய் சொன்னார்" இதோ பார்... இந்த இடத்தைத் தான் தேடிக்கொண்டிருந்தேன். இனிமேல் நான் திரும்பி வரப்போவதில்லை நீ என்னுடன் வருகிறாயா... திரும்பிப் போகப் போறியா? என்றார்.

"நான் எப்படி உங்களுடன் வர முடியும்... எனது நாடு ... என்னுடைய குடிமக்கள்... எனது சொத்து... மனைவி பிள்ளைகள் அனைத்தையும் விட்டுவிட்டு எப்படி வருவது?

இப்போது அந்தத் துறவி சொன்னார்; வித்தியாசம் தெரிகிறதா... நான் அரண்மனையிலே இருந்தேன். அனைத்தையும் உடையவனாக இருந்தேன். ஆனால் ஒன்றையுமே சொந்தம் கொண்டாடவில்லை.

ஆனால் நீயோ அனைத்தையும் சொந்தம் கொண்டாடுகிறாய். இது தான் இருவருக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்று கூறினார்.

அரண்மனை ஆடைகளை களைந்தார். அரசனிடம் கொடுத் தார் " உனது ஆடைகள் தானே இவை நீயே வைத்துக்கொள்" என்றார்.

அவர் நடந்து போக ஆரம்பித்தார். திரும்பியே பார்க்கவில்லை.

அரசனுக்கு அப்போது தான் தனது ''அறியாமை'' என்பது விளங்கியது. இதிலிருந்து நாம் ஒன்றைப்புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வுலகில் எத்தனையோ பொருட்கள் அவற்றையெல்லாம் முறையாக பயன்படுத்தினால் நாம் மகிழ்ச்சியாக வாழலாம்.

அவற்றையெல்லாம் விட்டுவிட்டு அதற்கெல்லாம்சொந்தம் கொண்டாடினால் துன்பம் தான் விளைவாக வரும் பின் அதனையிட்டு கவலை தான் ஏற்படும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடமராட்சி கம்பன்கழகம் நடத்தும் கம்பன்விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 தொடக்கம் மதியம் 12.30 மணி வரையும் மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2.30 மணிதொடக்கம் இரவு 7.30 மணிவரையும் நெல்லியடியில் அமைந்துள்ள நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் இ.ஜெயராஜ் தலை மையில் நடை பெறும்.

இந்நிகழ்வுகள் காலை, மாலை இரு அமர்வு களாக இடம்பெறும். இதில் காலை நிகழ்வானது 8.30 மணிக்கு சுந்தரேசன் தீபன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

கம்பன் வாழ்த்தினை சங்கீத பூஷணம் செல்வி தம்பு சரோஜா ஆற்றவுள்ளார்.

ஆசியுரையினை நெல்லை தடங்கன் புளியடிமுருகமூர்த்தி ஆலய பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ பிரபாகரக் குருக்கள், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

தலைமையுரையினை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆற்ற தொடக்கவுரையினை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் நிகழ்த்துவார். அத்துடன் கம்பவாரிதி இ.ஜெயராஜ் கம்பனின் ஏற்றமிகு கூற்றுகள் என்னும் பொருளில் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளார்.

மாலை நிகழ்வானது பிற்பகல் 3 மணிக்கு ஜெயநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

கம்பன் வாழ்த்தினை சங்கீத பூசணம் சி.குமாரசுவாமி ஆற்றவுள்ளார்.

நிகழ்வின்தலைமையுரையினை பேரா சிரியர் இ.சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

அஞ்சலியுரையினை அமரர் மன்னவன் கந்தப்புவினை நினைவு கூர்ந்து பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆற்றுவர்.

கற்போர் மனதில் பெரிதும் நிறைபவன் எனும் பொருளில் சூழலும் சொற்போரும் நடத்தவுள்ளார்.

இதில் மகன் இராமனே என தமிழருவி த.சிவகுமாரனும் மாணவன் இராமனே! என இரா. செல்வவடிவேலும் கணவன் இராமனே என ஸ்ரீ பிரசாந்தனும் நண்பன் இராமனே என இரா. சண்முக வடிவேலும் பகைவன் இராமனேஎன இலக்கியச் சுடர் த.இராமலிங்கனும் வாதிடவுள்ளன்ர். (அ-2)

# திருநாவுக்கரசர் குருபூசைத்தினம்

புத்தூர் கிழக்கு -தல்லுடை கன்னியர் வைரவர் அறநெயிப் பாடசாலை,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைகளத்துடன் இணைந்து நடாத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத்தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு புத்தூர் கிழக்கு குருநாதர் சனசமூக நிலையத்தில் திருமதி.மாலதி ராகுலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சிறுப்பிட்டி மனோன்மணி அம்பாள் ஆலய தலைவர் க.ஸ்ரீஸ்கந்தராஜா, சிறப்பு விருந்தினர்களாக திருப்பணி நங்கை திருமதி இளையதம்பி ஆச்சிப்பிள்ளை, புத்தூர் கிழக்கு குருநாத சுவாமி ஆலய செயலாளர் மாதர் கந்தசாமி, புத்தூர் கிழக்கு பெரியதம்பிரான் ஆலய உப தலைவர்இளையதம்பி.சின்னத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.அன்றையதினம் ***வாகீசரும் சிவப்பணி யும், 23 ஆம் புலிகேசி*** போன்ற நாடகங்களும் நடைபெறவுள்ளதாக இந்துசமய கலா சார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 | 60 | 100 |
| பச்சைமிளகாய் | 35-40 | 40 | 40 | 40 |
| தக்காளி | 70 | 60 | 70 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 10 | 10 | 15 | 20 |
| கரட் | 40 | 40 | 30 | 60 |
| பூசணி | 30 | 30 | 25 | 30 |
| புடோல் | 30 | 40 | 20 | 40 |
| வாழைக்காய் | 25 | 20 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-40 | 70-80 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 85 | 100 | 80 | 90 |
| பாகற்காய் | 90 | 80 | 60 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | -- | 70 |
| பயற்றங்காய் | 40 | 80 | 40 | 30 |
| லீக்ஸ் | -- | 70 | 90 | 80 |
| பீற்றூட் | -- | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 40 | 40 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 300-320 | 400 | 350 | 320 |
| போஞ்சி | 40 | 80 | 60 | 80 |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 10-20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 70 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 20 | 25 | 20-25 |

# இராசி பலன்

*20.04.2012*
*(சித்திரை 08, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு*
*சதுர்த்தசி முற்பகல்11.32 மணிவரை*
*ரேவதி முன்னிரவு 10.16 மணிவரை*
*இராகுகாலம் 10.31-12.01 மணிவரை*
*சுபநேரம் 6.01-7.31 மணிவரை*
*அமாவாசை விரதம்*

**மேடம்** விநாயகரை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் புதிய திருப்பங்களை செய்யும் எண்ணம் மேலோங்கும், சயன சுகக்குறைவான நாள், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, அஞ்சல் வழியில் அனுகூலமான தகவல்ள் வந்து சேரலாம், பெயரும் புகழும் கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தொட்ட காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், செய்தொழிலில் முன்னேற்றம் கருதி அதிகம் பாடுபடுவீர்கள்.

**கடகம்** திடீர் பயணங்களால் ஆதாயமுண்டு , புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், கட்டுப்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உருவாகலாம்.

**சிங்கம்** குடும்பத்தில் மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் மாலை நேரங்களில் கைகூடலாம், தவிர்க்க முடியாத சில செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**கன்னி** இனசனத் தொடர்புகள் அதிகரிக்கும், வழிபாட்டில் மகத்துவம் காண்பீர்கள், அன்பு நண்பர்களின் தொடர்புகள் நீடிக்கும், பொருளாதார வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உங்கள் முயற்சிக்கு உறவினர் மத்தியில் பாராட்டுக்கள் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.

**விருச்சிகம்** புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள்,தன்னம்பிக்கை அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி கருதி அதிகம் பாடுபடுவீர்கள், தெய்வ நம்பிக்கையால் உற்சாகம் பெறுவீர்கள்.

**தனுசு** மாதர் நட்புண்டு, பயணங்களால் நன்மையுண்டு, மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், உறவினர் தொடர்பில் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்** பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பலன் காண வேண்டிய நாள், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், தொழிலில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், மரியாதைக்குரிய நாள்.

**கும்பம்** உங்களின் செயற்பாடுகளால் குடும்பத்தினர் பெருமைப்படுவார்கள், எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும், வழிபாடுகளில் நாட்டம் காட்டுவீர்கள் போசன சுகமுண்டு

**மீனம்** பொருளாதார நன்மை கருதி பயணங்களை மேற்கொள்வீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், வேலைச்சுமையால் மனதில் உற்சாகம் குறையும், போசன சுகமுண்டு.

வளவன்

# குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு; வழக்குத் தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் அமைப்பில் பயிற்சி பெற்று இராணுவத்தினருக்கு எதிராக தாக்குதல் நடத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்ட நபர் யாழ். மேல் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

புலிகளின் அமைப்பில் இணைந்து போர் முனைப் பயிற்சி பெற்ற இராணுவத்தினருக்கு எதிராக தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறையினைச் சேர்ந்த சொர்க்கலிங்கம் ஜெயராசா (வயது-56) என்ற குடும்பஸ்தரே விடுவிக்கப்பட்டவர் ஆவார்.

வன்னி இறுதிக்கட்ட போரின் போது முள்ளிவாய்க்காலில் வைத்து 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 16 ஆம் திகதி பயங்கரவாத புலனாய்வுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், வவுனியா மேல் நீதிமன்றங்களில் இவருக்கு எதிராக இவரினால் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை ஒரு சான்றுப்பொருளாக கருதி வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கு கடந்த மாதம் 22 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி எம். றெமீடியஸ் இவரினால் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கட்டாயத்தின் பேரிலேயே வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனை ஓர் சான்றாக ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் வாதாடினார்.

• இந்நிலையில் குறித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் குறித்த நபரினால் சுய விருப்பின் பேரில் வழங்கப்படவில்லை எனவும் இதனை மன்று ஒரு சான்று பொருளாக ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கூறி குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டது.

குறித்த நபருக்கு எதிராக மேலதிக சான்று இருக்கின்றதா என ஆராய்வதற்காகவும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காகவும் வழக்கு நேற்று முன்தினம் வரை தள்ளி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மன்றில் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இவருக்கு எதிராக வேறு எவ்விதமான சான்றும் இருக்கவில்லை என முடிவுறுத்திய நிலையில் குறித்த நபருக்கு எதிரான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிருபிக்கப்படவில்லை என கூறப்பட்டு யாழ். மேல் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எனினும் குறித்த நபருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இருப்பதனால் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-4)

## ஏலவிற்பனை

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸாரால் அப்பகுதியில் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்ட சில பொருட்கள் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரிமை கோரப்படாத இப்பொருட்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு பகிரங்க உள்ளக ஏலத்தில் விற்கப்படவுள்ளது. (அ-3-29)

## மணவாளக்கோள விழா

(கைதடி)

கைதடி ஈழத்து காசி லிங்கேஸ்வரப் பெருமான் அருள் ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய மணவாளக்கோல விழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் லிங்கேஸ்வரப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளதாக கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய தலைவர் இ. குழந்தைவடிவேலு அறிவித்துள்ளார். (அ-9)

யாழ்.செய்திகள்...

## ஸ்ரீநாராயண ச.ச.நிலைய வைர விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கடந்த 13 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

நிலையத்தலைவர் தெ. சுகிர்தன் தலைமையில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந் தினர்களாக அச்செழு 511 ஆவது படைப்பிரிவின் இராணுவ அதிகாரி எம்.டி.யூ.வி குணதிலக்கே, கோண்டாவில் அசெம்பிளி ஒவ்கோட் அற்புத மத்தியஸ்தான போதகர் கனகலிங்கம் ராஜா, ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. கமலேந்திரன், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, நல்லூர் தொகுதி அமைப்பாளர் அ. ரவீந்திரதாசன் மேற்படி சனசமூக நிலை காப்பாளர் க. தியாகராஜா, மேற்படி சனசமூக நிலைய கணக்காய்வாளர் ம. சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை காலை 6 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டியும் காலை 7 மணிக்கு பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியும் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட நிகழ்வான வானொலி அறிவிப்பாளர் றஞ்சித் அமருதனின்ஞாபகார்த்த கலை நிகழ்வுகள் இடம்பெறும் என சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப்பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரைநகர்ப்பிரதேசம், தீவகப்பிரதேசம், இராஜ வீதியில் இருந்து கோப்பாய் சந்திவரை கைதடி மானிப்பாய் வீதியில் கோப்பாய் பிரதேசம், இராஜ வீதி சந்திக்கும் கோப்பாய் கிருஷ்ணன் கோவில் சந்திக்கும் இடைப்பட்ட பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட மட்டுவில், சரசாலை பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருவதாக சுகாதார பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இப்பணி நிறைவடைந்ததும் கைதடி, நாவற்குழி பிரதேசங்களில் தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் எனவும் விபரங்கள் அந்தந்த பிரிவு பொது சுகாதார பரிசோதகர்களால் அறிவிக்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-3-29)

## வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

அல்வாய் நாவலடி வீதி மக்களின் உயிரைக் குடிக்கும் வகையில் படுமோசமான நிலையில் காணப்படுவதனால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்படி வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் அப்பகுதியில் உள்ள பாலம் ஒன்று மக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் காணப்படுகின்றது.

தினமும் அவ் வீதியால் நூற்றுக்கணக்கான வாகனங்களும் ஆயிரக்கணக்கான பயணிகளும் பயணிக்கின்றனர்.



எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு இவ்வீதியை புனரமைத்து மக்கள் போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

## இலவச மருத்துவ முகாம்

(கைதடி)

கைதடி லயன்ஸ் கழகமும் கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளதாக கைதடி லயன்ஸ் கழக தலைவர் லயன் கே.வி.முத்துகுமார சுவாமி அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் சலரோகப் பரிசோதனை, கண் பரிசோதனை மற்றும் சகல சிசிக்சைகளும் நடைபெற்று கண்ணாடித் தேவையுடையோருக்கு கண்ணாடியும் வழங்கப்படவுள்ளதாக அறிவித்துள்ளார். (அ-2)

நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சித்திரைப்புத்தாண்டு சிறப்பு கிராமிய விளையாட்டு விழா நேற்று முன்தினம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கயிறுழுத்தல், தேங்காய் துருவுதல், கிளித்தட்டு போட்டிகள் இடம்பெறுவதனையும் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரருக்கு விருந்தினர் ஒருவர் பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ். செல்வதீபன்)

# புத்தாண்டு விழா

(பூநகரி)

பூநகரி 661 ஆவது படைப்பிரிவினரும் பூநகரி பொலிஸ் பிரிவினரும் இணைந்து நடத்தும் புத்தாண்டுப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பூநகரி வாடியடி ஹோட்டல் மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக 661 ஆவது படைப்பிரிவு அறிவித்துள்ளது.

பூநகரி பொது அமைப்புக்களினதும் பாடசாலை மாணவர்களினதும் அனுசரணையோடு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மைதான விளையாட்டுக்களும் பாரம்பரிய விளையாட்டுக்களும் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் இரவு விசேட நிகழ்வாக தமிழ்-சிங்கள கலைஞர்கள் கலந்து கொள்ளும் இசை நிகழ்வும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-84)


## கிருஷ்ணா அடகு சேவை

இல 370, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்

பதிவு இல:-J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2011 ஆம் ஆண்டு (28.02.2011) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி (15.05.2012) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியா விட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடைவுத் தொகையைக் கூட்டிப் பெற்று கொள்ளவும். அல்லது ஒரு பகுதிப்பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் 15.05.2012 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.


இல 370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212225046

உரிமையாளர்
இல9, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6390)


# இந்தியக்குழு இலங்கை மீது நல்ல அபிப்பிராயத்தை கொணரும்

## அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா நம்பிக்கை



(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளை நேரடியாகச் சென்று அங்குள்ள உண்மையான நிலைமையைப் பார்வையிட இந்திய பாராளுமன்ற குழுவினரின் இலங்கை விஜயம் சிறந்த சந்தர்ப்பமென பதில் ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அரசாங்கம் அந்தப் பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இடம்பெயர்ந்தவர்களில் 95 வீதமானவர்கள் ஏற்கனவே மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து இந்திய பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தி இது தொடர்பில் சிறந்த அபிப்பிராயத்தை ஏற்படுத்த இந்திய பாராளுமன்றக் குழுவினர் முக்கியமானவர்கள்.

தமிழ் சமூகத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் வசதிகளை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் இலங்கை தொடர்பான நல்ல பிப்பிராயத்தை ஏற்படுத்த இந்திய பாராளுமன்றக் குழுவினர் முக்கியமானவர்கள். தமிழ் சமூகத்திற்கு வழங் கப்பட்டிருக்கும் வசதிகளை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் இலங்கை தொடர் பான நல்லபிப்பிராயத்தை இந்தியா அதிக ரிக்க முடியும்.

வடக்கில் நடைபெறும் அபிவிருத்திகள் போதுமானதாகயில்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்துக்குச் சென்று வந்த பின்னர் தெரிவித்த கருத்தானது ஆதாரங்களின்றி வெளியிடப்பட்ட கருத்து. இந்தக் கருத்து இலங்கைக்கு சர்வதேச ரீதியில் நற்பெயரைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

திவிநெகும திட்டம் போன்ற பொருளாதாரத் திட்டங்கள் ஊடாக சிறந்த பொருளாதார திட்டங்களை ஜனாதிபதி அமுல்படுத்தியுள்ளார். இவ்வாறான திட்டங்களின் உண்மையான நிலைமையை ரணில் விக்ரமசிங்க புரிந்து கொள்ளவில்லையென அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன மேலும் தெரிவித்தார். (அ-2)


# சிசெல்ஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வருகை

(கொழும்பு)

சிசெல்ஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜீன் போல் எடம்ஸ் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்தியாவின் சென்னையிலிருந்து ஜெட் எயார்வேஸ் விமானம் மூலம் இவர் இலங்கை வந்துள்ளார். இவரை வரவேற்க இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் சிலரும் விமான நிலையத்திற்கு வந்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மற்றும் சிசெல்ஸுக்கிடையிலான இராஜதந்திர உறவை மேம்படுத்தும் நோக்கில் இங்கு வருகை தந்துள்ள அவர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் கைத்தொழில் வணிகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார். (அ-2)



இந்திய எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினர் நேற்று வியாழக்கிழமை வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திர சிறியை வட மாகாண ஆளுநர் பணிமனையில் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இதன் போது ஜீ.ஏ. சந்திர சிறி சுஷ்மா சுவராஜுக்கு நினைவுப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: என்.குமார்)

# புலமைப்பரிசில் கொடுப்பனவு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து புலமைப்பரிசில் கொடுப்பனவு பெறும் மாணவர்களின் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. புலமைப்பரிசில் கொடுப்பன்வு உறுதிச் சிட்டைகளை துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

2 ஆம் தவணைக்காக பாட சாலைகள் ஆரம்பித்து ஒரு வாரத்திற்குள் கொடுப்பனவு வழங்க வேண்டி இருப்பதால் காலதாமத மின்றி படிவங்களை பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-3-15)


தங்கத் திருநாளாம்
அக்ஷய திருதியை தினத்தில்
காலை 7.00 மணிமுதல்
மாலை 9.30 மணி வரை
திறந்திருக்கும்



தங்கத் திருநாளான எதிர்வரும்
(24.04.2012) செவ்வாய்க்கிழமை
எம்மிடம் தங்க நகைகளை
கொள்வனவு செய்யும் அன்பார்ந்த
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
சிறப்பு அன்பளிப்பு
பொருட்கள் வழங்கப்படும்

தரம், நாணயம்,
உத்தரவாதம் கொண்ட நகைகளைக்
கொள்வனவு செய்ய
நாடவேண்டிய ஒரே இடம்

## மைதிலி நகை மாடம்

89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7902

## யாழ்.மைதிலி ஜுவலரி

79Z, செட்டியார் தெரு, கொழும்பு-11.
0112396239

(சி/6401)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# இலங்கை கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்

## தடுக்கக்கோரி இந்திய பாராளுமன்றக்குழு ஊடாக மன்மோகனுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் இழுவைப்படகு மூலம் இலங்கை கடற்பரப்பில் குறிப்பாக வடபகுதியில் மேற்கொள்ளப்படும் தொழில் நடவடிக்கையினை முற்றாக கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தால் இந்திய நாடாளுமன்ற குழுவினரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு ஆறு நாட்கள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்த இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்ற குழுவினர் வடபகுதிக்கு இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் மாலை வருகை தந்தனர்.

இக்குழுவினரை நேற்றுக்காலை யாழ். ஞானம் ஹோட்டல் முன்பாக சந்தித்து இந்த மகஜரை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவியிடம் கையளித்தார்.

இந்திய பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கு இந்திய நாடாளுமன்ற குழுவினர் ஊடாக யாழ். மீனவர்களின் கோரிக்கை என மேற்கோள்காட்டி மகஜர் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,



யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினதும் 11 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினதும் தலைவர்களாகிய நாம் கடல் எல்லை வரம்பை மீறி இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடிப்பதனால் எமக்கு ஏற்பட்டு வருகின்ற சேதங்களையும் அதனால் நாம் படும் துயரங்களையும் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

இலங்கையின் வட கடலோரங்களில் பல மீன்பிடி வளங்கள் காணப்படுகின்றன. அங்கு பல்வேறு வகையிலான மீன்கள் , இறால்கள் , கணவாய் இனங்கள் , நண்டு ,சிங்கறால் மற்றும் கடலட்டை போன்றவை பெருமளவில் காணப்பட்டன. இவ் இயற்கை வளங்களும் அங்கு காணப்படும் முருகைக்கற்களும் தாவர வகைகளும்அங்கு வாழும் மீனினங்களும் இனப்பெருக்கத்திற்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்கி கொடுத்துக் கொண்டிருந்தன.

இவ் வளங்கள் எமது மீனவர்கள் பாரம்பரிய கடற்றொழில் முறைமைகளான மாதல் வலை மற்றும் கரைவலை மூலமும் ஆகக் கூடுதலாக 18 அடி நீளமான படகுகளை பாவிப்பதன் மூலமும் எமது இயற்கை வளங்களையும் கடல்வள இனப்பெருக்கத்தையும் பாதிக்காத வகையில் ஒழுங்கான முறையில் மீன்பிடித்து வந்தனர். இதனால் பெருந் தொகையான மீன்களை பிடிக்க கூடியதாக இருந்தது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் பின் தொடர்ச்சியாக நடந்த வன்முறைகள் காரணமாக 1985 ஆம் ஆண்டில் வடக்கின் கடலோரப்பகுதிகளில் வாழ்ந்து வந்தமக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயரத் தொடங்கினர். அவர்களில் பெரும்பாலானோர் மீன்பிடி சமூகத்தை சேர்ந்தவர்கள். அவர்களில் அனேகமானோர் தமிழ் நாட்டிற்கு அகதிகளாக சென்றனர்.

இவ் இடைக்காலத்தில் இந்திய மீனவர்கள் எமது கடல் வலையத்தினுள் எல்லைமீறி வந்து இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடிக்க தொடங்கிய பின்னர்தான் எமது கடல்வளம் அழிக்கப்படுவது தெரியவந்தது.

இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள இரட்டைமடி இழுவைப்படகு முறைமையையும் தங்கூசி வலைகளையும் பாவித்து மீன்பிடிக்கின்றனர்.

இவ் இந்திய இழுவைப்படகுகள் எமது கடல் வளங்களையும் கடல் தாவரங்களையும் மற்றும் முருகைக்கற்களையும் அழிப்பதோடு மட்டுமல்லாமல் கடல் வாழ்உயிரினங்களின் இயல்பான இடப்பெயர்வு முறையினையும் சிதறடித்து வருகின்றனர்.

அது மட்டுமல்லாமல் அவர்கள் எமக்கு வாழ்வாதாரமாக விளங்கும் எமது வலைகளையும் அறுத்து எம்மால் ஈடுசெய்ய முடியாத தேசத்தினை விளைவித்து வருகின்றனர்.

வடக்கே மீன்பிடித் தொழிலை நேரடியாக நம்பி ஏறத்தாழ 18 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன.

இத்தொழில்துறை சார்ந்த மேலும் 10 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. இந்திய மீனவர்கள் இழுவைப்படகினை பாவித்து மீன்பிடிப்பது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளும் வண்ணம் தங்களை வேண்டிக்கொள்கின்றோம். அத்துடன் இவ்வாறான எல்லை கடந்த மீன்பிடியினை தடுப்பதற்கு இந்திய கடலோர படையினரதும் இலங்கை கடற் படையினரதும் கூட்டு ரோந்து ஒன்றினை ஆரம்பிக்க வேண்டும் எனவும் நாம் வேண்டுகின்றோம் என அந்த மகஜரில் குறிப்பிட்டிருந்தது.

இந்த மகஜரின் பிரதி தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-6)

## மின்னல் தாக்கம் காரணமாக உயிரிழப்போர் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி நான்கு பேர் பலியான சம்பவங்கள் மாத்தளை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளன.

மாத்தளை இறத்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்வத்தை பகுதியில் கடந்த 17 ஆம் திகதி பலியாகியுள்ளனர்.

அதேவேளை மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ மற்றும் பிட்டபெத்தர ஆகிய பகுதிகளில் மேலும் மூவர் மின்னல் தாக்கத்துக்கு பலியாகியிருப்பதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் நேற்று முன்தினம் வரையிலான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் மின்னல் தாக்கத்துக்குள்ளாகி 17 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடம் முழுவதும் 51பேர் இவ்வாறு மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள காலநிலை சீர்கேட்டின் காரணமாக நாட்டின் அனைத்து ப்குதிகளிலும் கடும் மழை மற்றும் இடி, மின்னல் அதிகரித்திருப்பதாக தெரிவித் துள்ள வானிலை அவதான நிலையம் இடியுடன் கூடிய மின்னல் வேளைகளில் பொது மக்கள் மைதானம் போன்ற திறந்த வெளிகளில் இருப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கூடுமானவரை மின்னியல் உபகரணங்களின் பயன்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறும் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளது. (அ-2)

## யா/நெல்லியடி ம.ம.வித்தி. புதிய வகுப்புகள் ஆரம்பம்

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாயம் தேசிய பாடசாலையில் க.பொ.த (உ/த) 2012/2014 கல்வியாண்டுக்கான கணிதம் , உயிரியல், கலை, வர்த்தக பிரிவுகளுக்கான புதிய வகுப்புக்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன் கிழமை மு.ப 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

கல்லூரியிலிருந்து விண்ணப்பித்த அனைத்து மாணவர்களும் அன்றைய தினம் வருகை தருவதோடு ஏனைய பாடசாலைகளிலிருந்து விண்ணப்பித்து அழைப் புக் கடிதங்கள் கிடைக்கப்பெற்ற மாணவர்கள் அன்றைய தினம் மு.ப 10 மணிக்கு நேர் முகத் தேர்வுக்கு சமுகமளிக்குமாறு அதிபர் எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார். (அ)

## அரசாங்க பல்கலைக்கழகங்களை வலுவிழக்க செய்ய சிலர் முயற்சி

### பேராசிரியர் சம்மேளனம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்க பல்கலைக்கழகங்களை வலுவிழக்க செய்ய சில தரப்பினர் முயற்சித்து வருவதாக பேராசசிரியர்களின் சம்மேளனம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் எழுத்து மூலம் முறைப்பாடு ஒன்றை கையளித்துள்ளனர்.

அரசாங்க பல்கலைக்கழக கட்டமைப்பில் குழப்பங்களை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதி ஒதுக்கீடு வெகுவாக குறைக்கப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகங்களினால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தசில நிதிகள் உயர்கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி முறைமையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களில் பேராசிரியர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென விடுவிக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

உலகின் ஏனைய நாடுகளில் மொத்த தேசிய உற்பத்தியில் 6 வீதமளவில் கல்விக்கு ஒதுக்கப்படுகின்றது. இலங்கையில் அரசாங்கம் கடந்தாண்டை விடவும் குறைந்தளவில் உயர்கல்விக்காக நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என பல்கலைக்கழக பேராசிரியர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ-2)

# ‘நந்தன’ புதுவருட இராசி பலன்கள்



## மகரம்

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள்,
திருவோணம்,
அவிட்டம் 1, 2 பாதங்கள்

## வெற்றிக் கனியை எட்டிப்பிடிக்க சில வாய்ப்புகள் வந்து அலைமோதும்

**ஐந்தாமிடத்து குரு பார்வை அமைத்துக் கொடுக்கும் புதுவாழ்க்கை!**

**மற்றவர்களின் கருத்தை ஒரு போதும் ஏற்காமல், தன் மனம் கூறும் திட்டப்படியே செயற் படவிரும்பும் மகர இராசி நேயர்களே!**

வருடம் தொடங்கும்போது இராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். சுக ஸ்தானத்தில் அஷ்டமாதிபதி சூரியன் சஞ்சரிக்கிறார். இங்ஙனம் கிரகங்கள் உலா வரும்நிலையில் பிறக்கும் இந்த புத்தாண்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமா? பிறர்போற்றும் அளவிற்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கொடுக்குமா? என்றெல்லாம் நீங்கள் நினைக்கலாம்.

ஆவணி 27 க்கு மேல் உங்கள் எண்ணங்கள் எல்லாம் பூர்த்தியாகும் விதத்தில் கிரகங்களின் சஞ்சாரம் அமைந்து இருக்கிறது. அதுவரை சற்று பொறுமையையும், அமைதியையும் கடைப்பிடிக்கும் சூழ்நிலை உருவாகிறது.

என்ன இருந்தாலும் இராசிநாதனாக சனி அமைந்து வக்ர இயக்கத்தில் இருக்கும்போது, எதிலும் முன்யோசனையுடன் ஈடுபடுவதே நல்லது.

அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதாலும், சில மாதங்களில் செவ்வாயும் சனியும் கூடுவதாலும் உடல் நலத்தில் கூடுதல் கவனம் தேவை. செவ்வாயின் துலாம் இராசி சஞ்சாரத்திற்கு பிறகே ஒவ்வொரு காரியங்களிலும் தடையின்றி நடைபெறும்.

**கடமைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள்!**

உங்கள் இராசிநாதன் சனியை மந்தன் என்று அழைப்பது வழக்கம். மந்த கதியில் இயங்குவதால் மந்தன் என்று சொல்வார்கள். எனவே, அதன் குணத்தைபோல் உங்களுக்கு எதையும் நிதானமாக செய்து முடிவில் வெற்றிபெறுவீர்கள். பழகுவதில் இனிமையாக இருந்தாலும் பேச்சில் கடுமைஉண்டு.

கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்து உரிமைக்கு போராடுவீர்கள். திறமை உங்களுக்கு பளிச்சிடுவது நடுப்பங்கு வயதில்தான்.

உங்களுக்கு இந்த புத்தாண்டு எப்படி இருக்கும் என்பதை பற்றி பார்ப்போம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி 3 வரை!**

ஆண்டின் தொடகத்தில் உங்கள் இராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். எனவே, ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் ஏற்பட்டு அகலும். செவ்வாயும் நீண்ட நாட்களுக்கு அஷ்டமத்திலேயே சஞ்சாரம் செய்கிறார்.

செவ்வாயின் ஆதிக்கம் துலாம் இராசிக்கு வரும் வரை சற்று பொறுமை யைக் கடைப்பிடிப்பது நல்லது. அதுவரை காரியங்களில் தாமதங்களும், கடமைகளை நிறைவேற்ற முடியாமல் தத்தளிக்கும் சூழ்நிலையும் ஏற்படலாம். துர்க்கை வழிபாடு துயரங்களை தீர்க்கும்.

**குருப் பெயர்ச்சி விரயங்களை ஏற்படுத்துமா?**

நவக்கிரகங்களில் சுப கிரகமாக விளங்குவது குருவாகும். அந்த குரு உங்கள் இராசியை பொறுத்தவரை 3, 12 க்கு அதிபதியாக விளங்குகிறார். சகாய ஸ்தானத்திற்கும், விரய ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்கும் குரு பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது, சொத்து விற்பனையால் இலாபத்தை கிடைக்க செய்வார். சொந்த- பந்தங்களின் கருத்து வேறுபாடுகள் அகலும்.

வரவு- செலவுகளில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். வாரிசுகளுக்கு திருமணம் நடத்திப்பார்க்கும் சூழ்நிலை உருவாகும். குருவின் ஆதிக்கம் சிறப்பாக செயற்பட குரு பகவான் கோவில்களுக்குச் சென்று வழிபட்டு வருவதுநல்லது. விரயாதிபதியாக குரு விளங்குவதால், இந்த காலத்தில் கூடுதல் விரயங்களை கொடுக்க நேரிடலாம்.

வியாழ திசை, வியாழ புத்தி நடபப்வர்களும், வியாழக்கிழமை பிறந்தவர்களும் குரு பரிகாரம் செய்து கொள்வதுநல்லது. அதோடு, இராகுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் சர்ப்ப சாந்தியையும், குருவாரத்தில் யோகம்தரும் நட்சத்திர நாளில் செய்தால் குழப்பங்களில் இருந்து விடுபடஇயலும்.

குருவின் பார்வை உங்கள் இராசியில் பாதிவதோடு, 9, 11 ஆகிய இடங்களிலும் பதிவாகிறது. குருவின் பார்வை 1, 9, 11 ஆகிய இடங்களில் பதியும்போது, உடல் ஆரோக்கியத்தில் உள்ள குறைபாடுகள் அகல, மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்க சில வாய்ப்புகள் வந்து அலைமோதும். கன்னி இராசியில் செவ்வாயும், உங்கள் இராசிநாதன் சனியும் இணையும் நேரத்தில் குருவின் பார்வை இருப்பதால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது.

சொத்து பிரச்சினைகள் சுமூகமாக முடியும். தந்தை வழியில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். பகை பாராட்டாமல், கோபப்படாமல் பக்குவமாக நடந்துகொள்வதன் மூலம், பல காரியங்களை நீங்கள் முடித்துக் கொள்ளஇயலும். குருவின் பார்வை பதினோராம் இடத்தில் பதிவதால், பொருளாதாரநிலை உயரும்.

**செவ்வாய் சனி சேர்க்கை காலம்!**

வரும் நந்தன ஆண்டில் செவ்வாய், சனி சேர்க்கை காலம்தான் மிகவும் யோசித்து, அருகில் உள்ளவர்களிடமும், ஆன்மீக பெரியவர்களிடமும் ஆலோசனைகளைக் கேட்டு பக்குவமாக நடந்துகொள்ள வேண்டிய நேரமாகும்.

இரண்டு பகை கிரகங்கள் உங்கள் இராசிக்கு ஒன்பதாடமிடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் அல்லவா ஒன்று சேருகிறார்கள்.

எனவே, மனக்குழப்பம் அதிகரிக்கும். இருந்தாலும், குருவின் பார்வை இந்த கூட்டுக்கிரகத்தின்மீது பதிவதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது.

**துயரங்களை போக்குமா துலாம் இராசிச்சனி!**

உண்மையிலேயே துலாம் இராசியில் சனி சஞ்சரிக்கும்போது, துயரங்களை போக்கும். தொட்ட காரியங்களில் வெற்றிபெற வைக்கும். ஆவணி 27 ஆம்திகதி முதல் அற்புத பலன்கள் உங்களைத் தேடி வரப்போகின்றது. சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். அனுமன் வழிபாடு உங்களுக்கு ஆனந்தம் வழங்கும்.

**வக்ர குரு வளர்ச்சியைக் கொடுக்குமா?**

புரட்டாதி 26 ஆம் திகதி முதல் தை 24 ஆம் திகதி வரை இடப இராசியில் குரு வக்ரம் பெறுகிறார். இந்தக் காலம் உங்களுக்கு நற்பலன்களை வழங்கும் காலம் என்றே சொல்லலாம். காரணம், 3, 12 க்கு அதிபதியான குருபகவான் வக்ரம் பெறுகிறார். 12 க்கு அதிபதி வக்ரம் பெறும்போது, தொட்ட காரியங்களில், திட்டமிடாது செய்தால் வெற்றி கிடைக்கும். திட்டமிட்டுச் செய்யும் காரியங்களில் ஓரளவே வெற்றி கிட்டும். சகோதர வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நல்ல முடிவிற்கு வரும்.

**பாம்பு கிரக பெயர்ச்சி பக்கபலமாக இருக்குமா?**

கார்த்திகை 17 ஆம் திகதி துலாம் இராசியில் இராகுவும், மேஷ இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்த வரை 4, 9 ஆகிய இடங்களில் அரவு கிரகங்கள் சஞ்சரிக்கும்போது சில நல்ல மாற்றங்கள் கொடுக்கும் என்றாலும் சுகக்கேடுகளையும் கொடுக்கும்.

விலங்குகளாலும், விஷஜந்துகளாலும் ஆபத்துகள் ஏற்பட்டு அகலும். கடன் சுமையால் சில சொத்துக்களை விற்க நேரிடலாம்.

குறிப்பிட்ட ஸ்தானங்களில் சர்ப்ப சாந்திகளை முறையாகசெய்து, இராகு- கேதுக்களை திருப்திப் படுத்துவதால்தான் இருந்த தாமதம் அகலும். திடீர் தாக்குதல்களிலிருந்து விடுபடுவீர்கள்.

**வக்ர சனியால் வளர்ச்சிஏற்படுமா?**

சித்திரை 1 ஆம்திகதி முதல் ஆனி 6 ஆம் திகதி வரையிலும், பிறகு மாசி 4 ஆம் திகதி முதல் பங்குனி 31 ஆம் திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசி அடிப்படையில் இராசி நாதனாகவும், தனாதிபதியாகவும் சனி விளங்குகிறார். எனவே, எதையும் யோசித்தும், பூஜித்தும் செய்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் மீண்டும் பழைய பிரச்சினை தலை தூக்கலாம். குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கொள்கைப்பிடிப்போடு செயற்பட இயலாது. கடுமையாக முயற்சித்தும் கடைசி நேரத்தில் சில காரியங்கள் கைநழுவிப் போகலாம்.

இதுபோன்ற வக்ர காலத்தில் வள்ளல்களின் உதவியாலோ, வங்கிகளின் உதவியாலோ கடன் பெற்று வீடுகட்டுதல் போன்ற சுபச்செலவுகளை மேற்கொள்ளலாம். உறவினர் பகை ஏற்படாம் பார்த்துக்கொள்வது நல்லது. எள் தீபம் ஏற்றி இரு கரம் கூப்பி சனி பகவானை வழிபடுவது தான் சாலச்சிறந்தது.

**வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!**

சனிக்கிழமைதோறும் அருகில் உள்ள ஆலயத்திற்குச் சென்று சனிபகவானை வழிபட்டு வருவதோடு, ஆஞ்சநேயர் கோவிலுக்குச் சென்று, வயதுக்கேற்ற மாலை அணிவத்து வழிபாடு செய்து வாருங்கள், விநாயகரையும் வழிபட்டு சொல்லை செயலாக்கிக் காட்டுங்கள்.

நந்தன வருடம் மகர ராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத் தொடக்கத்திலேயே இராசி நாதன்

சிவல்புரி சிங்காரம்

சனி வக்ரம் பெறுவதால் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். எதையும் குடும்ப பெரியவர்களை கலந்து ஆலோசித்து செய்வதுதான் நல்லது. கோபத்தை குறைத்த கொள்ளுங்கள். விரயங்கள் ஆதிகரிக்கும் வருடமாகவே இந்த வருடம் இருக்கிறது. ஆவணி மாதம் வரை செவ்வாயின் ஆதிக்கமும், சனியின் ஆதிக்கமும் சிறப்பான நிலையில் இல்லை, எனவே, பொறுமையை கடைப்பிடித்து பெருமையைக் காப்பது நல்லது. ஆவணிக்கு பிறகு உங்கள் எண்ணங்கள் ஈடெறும். எதிர்பாராத திருப்பங்கள் உருவாகும். பொன்னான வரன்கள் வந்து சேர்ந்து புதிய வாழ்க்கை மலரும். உத்தியோகஸ்தர்களுக்கு உன்னத பதவி வாய்க்கும். அத்தியாவசிய பொருட்களையும், ஆடம்பரப்




பொருட்களையும் வாங்கி சேர்ப்பீர்கள். அடுத்தவர்களுக்காக வாங்கி கொடுத்த தொகையும் வந்து சேரும். சர்ப்ப சாந்தி பரிகாரங்களையும் முறையாக மேற்கொண்டால் தகுந்த வாழ்க்கைப் பாதை உருவாகும்.

(தொடரும்)

# இலங்கை குறித்த ஸ்டீபன் ராப்பின் அறிக்கைக்கு ச.ம.உ. அமைப்பு அதிருப்தி

(கொழும்பு)

**இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்பாக அமெரிக்க பாராளுமன்றத்தில் போர்க்குற்ற விவகாரங்களை கையாளும் தூதுவர் ஸ்டீபன் ராப் சமர்ப்பித்துள்ள அறிக்கை குறித்து சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.**

ஸ்டீபன் ராப் தலைமையிலான பூகோள குற்றவியல் நீதிப் பணியகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையில் நல்லிணக்க ஆணைக்குழு பதிலளிக்க தவறிய நம்பகமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் சுதந்திரமான விசாரணை பொறிமுறை ஒன்றை உருவாக்கி விசாரிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் இந்ததப் பரிந்துரையை கடுமையாக விமர்சித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சுதந்திரமான சர்வதேச விசாரணை பொறிமுறை ஒன்றை உருவாக்க அமெரிக்கா ஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்பு சபையின் இலங்கை தொடர்பாக வல்லுநர் ஜிம் மக் டொனால்ட்,

போர்க்குற்றங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் இலங்கையின் நீண்டகால வரலாற்றின் உண்மையான பொறுப்புக் கூறலுக்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க தவறியுள்ளதாகவும் இராஜாங்க திணைக்கள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.


போர்க்குற்றங்கள் தொடர்பாக இலங்கை நீதியை வழங்கும் என்று இனிமேலும் எதிர் பார்த்துக் கொண்டிருப்பதற்கு பதிலாக இரு தரப்பும் மேற்கொண்ட மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கு முதற்படியாக சர்வதேச சுதந்திர விசாரணைக்குழுவை உருவாக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

அதேவேளை மனித உரிமைகள் கண்காணிப்பகமும் சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஐ.நா. நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் படி சுதந்திரமான அனைத்துலக போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

அத்துடன் அமெரிக்காவை தளமாக கொண்ட தமிழர்களின் இனப்படுகொலைக்கு எதிரான அமைப்பும் அமெரிக்க பாராளுமன்றத்தில் ஸ்டீபன் ராப் சமர்ப்பித்த அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. (அ-2)

# வாகன விபத்தில் இ.ஒ.கூட்டுத்தாபன சந்தைப்படுத்தல் பணிப்பாளர் பலி



அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளரும் சிரேஷ்ட அறிவிப்பாளருமாகிய நூரானியா ஹசன் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ரம்பாவ பகுதியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்த சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகளை கண்காணிப்பதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் பயணித்த வாகனமே ரம்பாவ பகுதியில் லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் நூரானியா ஹசன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மேலும் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# இந்திய வீட்டுத் திட்டத்தின் பின்னடைவிற்கு இந்திய அரசாங்கமே காரணம் - ஆளுநர்

(கொழும்பு)

இந்திய அரசாங்கம் இலங்கையில் மேற்கொண்டுவரும் வீட்டுத்திட்ட பணிகளுக்கு அந்த அரசாங்கமே காரணம் என வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், 6 இலட்சம் ரூபா வீட்டுத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட போதும் வீடு ஒன்றரை இலட்சத்திலேயே வீடு கட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை யாழ். நகரிலுள்ள விடுதியொன்றில் நடைபெற்ற மாகாண அதிகாரிகளுடனான சந்திப்பை முடித்துக் கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வீட்டுத்திட்ட பணிகள் தாமதமாவதற்கு இலங்கை அரசு ஒரு காரணமல்ல. இந்திய அரசாங்கமே அதற்கு காரணமாகிறது. இலங்கை அரசாங்கம் காணி மற்றும் கண்ணிவெடியகற்றல் போன்றவற்றை உரியமுறையில் செய்து கொடுத்துள்ளது.

அதேபோல் வீட்டுத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதியில் நிறையவே சுரண்டல் இடம் பெற்றுள்ளது. 6 இலட்சம் வீட்டுத்திட்டத்திற்கு வழங்கப்பட்டாலும் ஒன்றரை இலட்சத்திலேயே வீடு கட்டப்பட்டுள்ளது.

இதனால் அவை வாழ்வதற்கு ஏற்புடையதாக இல்லாமல் இருக்கின்றது. எதிர்வரும் காலத்தில் வீட்டுத்திட்டத்திற்கான நிதியை அந்த மக்களிடமே வழங்குவது பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் மக்கள் தமக்கு விரும்பியவாறு வீடுகளை கட்டிக் கொள்ள முடியம்.

தற்போது கட்டப்படும் வீடுகள் முழுவதும் ஒரே மாதிரியானவையாகவுள்ளன. எனவே, இந்திய வீட்டுத்திட்டத்தின் பின்னடைவிற்கும் சீரின்மைக்கும் இந்திய அரசே காரணம் என அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (அ-2)

# புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

(கிளிநொச்சி)

ஸ்ரீலங்கா இன்ஷ்ரன்ஸ் கிளிநொச்சிக் கிளையில் முற்பனக் கொடுப்பனவுத் திட்ட த்தில் இணைந்த தரம் 5 மாணவர்களுக்கான முதலாவது புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை இன்று வெள்ளிக் கிழமை 9 மணிக்கும் பகல் 12 மணிக் குமென இரண்டு பிரிவுகளாக நடை பெறும் என் வாடிக்கையாளர்களுக்கு கிளி நொச்சிக்கிளை முகாமையாளர் அ.றஞ்சித் அறிவித்து ள்ளார். (அ)

# இளம் குடும்பஸ்தர் குத்திப் படுகொலை

(கொழும்பு)

திருகோணமலை பேருந்து நிலையத்தை அண்மித்த நகரப்பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கத்தியால் குத்தி நேற்று முன் தினம் இரவு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அப்பகுதி தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை பஸ் நிலையத்தை அண்மித்த எரிபொருள் நிலையத்திற்கு அருகாமையால் செல்லும் வீதிப்பகுதியிலேயே இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஈஸ்வரதாஸ் கேதீஸ்வரன் என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார். படுகொலை செய்யப்பட்டவரது சடலத்தின் அருகே கிரிக்கெட் மட்டைகள் மற்றும் விக்கெட் கம்புகள் காணப்படுவதாக அயலவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-2)

# வறுமையின் உச்சக்கட்டம்; சங்கிலி அறுத்த மாணவி

(கொழும்பு)

தங்கச் சங்கிலியை திருட முயற்சித்த பல்கலைக்கழக மாணவி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கம்பளை பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பிச் செல்ல முயற்சித்த பல்கலைக்கழகமொன்றில் இரண்டாம் ஆண்டு கல்வி பயிலும் மாணவியை முச் சக்கரவண்டி சாரதிகள் மடக்கிப் பிடித்துள்ளனர். குறித்த மாணவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த மாணவி கத்தியை காட்டி பெண்ணை மிரட்டி சங்கிலியை பறித்து சென்றுள்ளார்.

வங்கியில் பெற்றுக் கொண்ட வீட்டுக் கடனை அடைப்பதற்காக இவ்வாறு தங்கச் சங்கிலியை திருடியதாக மாணவி ஆரம்பகட்ட விசாரணைகளின் போது ஒப்புக் கொண்டுள்ளார். குறித்த மாணவி மிகவும் வறுமையான நிலையில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 106

மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் 1941 ஆம் ஆண்டு முன்னணிப் போர்முனைக்குச் செல்வதற்காக செம்படையினர் சீருடையுடன் செய்த அணிவகுப்பை 70வது ஆண்டில் நாடு நிவைுகூறும் விதமாக 2011 -ல் சேவையிலுள்ள இராணுவத்தினர் செய்த ஆணிவகுப்புகள்





ஏப்ரில் 2ஆம்திகதி சோவியத்அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில், "ருமேனியாவின் ஏதாவது ஒரு பகுதியைப் பிடிக்கும் நோக்கமோ அல்லது ருமேனியாவில் நிலவும் சமூக அமைப்பை மாற்றும் நோக்கமோ தனக்கு இல்லையென்றும் சோவியத் துருப்புகள் ருமேனியாவினுள் நுழைந்ததை முற்றிலும் யுத்த அவசியமும் எதிரி தொடர்ந்து காட்டிவரும் எதிர்ப்பும்தான் கட்டளையிடுகின்றன" என்றும் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது.

சோவியத்துருப்புகள் ருமேனியப் பரப்பினும் காலடி எடுத்து வைத்ததும் சோவியத் அரசாங்கத்தின் அறிக்கையும் ருமேனிய மக்கள் மற்றும் இராணுவத்தின் யுத்த எதிர்ப்பும் பாசிச எதிர்ப்பு மனநிலைகளும் வலுவடைந்ததன் மீது பெரும் செல்வாக்கு செலுத்தின; நாட்டில் தேசியவிடுதலை இயக்கம் எழுச்சிபெற புதிய உந்து சக்தியாக அமைந்தது. ரோமினியா லிபெரேயே என்ற தலைமறைவுப் பத்திரிகை சோவியத் அறிக்கையைப் பற்றி பின்வருமாறு எழுதியது. "தீர்மானகரமான தருணம் வந்து விட்டது, இனி காத்திருக்கக் கூடாது. ருமேனிய மக்கள் தமது எதிர்காலத்தை தம் கரங்களில் எடுத்துக்கொண்டு யுத்தத்திலிருந்து வெளியேறுவதற்காகப் போராட வேண்டும்."

ருமேனியக் கம்யூனிஸ்ட் க்ட்சி, பாசிசத்திற்கு எதிராகவும் சோவியத் எதிர்ப்பு யுத்தத்தை நிறுத்தக் கோரியும் உறுதியாகப் போராடுமாறு மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. இதன் முன் முயற்சியால், தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய தொழிலாளர் முன்னணி, நாட்டின் தேசபக்த சக்திகள் அனைத்தையும் மேற்கொண்டு ஒருமுனைப் யுத்தப்பாதாளத்தில் தள்ளினான்- 1944 வசந்த காலத்தில் புதிய வெகுஜன அணிதிரட்டலை நடத்தினான் ருமேனிய மக்கள் எதிரிகள் ஹிட்லருக்கு முன்போன்றே பலி யாடுகளாகப் போர் வீரர்களையும் பல்வேறு போர்த்தந்திர சாதனங்களையும் அனுப்ப முடிவு செய்தனர்.

ருமேனிய மக்கள் யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். ஏற்கெனவே கூறப்பட்டபடி ஸ்டாலின்கிராட் அருகேயும் கிரீமியாவிலும் பாசிச ஜேர்மனியத்துருப்புகளின் விதியை ருமேனிய இராணுவமும் பகிர்ந்து கொண்டது. ருமேனியாவின் தேசியப் பொருளாதாரம் வீழ்ச்சிய டைந்தது. இவையனைத்தும் நாட்டில் பாசிச எதிர்ப்பு இயக்கம் வளர்ச்சியடைய பெரும் உந்து சக்தியை அளித்தன.

இதனிடையே வெகுஜனங்களின் இரத்தத்திலிருந்து பிளிந்தெடுத்த பெரும் மூலதனத்தால் ஆதாயம் பெற்ற முதலாளிகளும் நிலச்சுவாந்தர்களும் புதிய எஜமானனாகிய அமெரிக்க- பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுக்கு இணங்கிப்போக முடிவு செய்தனர். மணியு தேசிய த்சரான் கட்சியும் பிரத்தியானு தேசிய்-லிபரல் கட்சியும் ருமேனிய முதாலாளிகள், நிலச்சுவாந்தர்களின் நலன்களைப் பிரதிபலித்தன. இக்கட்சிகள் அண்ட னேஸ்குவின் பாசிச அரசாங்கத்தின் .ஒப்புதலோடு, அமெரிக்க- பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுடன் தனி சமாதான உடன்படிக்கை செய்து கொள்வது சம்பந்தமாக பேச்சு வார்ததைகளை நடத்துவதற்காக கெய்ரோவிற்கு தம் பிரதிநிதியை அனுப்பின. பாசிச ஜேர்மனிக்கு எதிரான யுத்தத்தில் ருமே

மேற்கு உக்கிரேன் விடுவிக்கப்பட்டதானது உக்ரேன் மக்களுக்கும் சோவியத் யூனியனின் மற்ற மக்களினத்தவருக்கும் ஒரு மாபெரும் வைபவமாக அமைந்தது. இதை ஒட்டி அந்நாட்களில் உக்ரேனில் நடைபெற்ற விழாக்களிலும் கூட்டங்களிலும் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டதில் தாராளமான உதவியும் ஆதரவும் அளித்ததற்கான புகழ்மிக்க சோவியத் போர்வீரர்களுக்கும் சோதரக் குடியரசுகளின் மக்களுக்கும் ஒருமனதாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

லிவோவ்- சண்டமீர் நடவடிக்கை அளிவில் பெரியதாக இருந்தது. பிரதான தாக்குதலின் திசை மிகத்திறமையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்திசையில் சக்திகள் பெருமளவில் குவிக்கப்பட்டன. நன்கு பிளந்து சென்று, தொடர்ந்து முன்னேறுவதற்காக லிவோவ் திசையில் டாண்ட்கிப் படைகள் குறுகலான இடைவெளியில் (4-6 கி.மீ. அகலம்) அனுப்பப்பட்டன. இந்நடவடிக்கையின் இன்னுமொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், எதிரியை முனைப்போடு சுற்றிவளைத்து, நடவடிக்கையின் போக்கில் முயற்சிகளை வேறு திசைக்கு மாற்றியதும், போகிறபோக்கில் பரந்த போர்முனையில் பிடித்து கைவசம் வைத்திருந்ததும் ஆகும். வேவுபார்த்தல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவிதம் குறிப்பிடத்தக்கதாகும். எதிரி ராவா-ரூஸ்கயா திசையில் பின்வாங்கிச் செல்வதை உரிய நேரத்தில் இது கண்டுபிடித்ததால்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

சோவியத் துருப்புகளால் விரைவாக, பீரங்கிப்படையின் பூர்வாங்கத் தாக்குதல் இன்றியே எதிரி தற்காப்பின் பிரதான மண்டலத்தைக் கடக்க முடிந்தது.


நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதில் விமானப் படை பெரும் பங்காற்றியது. எதிரியின் தற்காப்பை பிளப்பதில் இது துருப்புகளுக்குப் பெரிதும் உதவியது. பிளவினுள் மொபைல் யூனிட்டுகளை அனுப்ப வகை செய்தது. எதிரியைத் துரத்திச் செல்கையில் இது கூடச்சென்றது, சண்டமீர் தாக்குமுனைக்காக நடந்த போராட்டத்தில் தரைப்படைகளுக்கு ஆதரவளித்தது.

### தென்கிழக்கு ஐரோப்பாவில் பாசிசக்கூட்டின் தோல்வி

1944 வசந்தகாலத்தில் சோவியத் துருப்புகள் தெற்கே பாசிச ஜேர்மனிய இராணுவத்தை தோற்கடித்து பெரும்வெற்றி அடைந்தன. மேற்குக் கரையோர உக்ரேனை விடுவித்தன. வடக்கு ருமேனியாவினுள் நுழைந்தன. இராணுவ நடவடிக்கைகள் ருமேனியப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டதையடுத்து 1944ஆம் ஆண்டு படுத்துவதற்கான அடிப்படையாக விளங்கியது.

இதனிடையே ஆட்சியிலிருந்த பாசிச சர்வாதிகாரி அண்டனேஸ்கு- னியா கலந்துகொள்ள வேண்டுமென்று கோராமல் ஆட்சியை அண்டனேஸ்கு வடமேவிட்டு வைத்த வால்-ஸ்ட்ரீட் சிட்டி பணமுதலைகள்

ஜேர்மனியர்களின் நகரில் காணப்படும் மிகப்பெரிய கல்லறையில் அண்மைக்காலத்தில் நிகழ்ந்த அஞ்சலிக் கொண்டாட்டம் ஒன்றில் 1941-ல் 2ஆம் உலக யுத்தத்தின்போது காணாமற்போன 70 ஜேர்மனிய போர்வீரர்களின் ஞபகார்த்தமாக கொண்டுவரப்பட்ட சவப்பெட்டிகள்



இவன்தான் ருமேனிய மக்களை இரத்தக்களரியான, அநியாயமான ருமேனியாவுடனான இத்தகைய சமரசத்திற்கு ஒப்புதல் அளித்தனர்.


(தொடரும்)

# கணனியில் யுஸ்பி பொட்ஐ செயலிழக்கச் செய்தல்


(தொடர்ச்சி......)

**மாற்று செயற்பாட்டு அமைப்பு -லினிக்ஸ்**

லினிக்ஸ் என்ற சொல்லை ஏதோ கணனியில் கரை கண்டவர்களுக்கு மட்டும் தான் என்ற நினைப்பை பெருமளவில் மாற்றி உதவியது உபுந்து லினிக்ஸ் வெளியீடு. அதே போல நீண்ட காலமாக விண்டோஸை நம்பி மட்டுமே கணனிகளை வெளியிட்டு வந்த HP, Dell நிறுவனங்களும் உபுந்துவுடன் கணனிகளை வெளியிட ஆரம்பித்தது. நோட்புக் கணனிக்கு சிறந்தது. உபுந்துதான் என்று பலரும் கருதுமளவிற்கு சிறப்பான வசதிகளுடன் தன்னை காலத்துக்கு காலம் மேம்படுத்தி இலவசமான சிறந்த இயங்குதளமாக உபுந்து வளர்ந்து வருகிறது.




நீங்கள் உபுந்துவுக்கு மாற விரும்பினால் அல்லது உபுந்து பயன்படுத்துபவராக இருந்தால் உங்களுக்கு இந்த Ubuntu pocket quide and reference என்கின்ற இந்த புத்தகம் பயனுள்ளதாக இருக்கும்.




**கணனி பாதுகாப்பு பற்றி எமக்கு தெரிந்ததும் தெரியாததும்**

**1. ஆன்டி வைரஸ் (Anti Virus):** அப்ளி கேஷன் சொப்ட்வெயர் இன்றைய அளவில் கிடைத்துள்ள வைரஸ் புரோகிராம்களில் காணப்படும் சிக்னேச்சர் என்னும் கோடிங் முறையின் அடிப்படையில் ஹர்ட்டிஸ்க் கினைஸ் கான் செய்து அதில் ஏதேனும் வைரஸ், ட்ரோஜன், வோர்ம் ஆகியன இருந்தால் அந்த புரோகிராம்களை கண்டறிந்து அழிக்கும். அல்லது குவாண்டைன் என்னும் தனி இடத்திற்கு அனுப்பும். நமக்கும் எச்சரிக்கை கொடுக்கும். நீக்க முடியவில்லை என்றால் ஹார்ட் டிஸ்கில் இருக்கும் இடத்தை காட்டி எச்சரிக்கை செய்திடும்.

**2.தாக்குதல் (Attack):** அனுமதி பெறாத ஒ்ரு நபர் அல்லது ஒரு புரோகிராம் கணனியை தன் கட்டுப்பாட்டில் பல்வேறு காரண காரியங்களுக்காக் கொண்டு வரும் செயற்பாடு.

**3.பின்பாதை (Back Door):** இதனை சில சமயங்களில் ட்ரேட் டோர் (Trap Door) எனவும் அழைக்கின்றனர். அப்ளிகேஷன் புரோகிராமில் புரோகிராமை வடிவமைத்தவரால் அமைக்கப்படும் வழி. புரோகிராமில் ஏதேனும் பிழை இருந்தால் இந்த வழியாக புரோகிராமின் வரிகளை அடைந்து செப்பனிடுவார். ஆனால், இது போன்ற வழி இருப்பது அடுத்தவருக்கு தெரிந்தால் புரோகிராம் செயற்படும் தன்மையையே அவர் மாற்றிவிடலாம்.


**4.பயர்வோல் (FireWall):** இது ஒரு சொப்ட் வெயர் அல்லது ஹார்ட்வெயர். உங்கள் கணனியின் நெட்வோர்க்கை காப்பாற்றும் வசதி. இன்டர்நெட் அல்லது நெட்வோர்க் மூலமாக அனுமதியின்றி உங்கள் கணனிக்குள் வரும் புரோகிராமினை தடுத்து நிறுத்தும். உங்களுக்கும் எச்சரிக்கை தரும். சில வேளைகளில் உங்கள் அனுமதியை பெற்று அந்த புரோகிராமினை அப்போதும் அடுத்து வருகையிலும் அனுமதிக்கும்.

**5. ஹைஜாக்கிங் (Hijacking):** கணனியின் செயற்பாட்டில் குறுக்கீடு செய்து இயக்கத்தினை முடக்குவது. கணனி பயன்படுத்திக் கொண்டிருக்கும் நீங்கள் சற்று வெளியே செல்கையில் கணனியை கைப்பற்றி பயன் படுத்துவதனையும் இந்த வகையில் சேர்க்கலாம். அடுத்த வகை இன்டர்நெட் வழியாக நுழைந்து கணனியின் இயக்கத்தை தன்கையில் எடுத்துக் கொள்வது.

**6. ஹோல்(Hole):** உங்கள் சிஸ்டத்தின் பலவீனமான ஓர் இடம். உங்கள் சிஸ்டம் அல்லது அப்ளிகேஷன் சொப்ட்வெயரில் இருக்கலாம். இதன் வழியாக உங்கள் அனுமதியின்றி ஒருவர் அனுப்பியுள்ள புரோகிராம் கணனி உள்ளே வரலாம்.

**7. எச்.ரி.ரி.பி.எஸ் (HTTPS Hyper text Transfer Protocol Secure):** இணையத்தில் உள்ள புரோட்டோகால் அம்சங்களில் இது எச்.டி..டி.பியில் ஒரு வகை. தனித்தன்மை கொண்ட தனிநபர் அல்லது நிறுவனங்கள் சார்ந்த முக்கிய தகவல்கள் பரிமாறப்படும். தளங்களில் இந்த வகை புரோட்டோகால் வகை அமைக்கப்படும்.

**8. கீ (Key):** விண்டோஸ் ரெயிஸ்ரரியில் விண்டோஸில் அமைக்கப்படும் செட்டிங்ஸ் சரியாக அமைந்திட உதவுபவற்றை இப்படிக் குறிப்பிடுவார்கள். புரோகிராம் ஒன்று கணனியில் நிறுவப்படும் போதும் நீக்கப்படும் போதும் இந்த கீகள் மாற்றப்படும். உங்கள் கணனியில் வைரஸ் நுழைந்து இந்த கீகளில் உங்கள் அனுமதியின்றி மாற்றங்கள் செய்திட்டால் கணனி இயக்கம் பிரச்சினைக் குள்ளாகும்.




**9. கீலாக்கர்ஸ் (Keyloggers):** அடிப்படையில் இது புரோகிராம் ஒன்றில் கீகளின் அழுத்தம் பயன்பாட்டிற்காக பதியப்படுவதனை குறிக்கும். ஆனால், இப்போதோ கெடுதல் விளைவிக்க எண்ணும் நபர்கள் கணனி ஒன்றில் அழுத்தப்படும் கீகளை பதிவு செய்திட ஸ்பைவேர் புரோகிராம்களை அனுப்பி கீகளின் அழுத்தங்களை பெற்று அதன் அடிப்படையில் இரகசியமான தகவல்களை (பாஸ் வேட் போன்ற) பெற்று பின் அவற்றை பயன்படுத்தி நாசம் விளைவிக்கும் எண்ணத்தில் இதனைப் பயன்படுத்துகின்றனர்.





**10.@mm:** வைரஸ் ஒன்றின் இறுதியில் அடையாளம் காணப்படும். எடுத்துக் காட்டாக W32netsky@mm. இந்த அடையாளம் மாஸ் மெயிலர் என்பதை குறிக்கிறது. மாஸ் மெயிலர் என்பது வைரஸ் ஒன்றின் பெயர். இதனால் பாதிக்கப்படும் கணனிகளில் உள்ள ஹாட் டிஸ்கின் பல பகுதிகளிலிருந்து மின்னஞ்சல் முகவரிகளை பெற்று அவை அனைத்துக்கும் தன் செய்தி அஞ்சலை அனுப்பும். பின் அனுப்பப்பட்ட கணனியில் பரவும். சிலவற்றில் ஒரு எம் (m)மட்டும் காணப்படும் . அது மெயிலர் என்பதை மட்டும் குறிக்கிறது. அந்த வகை மெயிலர் வைரஸ் தான் பரவுவதற்கு ஒரு ஈமெயிலின் துணையைக் கொள்ளும்.

**11. பே லோட் (Payload):** இது வைரஸ் ஒன்றின் பகுதியாகும். இது எப்போதும் அழிவைத்தரும் செயல்களில் இறங்காது. ஆனால், தேவையில்லாத ஒன்றாகும்.

**12. ரெப்ளிகேஷன் (Replication):** பேசனல் கணனி ஒன்றை ஒரு வைரஸ் பாதித்தவுடன் அது தன்னையே கொப்பி செய்து கொள்ளும் பணியில் இறங்கும். பின் அந்தக் கணனியின் ஏனைய பாகங்களையும் பாதிக்கும். ஈமெயில் முகவரிகள் மூலமாக மற்றக் கணனிகளையும் பாதிக்கும். அடுத்த கணனியை அடைந்தவுடன் இதேவேலையை மேற்கொள்ளும். இவ்வாறு சில நிமிடங்களில் நூற்றுக்கணக்கான கணனிகளில் பரவி கெடுதல் வேலையை நடத்தும். தன்னைத் தானே பிரதி செய்திடும் வேலையை இந்த சொல் குறிக்கிறது.

**13. வேரியன்ட் (Variant):** வைரஸ் புரோகிராம் ஒன்றில் ஒரிஜினல் வைரஸ் புரோகிராம் வரிகளை போன்று அமைக்கப்படுபவை இப்படிக் குறிக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் ஆன்டி வைரஸ் தொகுப்புக்களின் பணியை திசை திருப்பும் வேலையை இவை மேற்கொள்கின்றன.





**14. வைரஸ் டெபனிஷன்ஸ் பைல் (Virus Definition File) :** ஆன்டி வைரஸ் புரோகிராம்களால் பயன்படுத்தப்படும் டேட்டா பைல்களாகும். இவற்றின் மூலம் தான் ஏற்கனவே உலவி வரும் வைரஸ் புரோகிராம்கள் கண்டறியப்படுகின்றன.

(முற்றும்)




# சிறுவர் அரங்கம்

## வைஜெயந்தி எடுத்த முடிவு



மன்னர் நரேந்திரவர்மன் ஒரே செல்வப் புதல்வியர்ன வைஜெயந்தி தன் சிறுவயதிலேயே தாயை இழந்த பின்பு அவளை மன்னர் மிகவும் கண்ணும் கருத்துமாய் வளர்த்தார். எந்த ஒரு விடயத்திலும் அவள் மனம் கோணாதவாறு அவள் விரும்பியவாறு நடந்து வந்தார். இயற்கையிலேயே மிக அழகான வைஜெயந்தி திருமணப்பருவத்தை எட்டினாள்.

ஒரு நாள் வைஜெயந்தி தன் தோழிகளுடன் மலை மீதிருந்த இராஜேஸ்வரி கோயிலுக்கு சென்றாள். தரிசனம் முடிந்த பின்பு தோழிகள் கோயிலை விட்டு வெளியேறி மலையில் இருந்து இறங்க வைஜெயந்தி கோயிலைப் பிரதட்சிணமாகச் சுற்றி வந்தாள்.

அப்போது கோயிலின் பின் புறம் ஒரு சிற்பி பாறையில் செதுக்கிக் கொண்டிருந்த சிற்பம் அவளை மிகவும் கவர்ந்தது. மிக அழகான சிற்பம் என்று அவள் பாராட்ட அந்த சிற்பி அவளைத் திரும்பி பார்த்தான்.

நான் இளவரசி வைஜெயந்தி என்று அவள் கூறியதும் அவன் அவளை தலை குனிந்து வணங்கி வணக்கம் தேவி என் பெயர் விஜயன் என்றான்.

நீங்கள் என்னுடைய உருவத்தையும் சிலையாக வடிப்பீர்களா? என்று வைஜெயந்தி கேட்டாள் .அதை என்னுடைய பாக்கியமாகக் கருதுகிறேன் தேவி உங்கள் சிற்பத்தை பளிங்கில் செதுக்கித் தருகிறேன்.

ஆனால் அதற்கு ஒரு மாதம் ஆகும் வாரத்தில் ஒரு நாள் நீங்கள் என் முன் ஒரு மணி நேரம் வந்து அமர வேண்டும் என்றான் விஜயன். ஆகட்டும் கட்டாயம் வருகிறேன் ஆனால் இந்த விடயம் நமக்குள் ரகசியமாக இருக்கட்டும் என்றாள்.

அதற்கு விஜயன் தேவி அதோ மலை



யின் கீழ் தெரிகிறதே ஒரு குடிசை அது தான் என் வீடு தயவு செய்து நீங்கள் அங்கே வந்து விடுங்கள் என்னுடைய பாட்டியும் நானும் மட்டும் அங்கிருக்கிறோம் என்றான் அதற்கு வைஜெயந்தி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ராஜேஸ்வரி கோயிலுக்கு வருவது என் வழக்கம் இங்கு தேவியை தரிசனம் செய்த பின்பு தனியாக உங்கள் வீட்டிற்கு வருகிறேன் என்றாள்.

பின்னர் மலையில் இருந்து கீழிறங்கி மற்ற தோழிகளுடன் சேர்ந்து கொண்டு வீடு திரும்பினாள். அடுத்த வெள்ளிக்கிழமை தான் மட்டும் தனியாக வந்து ராஜேஸ்வரியை தரிசனம் செய்து முடித்த பின் அவள் விஜயனின் இல்லம் அடைந்தாள்.

அவளைக் கண்டதும் விஜயன் அவளை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றான். அங்கிருந்த மரத்தின் கிளைகளில் மலர்ந்திருந்த ஒரு மலரை பறிக்கும் விதமாக அவளை ஒயிலாக நிற்க வைத்து அதை பளிங்குக் கல்லில் ஓவியமாக முதலில் வரைந்து கொண்டான். பின்னர் அவளை பளிங்குக் கல்லில் செதுக்க தொடங்கினான். அதற்குள் விஜயனின் பாட்டி அவளுக்கு ஒரு பணியாரம் தந்து உபசரித்தாள்.

அத்தனை சுவையான பணியாரத்தை வைஜெயந்தி அரண்மனையில் கூட அது நாள் வரை உண்டதில்லை. பாட்டி! இத்தனை ருசியான பணியாரம் நான் இதுவரை சுவைத்ததேயில்லை! என்று தன் மகிழ்ச்சியை அவள் வெளிப்படுத்தினாள். அதை கேட்டு



பாட்டி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

.அதற்குப் பின்னர் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை தோறும் வைஜெயந்தி விஜயனின் வீட்டிற்கு வந்தாள். விஜயன் தன் திறமை அனைத்தையும் ஈடுபடுத்தி மிகச் சிறப்பாக மூன்றே வாரங்களில் சிலையை பெரும்பாலும் செதுக்கி விட்டான். வைஜெயந்தி தன்னுடைய அழகான பளிங்குச் சிலையை விட விஜயனின் கம்பீரமான அழகையும் குணத்தையும் மிகவும் ரசித்தாள். அவள் பல விதமான கனவுகளுடன் அரண்மனைக்கு திரும்பினாள்.

மறுநாள் காலை, வைஜெயந்தி நந்த வனத்தில் ஒரு ரோஜாப்பூவை பறித்துக் கொண்டிருக்கையில் அந்த ரோஜாவை விட நீ மிகவும் அழகாயிருக்கிறாய் வைஜெயந்தி! என்ற குரலைக் கேட்டு திடுக்கிட்டு திரும்ப அங்கே ஒரு இளவரசன் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். அப்போது தான் முதல் நாள் இரவு தன் தந்தை தன்னிடம் பக்கத்து நாட்டு இளவரசன் தங்கள் அரண்மனைக்கு விருந்தினனாக வந்திருப்பதை அறிவித்தது நினைவிற்கு வந்தது.

உங்கள் வரவு நல்வரவாகுக என்று சொல்லி விட்டு வைஜெயந்தி உடனே அந்தப்புரம் திரும்பிவிட்டாள். அன்றிரவு அவள் தந்தை வைஜெயந்தி உன்னை அந்த இளவரசன் ஜெயந்தன் நந்தவனத்தில் பார்த்தான் அல்லவா உன்னை அவன் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான் உன்னுடைய அபிப்பிராயம் என்ன? என்று கேட்டார்.

உடனே வைஜெயந்தி அப்பா திருமணம் என்பது ஒரு ஆயுட்கால பந்தம் திருமணம் செய்து கொள்பவர்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்ட பின்னர் வாழ்க்கையில் சேர்ந்தால் வாழ்வு சிறப்பாக அமையும். ஒரு கண நேரம் மட்டுமே ஒருவரை பார்த்து விட்டு அவரை மணம் புரிந்து கொள்ள நான்

## அம்புலி மாமா கதைகள்

சம்மதிக்க மாட்டேன் என்றாள்.

மறுநாள் காலை வைஜெயந்தியின் தோழி ஒருத்தி ஓடோடி வந்து அவளிடம் இளவரசி உங்களைப் பார்க்க விஜயனின் பாட்டி வந்து இருக்கிறாள் என்றதுமே பரபரப்படைந்த வைஜெயந்தி பாட்டியை உடனே உள்ளே வர அனுமதித்தாள். தலைவிரி கோலமாக பதற்றத்துடன் வந்த பாட்டியை பார்த்ததுமே வைஜெயந்திக்கு தூக்கி வாரிப் போட்டது.

என்ன ஆயிற்று பாட்டி? விஜயன் நலம் தானே? என்று படபடப்புடன் கேட்டாள். அதற்கு கிழவி கூறிய பதில் அவளை திடுக்கிடச் செய்தது. இளவரசன் ஜெயந்தன் முந்தைய தினத்தன்று தன்னுடைய ஆட்களுடன் ராஜேஸ்வரி கோயிலுக்கு வந்திருந்தவன். தாகமாயிருக்கிறது என்று தண்ணீர் கேட்டு விஜயனின் வீட்டிற்கு வந்தான். அங்கே வைஜெயந்தியின் தத்ரூபமான் பளிங்குச் சிலையை கண்டதும் அவனுக்கு பயங்கர கோபம் உண்டாகிவிட்டது.

நான் மணந்து கொள்ளப் போகும் இளவரசியை சிலை வடித்தது யார்? என்று கோபத்துடன் கேட்க விஜயன் தான் செதுக்கியதாக கூறினான். அட அயோக்கியா? என்னுடைய வருங்கால மனைவியை சிலை வடிக்க உனக்கு என்ன தைரியம் என்று கூச்சலிட்டான். ஆனால் விஜயன் இளவரசியின் விருப்பத்தின் பேரிலே தான் சிலை செய்தேன் என்ற உண்மையைக் கூறாமல் மௌனமாக இருந்தான்.

இப்படிக் கேட்டால் பதில் சொல்ல மாட்டான் என்று சீறிய ஜெயந்தன் தன் ஆட்களை கூப்பிட்டு விஜயனை சாட்டையால் அடிக்க உத்தரவிட்டான். அவன் உடல் முழுவதும் ரணமாகி இரத்தம் சிந்திய போதும் அவன் தப்பித்தவறி கூட வைஜெயந்தியைக் காட்டிக் கொடுக்கவில்லை. கோபம் தலைக்கேறிய ஜெயந்தன் அந்த பளிங்குச் சிலையையே உடைத்து நொறுக்கித் தள்ளினான். அதன் பின்னர் இவனை இவன் வீட்டிலேயே சிறை வைத்து காவல் இருங்கள்! உண்மையை சொல்லும் வரை இவனை பட்டினி போடுங்கள்! என்று கூறிவிட்டு ஜெயந்தன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

மேற்கூறிய நிகழ்ச்சியை கூறிவிட்டு கிழவி விம்மி விம்மி அழுது கொண்டே விஜயனைக் காப்பாற்றுமாறு வைஜெயந்தியைக் கெஞ்சினாள் .அந்த சமயம் மன்னர் அங்கு வர நடந்த விடயங்களை வைஜெயந்தித் தன் தந்தைக்கு விளக்கிக் கூறினாள்.

அப்பா உங்களுடைய அனுமதி இன்றி நான் தான் விஜயனை என்னை சிலை வடிக்கச் சொன்னேன். அதைப் பற்றி உங்களிடம் ஒரு வார்த்தை கூடக் கூறாதது என் தவறு தான் என் பிறந்த நாளன்று அந்தப் பளிங்குச் சிலையை -உங்களுக்கு காட்டி உங்களை வியப்பிலும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்தத் திட்டமிட்டேன். அதற்குள் இந்த அசம்பாவிதம் நடந்து விட்டது. முதலில் நான் செய்த தவறுக்கு என்னை மன்னித்து விடுங்கள்.

அடுத்து தாங்கள் எனக்கு மணாளனாகத் தேர்ந்தெடுத்திருந்த ஜெயந்தனின் அடாத செயலைப் பாருங்கள் இப்படிப்பட்ட ஆண்கள் தங்கள் மனைவி எப்போதும் தன்னைச் சார்ந்திருக்க வேண்டுமென்று விரும்புவர்கள் மனைவியை பிறர் கண்களில் படாமல் சிறைப்படுத்தி வைக்கும் குணம் உள்ளவர்கள்.

இத்தகைய ஒருவனை நான் மணம் புரிந்து கொள்ள விரும்பவில்லை. அதேசமயம் விஜயனைப் பாருங்கள் சிலை செய்யும் விடயம் நமக்குள் ரகசியமாக இருக்க வேண்டும் என்று நான் சொன்னதனால் அத்தனை அடிபட்டும் அவன் வாயைத் திறக்கவில்லை.

இளவரசிதான் சிலை வடிக்கச் சொன்னாள் என்ற உண்மையைக் கூறினால்



எனக்கு அவப் பெயர் வந்துவிடுமோ என்ற எண்ணத்தில் ரத்தம் சிந்தி அடிகளைப் பெற்றுக் கொண்டான். தவிர நான் அவனுடன் பழகிய இந்த இருபது நாள்களில் அவன் வீரதீரப்பராக்கிரமங்கள் கொண்ட ஓர் உத்தமன் என்று புரிந்து கொண்டேன். நான் திருமணம் புரிவதனால் அது விஜயனை மட்டுமே என்று கூறினாள்.

ஆனால் மகளே நீ எவ்வாறு அந்த விஜயனை என்று தயங்கியவாறு மன்னர் கேட்டபோது கிழவி முன் வந்து மகாராஜா உங்களிடம் ஓர் உண்மையைக் கூற விரும்புகிறேன். விஜயன் என் சொந்தப் பேரனில்லை. ஒரு சமயம் விஜயபுரி மன்னரின் உறவினர்களே அவருக்கு எதிராக சதி வேலையில் ஈடுபட்டு கலகம் உண்டாக்க மன்னர் அப்போது கர்ப்பவதியாக இருந்த ராணியை என்னிடம் பாதுகாப்பாக அனுப்பி வைத்தார். கலகத்தில் மன்னர் இறக்க பிரசவத்தில் ராணியும் உயிர் துறக்க அநாதையான விஜயனை நான் வளர்த்து வந்தேன் என்றாள்.

என்ன சொன்னாய்? விஜயன் விஜயபுரி மன்னரின் புதல்வனா அவர் என்னுடைய நெருங்கிய நண்பர் என்று வியப்புடன் கூறிய மன்னர் தன் மகளைப் பார்த்து வைஜெயந்தி ஒரு சிற்பியை எவ்வாறு உனக்குத்திருமணம் செய்து வைப்பது என்று நான் தயங்கினேன். இப்போது அவன் என் நண்பரின் மகன் என்று தெரிந்த பின்னர் அவனைத் தவிர வேறு யாருக்கும் உன்னைத் தர இனி சம்மதிக்க மாட்டேன் என்று குதூகலத்துடன் கூற வைஜெயந்தி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினாள்

# இராணுவ செலவுகளுக்கு அதிகமான நிதி ஒதுக்கும் நாடுகளில் இலங்கை முதலிடம்

(கொழும்பு)

தெற்காசியாவில் இராணுவச் செலவீனங்களுக்கு அதிக நிதி ஒதுக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கை முதலிடத்தை பெற்றுள்ளது. இந்தத் தகவலை ஸ்ரொக்கோம் அனைத்துலக சமாதான ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்த நிறுவனம் 2011 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் இராணுவச் செலவீனங்களை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட பட்டியலின் படி இராணுவச் செலவீனங்களுக்கு அதிகம் நிதி ஒதுக்கும் தெற்காசிய நாடுகளில் பாகிஸ்தான், இந்தியாவை பின்தள்ளி விட்டு இலங்கை முதலிடத்தை பெற்றுள்ளது.

இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 வீதத்தை இராணுவச் செலவீனங்களுக்கு பயன்படுத்தி வருகின்றது.

கடந்த 2001 ஆம் ஆண்டு இலங்கையின் இராணுவச் செலவீனம் 11 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டில் இலங்கை ஆயிரத்து 403 மில்லியன் டொலரை இராணுவச் செலவுக்கு ஒதுக்கியது.

இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.4 வீதமாக இருந்தது. 2011 ஆம் ஆண்டு புள்ளி விபரங்களின் படி பாகிஸ்தான் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.8 வீதத்தையும் இந்தியா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7 வீதத்தையும் பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகியன மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.1 வீதத்தையும் இராணுவச் செலவுக்கு ஒதுக்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அரசியல் அதிகாரத்தை பகிரும் உரிமை இலங்கைக்கே உண்டு

## இந்தியக்குழு உணர வேண்டும் என்கிறது ஹெல உறுமய

இலங்கையில் அதிகார பகிர்வினை மேற்கொள்ளும் உரிமை இந்திய நாடாளுமன்றிற்கு கிடையாது என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இலங்கை விஜயம் குறித்து ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

அரசியல் யாப்பின் அடிப்படையில் அதிகாரத்தை பகிரும் பூரண உரிமை இலங்கை நாடாளுமன்றத்திற்கே காணப்படுகின்றது.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து உண்மை நிலைமைகளை அறிந்து கொள்வது மகிழ்ச்சி அளிக்கின்றது.

எனினும் இலங்கை ஓர் சுயாதீனமானதும் பௌதீக ஒருமைப்பாட்டை உடையதுமான நாடு என்பதனை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்மைப்பு மற்றும் புலி ஆதரவு புலம்பெயர் சக்திகளின் கருத்துகளுக்கு மட்டும் இந்தியா செவிசாய்க்கக் கூடாது.

தமிழ் இனவாத சக்திகளே தமிழ் மக்களை பின்னோக்கி இழுத்துச் சென்றுள்ளதாக அவ்வூடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# சுமாத்திராதீவு நிலநடுக்கத்தினால் பத்து எச்சரிக்கை கோபுரங்கள் ஸ்தம்பிதம்

சுமாத்திரா தீவுக்கருகில் ஏற்பட்ட நிலநடுக்கத்தையடுத்து இலங்கையில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதும் 10 சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்கள் செயற்படவில்லை என விசாரணை மூலம் தெரிய வந்துள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சு கூறியது.

இவற்றை திருத்தி செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து இலங்கையின் கரையோரப் பகுதிகளில் சுனாமி முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது.

சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்கள், ஊடகங்கள், பொலிஸார் ஊடாக முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் இதன்போது 90 வீதமான கோபுரங்கள் இயங்கியதோடு நீர்கொழும்பு, மாத்தறை, கம்பஹா, சிலாபம், மட்டக்களப்பு, திருகோணமலை அடங்கலான பல இடங்களில் அவை செயற்படவில்லை என குற்றச்சாட்டு எழுந்தது.

இதனையடுத்து முன்னெச்சரிக்கை கோபுரங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சு பணித்திருந்தது.


நாடு பூராகவும் உள்ள 74 கோபுரங்களில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சுமர் 10 கோபுரங்கள் இயங்காதது விசாரணையின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

அவற்றை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் சரத் லால் கூறினார். அவற்றில் 5 முன்னெச்சரிக்கை கோபுரங்கள் பரீட்சிக்கும் நிலையில் உள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (அ-2)

# இலவச மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் இலவச மருத்துவ முகாம் இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 2 மணி வரை ஊர்காவற்றுறை பிரதேச சபையின் நாரந்தனை உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக ஊர் காவற்றுறை பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். ( அ-9)



அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி–2011 இற்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி நாடகத்துறையினருக்கு 7 விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் கல்லூரியின் நாடகத்துறை விரிவுரையாளர் க.இ.கமலநாதனுக்கு கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்கா விருது வழங்கி கௌரவிப்பதையும் அருகில் அமைச்சின் செயலாளர் விமல் ரூபசிங்க நிற்பதையும் படத்தில் காணலாம்.

# கிழக்கு மாகாணசபை தேர்தலில் த.தே.கூட்டமைப்பு போட்டியிடும்

## அரியநேத்திரன் தெரிவிப்பு

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும் என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் திகதி அரசால் அறிவிக்கப்பட்ட பின்னர் இது விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு கூடி ஆராய்ந்து முதலமைச்சர் வேட்பாளரை தெரிவு செய்யும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு இணைப்பு என்ற விடயத்தில் உறுதியாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முனைவது ஏன் என எழுந்துள்ள விமர்சனங்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் விளக்கமொன்றை அளித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு தாயக இணைப்பு என்ற எமது கொள்கையில் நாம் உறுதியாகவே இருப்போம். இறுதிவரை நிலைப்பாட்டை தளர்த்திக் கொள்ளப் போவதில்லை.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலோ அல்லது வட மாகாண சபைத் தேர்தலிலோ போட்டியிடுவதால் துளியளவேனும் எமது கொள்கை மாறாது. தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணங்களை நாம் அறிவிப்போம் என அவர் குறிப்பிட்டார். (அ-2)

# இரு துருவங்கள் ஒரே மேசையில்

யாழ்ப்பாணம் வந்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவுக்கு நேற்று முன்தினம் இரவு இந்திய துணை தூதரகத்தின் சார்பில் இராப்போசன விருந்து அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதி ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த இராப்போசன விருந்துக்கு அரசியலில் இரு துருவங்களாக இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ஈ.பி.டி.பி. சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த இராப்போசன விருந்தில் சுஷ்மாசுவராஜ், இந்திய தூதுவர் அசோக் கே காந்தா, இரா.சம்பந்தன், டக்ளஸ் தேவானந்தா,வட மாகாண ஆளுநர் சந்திரசிறி உள்ளிட்டோர் ஒரே மேசையில் அமர்ந்து உணவருந்தினர். கட்சியால் வேறுபட்டிருந்தாலும் நாம் தமிழர்கள் என்பதை யாராலும் மறுக்கமுடியாது. ஆயினும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஒரே மேசையில் அமர வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

தமிழர்களாகிய எங்களை வேற்றுநாட்டு அரசியல்வாதிகள் ஒரே மேசையில் அமர வைக்க வேண்டிய நிலையில் தமிழர்களின் அரசியல் தலைவர்கள் இருப்பது வேதனைக்குரியது தான். (அ-2)

# பொன்சேகாவின் தண்டனைக்காலம் இந்த மாதத்துடன் நிறைவுபெறும்?

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு இராணுவ நீதிமன்றினால் விதிக்கப்பட்ட தண்டனைக்காலம் இந்த மாத இறுதியுடன் நிறைவடைகின்றது.

இராணுவ நீதிமன்றத்தினால் சரத் பொன்சேகாவிற்கு இரண்டரை ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. குறித்த தண்டனைக்காலம் இந்த மாத இறுதியுடன் பூர்த்தியடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும் வெள்ளைக்கொடி வழக்கில் விதிக்கப்பட்ட மூன்றரை ஆண்டு கால கடூழிய சிறைத்தண்டனையை பொன்சேகா தொடர்ந்தும் அனுபவிக்க நேரிடும் என சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளைக்கொடி வழக்கு தொடர்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன் தப்பியோடிய சிப்பாய்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாக சரத் பொன்சோகவிற்கு எதிராக மற்றுமொரு வழக்கு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மே 18 ஆம் திகதி தேசிய துக்க நாள் புலத்தில் அனுஷ்டிக்க ஏற்பாடு

(கொழும்பு)

உலகத் தமிழினம் உறைந்து போன நாளை மூன்றாம் ஆண்டாக நினைவில் நிறுத்தி தேசிய துக்க நாளாக நினைவுகூரும் நிகழ்வுகள் ஒன்ராறியோ பாராளுமன்ற முன்றலில் இடம்பெறவுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசு உலகளாவிய ரீதியாக மே 18 ஆம் நாளைத் தேசிய துக்க நாளாகப் பிரகடனப்படுத்தியதை அடுத்து இந்நிகழ்வு பெரும் ஏற்பாட்டில் இடம் பெறுகின்றது.

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தை நன்கறிந்த முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களும் கல்விமான்களும் மனித உரிமை அமைப்புக்களைச் சார்ந்த அறிஞர்களும் எமக்காக என்றும் குரல் கொடுக்கும் சான்றோர்களும் இந்நிகழ்வில் உரை நிகழ்த்த இருக்கின்றார்கள்.

கனடாவிலுள்ள தமிழ் அமைப்புக்கள் பெரும்பான்மையாக இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்விற்கு கனடா வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம் இனத்தின் விடிவுக்கான போராட்டத்தின் மத்தியில் கொடிய ஆயுதங்களுக்கு அநியாயமாக இரையாகிப் போன எம் உறவுகளை நினைவில் நிறுத்தி எம் கண்ணீரை மீண்டும் காணிக்கை ஆக்குவோம்.

எதிர்வரும் மே 18 ஆம் திகதி மாலை 5 மணியில் இருந்து 8 மணிவரை தமிழர்கள் அனைவரும் டொரண்ரோ மாநகரில் குவீன்ஸ் பார்க் திடலில் ஒன்று திரண்டு தீச்சுடர் ஏற்றவுள்ளனர். (அ-2)

# வடமாகாணத்திலிருந்து 250,000 மெ.தொ.நெல் அறுவடை

(கொழும்பு)

கடந்த பெரும்போகத்தின் போது வடமாகாணத்தில் இருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் அறுவடை செய்யப்பட்டதாக விவசாய அமைச்சு கூறியுள்ளது.

இது வடமாகாணத்தில் இருந்து இதுவரை பெறப்பட்ட அதிகூடிய நெல் அறுவடை எனவும் இம்முறை 85 ஆயிரம் ஹெக்டேயரில் நெல் பயிரிடப்பட்டதாகவும் அமைச்சு தெரிவித்தது.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் வடபகுதியில் கூடுதலான நிலப் பரப்பில் நெல் பயிரிடப்பட்டதோடு விவசாயிகளுக்கு பல்வேறு நிவாரணங்கள், உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிலையில் இம்முறை சாதனை படைக்கும் வகையில் அதிகூடிய அறுவடை கிடைத்துள்ளது. யுத்தத்திற்கு முன்னர் கூட வடக்கில் இந்தளவு கூடுதல் நெல் அறுவடை கிடைக்கவில்லை எனவும் விவசாய அமைச்சு கூறியது.

நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் கூடுதலாக நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதோடு மேலதிக நெல்லை ஏற்றுமதி செய்யவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது. (அ-2)

# தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் இனங்காணப்பட்டுள்ளனர்

(கொழும்பு)


அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்னவின் உத்தியோகபூர்வ அலுவலகம் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பின் போது அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தீ வைப்புச் சம்பவத்தையடுத்து சந்தேகத்தின் பேரில் இருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் காலை மஹியங்கனை நீதவான் உத்தரவின் பேரில் நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பின் போதே சந்தேக நபர்களை சாட்சியாளர்கள் அடையாளம் காட்டியிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அத்தியட்சகர் அஜித் ரோஹண கூறினார்.

பதுளை மாவட்டத்தின் வியலுவை தேர்தல் தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளரும் அமைச்சருமான லக்ஸ்மன் செனவிரட்னவின் உத்தியோகபூர்வ அலுவலகம் கடந்த 15 ஆம் திகதி தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டது.

இச்சம்பவத்தினால் குறிப்பிட்ட அலுவலகம் முற்றாக சேதமடைந்துள்ளது. சேத மதிப்பீடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் அதே வேளை பொலிஸார் இச்சம்பத்திற்கு காரணமான பின்புலத்தை கண்டறியும் வகையில் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தீ வைப்பு சம்பவத்தின் போது அலுவலகத்தில் எவரும் இருக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)



நல்லூர் லயன்ஸ் கழகத்தின் 23 ஆவது வருடாந்த ஆரம்ப தின விழா அண்மையில் ஜ.ஜ.எஸ்.சிற்றி கம்பஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்ற செல்வி தனுஷா அரியரட்ணத்திற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட லயன்ஸ் கழக மாவட்ட முதலாவது உப ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா துவிச்சக்கர வண்டி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1534-இழ்சாக் கார்ட்டியே தனது கடற்பயணத்தை ஆரம்பித்தார். இப் பயணத்தின் போதே அவர் கனடாவை கண்டுபிடித்தார்

★ 1653-ஒலிவர் குறொம்வெல் இங்கிலாந்து நாடாளுமன்றத்தை கலைத்தார்.

★ 1657-அமெரிக்காவில் நியூ ஆம்ஸ்டர்டாம் (தற்போதைய நியூயோர்க் நகரம்) என்ற டச்சுக் குடியேற்றத்தில் யூதர்களுக்கு மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.

★ 1775-அமெரிக்க புரட்சிப் போர்: பொஸ்டன் நகரை கைப்பற்றும் போர் ஆரம்பமானது.

★ 1792-பிரான்ஸ், ஆஸ்திரியா மீது போரை அறிவித்தது. பிரெஞ்சு புரட்சிப் போர்கள் ஆரம்பித்.தன.

★ 1859-சார்ல்ஸ் டிக்கன்ஸ் எழுதிய இரண்டு நகரங்களின் கதை புதினம் வெளியிடப்பட்டது.

★ 1862-லூயி பாஸ்டர் மற்றும் குளோட் பெர்னார்ட் ஆகியோரின் பாஸ்ச்சரைசேஷன் முறையை முதன் முதலாக சோதித்தனர்.

★ 1902-பியேர் மற்றும் மேரி கியூரி ரேடியம் குளோரைட்டை தூய்மைப்படுத்தினர்.

★ 1914- ஐக்கிய அமெரிக்காவில் கொலராடோவில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின் போது பொலிஸார் தாக்கியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 45 பேர் உயிரிழந்தனர்.

★ 1926-திரைப்படத்துக்கு ஒலியை இணைக்கும் வைட்டாபோன் என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்க படைகள் ஜேர்மனியின் லெயிப்சிக் நகரைக் கைப்பற்றினர். ஆனாலும் அடுத்த நாளே இதனை சோவியத் ஒன்றியத்துக்கு அளித்தனர்.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் லெயிப்சிக் நகரத் தந்தை தனது குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டார்.

★ 1945-அடொல்ஃப் ஹிட்லர் கடைசித் தடவையாக தனது சுரங்க பதுங்கு இருப்பிடத்தில் இருந்து வெளியே வந்தார்.

★ 1961-கியூபாவில் ஐக்கிய அமெரிக்காவின் பிக்ஸ் விரிகுடா தாக்குதல் தோல்வியில் முடிந்தது.

★ 1967-சைபிரசில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 126 பேர் உயிரிழந்தனர்.

★ 1968-தென்னாபிரிக்க விமானம் ஒன்று தென்மேற்கு ஆபிரிக்காவில் வீழ்ந்ததில் 122 பேர் உயிரிழந்தனர்.

★ 1972-அப்போலோ 16 சந்திரனில் இறங்கியது.

★ 1978-தென்கொரியப் பயணிகள் விமானம் சோவியத் ஒன்றியத்தினால் சுடப்பட்டதில் இரு பயணிகள் உயிரிழந்தனர். 107 பேர் தப்பினர்.

★ 1998-கொலம்பியாவில் போயிங் விமானம் ஒன்று மலை ஒன்றுடன் மோதியதில் 53 பேர் உயிரிழந்தனர்.

★ 1998-28 ஆண்டுகள் இயங்கிய ஜேர்மனியின் சிவப்பு இராணுவ அமைப்பு என்ற தீவிரவாத அமைப்பு கலைக்கப்பட்டது.

★ 1999-கொலராடோவில் உயர்தரப் பாடசாலை ஒன்றில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர். துப்பாக்கிதாரி பின்னர் தற்கொலை செய்து கொண்டார்.

★ 2007-டெக்சாசில் ஹூஸ்டன் நகரில் உள்ள நாசாவின் விண்வெளி ஆய்வு மையத்தின் பணியாளி ஒருவன் பணயக் கைதி ஒருவரைக் கொன்று தன்னையும் சுட்டுக் கொன்றான்.

## பிறப்புக்கள்

★ 1808-மூன்றாம் நெப்போலியன், பிரெஞ்சு மன்னன் (இ.1873)

★ 1889-அடொல்ஃப் ஹிட்லர், ஆஸ்திரியாவில் பிறந்து ஜேர்மனியை ஆண்ட சர்வாதிகாரி(இ.1945)

★ 1910-சிட்டி பெ.கோ.சுந்தரராஜன், எழுத்தாளர் (இ.2006)

★ 1918-காய் சீக்பான், நோபல் பரிசு பெற்றவர்

★ 1927-கார்ல் முல்லர், நோபல் பரிசு பெற்றவர்

★ 1939-பிரமீள், ஈழத்து எழுத்தாளர் (இ.1997)

★ 1950-நா. சந்திரபாபு நாயுடு, இந்திய அரசியல்வாதி

## இறப்புக்கள்

★ 1918-கார்ல் பிரவுன், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர். (பி .1850)

★ 2003-பேர்னார்ட் காட்ஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1911)

# அதிசய உலகம்...

## அமெரிக்காவின் உயர்ந்த மனிதர்




அமெரிக்காவின் மிக உயர்ந்த மனிதர் பற்றிய சுவாரஷ்யமான செய்தி இது. இந்த நபருக்கு வயது 29. அவரது ஏழாவது வயதிலேயே அம்மாவின் உயரத்தை மிஞ்சி விட்டார். உடல் உயரம் காரணமாக அன்றாட வாழ்க்கையில் பல சோதனைகளை எதிர்கொண்டு வருகின்றார்.

இவருக்கு நண்பர்கள் என்று யாரும் கிடையாது.

இவரது பாதங்களுக்கு ஏற்ற வகையில் பொருத்தமான சப்பாத்துக்களை பெறுகின்றமை கூட மிகவும் அபூர்வமான காரியமாகத்தான் இருந்து வருகின்றது. கடைகளில் வாங்க முடிவதில்லை. விசேடமாக செய்விக்க வேண்டி இருக்கின்றது. இதனால் ஒருசோடி சப்பாத்தை தயாரிப்பதற்கு 15ஆயிரம் அமெரிக்க டொலர் வரை செலவு செய்கின்றார். இதற்காக பேஸ்புக் சமூக இணைப்புத் தளத்தில் சிறப்புப் பக்கம் ஒன்றை உருவாக்கி நிதி அன்பளிப்புக்களை பெற்று வருகின்றார்.


## குளோனிங் முறையில் பிறந்த உலகில் முதலாவது Pashmina வகை ஆடு



தற்போதைய விஞ்ஞான உலகில் பல அதிச்யங்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் மேலும் ஒரு அதிசய மாக Pashmina இனத்தைச் சார்ந்த ஆட்டுக்குட்டி ஒன்று குளோனிங் முறையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதுவே குளோனிங் முறையில் உற்பத்திசெய்யப்பட்ட உலகின் முதலாவ்து Pashmina இன ஆட்டுக் குட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

## காரகோரம் மலை பனி இறுகி திண்மமாகிறதாம்



புவி வெப்பமடைவதனால் பனி மலைகள் உருகும் போக்குக்கு மாறாக ஆசியாவின் காரகோரம் மலையில் பனி இறுகி திண்மமாகி வருவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளார்கள். இமாலயா பிராந்தியத்தின் மேற்காக உள்ள காரகோரம் மலைத்தொடரில் பனியின் அளவு அதிகரித்து வருவதை செய்மதி தகவல்கள் மூலமாக ஒரு பிரெஞ்சு விஞ்ஞானிகள்குழு கண்டறிந்துள்ளது.

புவி வெப்பமடையும் போக்குக்கு ஏற்ப இமாலயத்தின் ஏனைய பகுதிகளில் உள்ள பனி மலைகள் உருகிவரும் நிலையில் இந்த மலை மாத்திரம் திண்மமாகி வருவதன் காரணம் இன்னமும் அறியப்படவில்லை.

இந்த பிராந்தியத்தில் உள்ள பனிமலை 100 கோடி மக்களுக்கு நீர் வழங்கும் மூலமாக இருக்கிற போதிலும் அவை குறித்த ஆய்வுகள் பெரிதாக எதுவும் நடக்கவில்லை.

இமாலயா பிராந்தியத்தில் உள்ள மொத்த பனியும் 2035 ஆம் ஆண்டளவில் உருகிப் போய்விடும் என்று 2007 ஆம் ஆண்டு வெளியான காலநிலை மாற்றத்துக்கான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் அறிக்கை கூறியதை அடுத்து இமாலயாப் பனி மலைகளின் விவகாரம் ஒரு முக்கிய அம்சமாக பலராலும் பேசப்படுகின்றது.

இமாலயத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற போதிலும் காரகோரம் மலை ஒரு வேறுப்பட்ட தொடராகவே காணப்படுகிறது.

இந்த மலைச் சிகரங்கள் பொதுவில் சென்று வருவதற்கு மிகவும் கடினமான பகுதியாகவே இருந்த போதிலும் அங்கு ஆய்வுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அதிகரித்து வருகின்றது.

## உலகில் மிகவும் அசிங்கமான பறவை



பிறந்த உடனே இறக்கைகள் ஏதும் இல்லாமல் விநோதமாக தோற்றமளித்ததால் நெல்சன் என்ற இந்த பறவை தனது பெற்றோர்களால் கைவிடப்பட்டது.

ஜேர்மனியில் உள்ள Bergzoo வில் நெல்சன் கடந்த மாதம் பிறந்தது.பிறந்த உடனேயே இதன் பெற்றோரால் நிராகரிக்கப்பட்டதால் நான்கு வாரங்கள் Incubatorஇல் வைத்து பராமரிக்கப்பட்டது.

இருப்பினும் தனக்கு என்றாவது ஒருநாள் இறக்கை முளைக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்த பறவை உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

## 6 கால்களுடன் அதிசயக் குழந்தை



மனிதர்களுக்கு இரண்டு கால்கள் என்பதே வழமை. எனினும் சில சந்தர்ப்பங்களில் வேறுபட்ட எண்ணிக்கை யான கால்களைக் கொண்ட குழந்தைகள் பிறந்து ஆச் சரியத்தில் ஆழ்த்துவதுண்டு.

இவ்வாறு அண்மையில் ஆறு கால்களுடன் குழந்தை ஒன்று பிறந்து உலகத்தையே அதிசயத்தில் ஆழ்த்தியுள் ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகரிலேயே இம்ரான் ஷேய்க் என்ற இக்குழந்தை பிறந்துள்ளது.

எனினும் குழந்தை எவ்வி தமான பிரச்சினையும் இன்றி ஆரோக்கியமாக உள்ளதாம்.

# யாழின் எழில்மிகு தோற்றம் கண்டு பிரமிப்படைகிறேன்

## இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா

போருக்குப் பின்னரான இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி கண்டு தாம் பிரமிப்பு அடைந்துள்ளதாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வருகை தந்திருந்த சுஷ்மா சுவராஜ் மத்திய கல்லூரி மைதானத்தில் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பிற்கிணங்க தாம் இங்கு வருகை தந்துள்ளதாகவும் இங்கு அமைச்சருடன் நேரில் சென்று பல இடங்களை பார்வையிடவுள்ளதாகவும் கேட்டறிய உள்ளதாகவும் தெரிவித்தார்.

போருக்குப் பின்னரான இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தின் எழில் மிகு தோற்றம் மற்றும் அதன் அபிவிருத்தி குறித்து தாம் பிரமிப்பு அடைந்துள்ளதாகவும் சுஷ்மா இதன்போது சுட்டிக்காட்டினார்.

அங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழும் வழிகாட்டலுடனும் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்து வருகின்றது என்றும் அத்துடன் கிடைக்கப் பெறுகின்ற அனைத்து வளங்களையும் கொண்டு யாழ்ப்பாணத்தை மென்மேலும் அபிவிருத்தி நோக்கி கொண்டு செல்வதே தமது நோக்கமெனவும் தெரிவித்தார்.

இதேநேரம் மைதானத்தில் கூடியிருந்த மக்களுக்கு சுஷ்மா சுவராஜ் இந்திய மக்களின் சார்பில் தனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார். (அ-2)

# யாழ். கல்வி வலய ஆரம்பப்பிரிவு சித்திரப்போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு நடைபெற்ற வலய மட்ட சித்திரப் போட்டி முடிபுகளை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ரி. இராசலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**தரம்-1**

சி.கிசாந்தன் (யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), சி.சிரோமியா (யா/சென் ஜேம்ஸ் வித்தியாலயம்), க.கதிர்சன் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

**தரம்-2**

இ.துஸ்யந்தி (யா/ இந்து மகளிர் வித்தியாலயம்), கி.துஸானி (யா/ சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்), சே. வினுஸா (யா/கொழும்புத் துறை துரையப்பா வித்தியாலயம்)

**தரம்-3**

தி.திவ்யா (யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), இ. பிரசாந் (யா/ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்), கே.கிசாங்கி (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

**தரம்-4**

இ.தமயந்தி (யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), பே.யுதிஸ்ரன் (யா/ சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்), மு.நிதுஜன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி)

**தரம்-5**

ஏ.தவசுதன் (யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி), ஜெ. றெமியூசன் (யா/ சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்), உ.துஸ்யந்தன் (யா/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயம். (அ)

# குழந்தையும் தேசமும் நூல் அறிமுக விழா

பேராசிரியர் சி. சிவசேகரம் எழுதிய நூலான குழந்தையும் தேசமும் எனும் சிறுகதைத்தொகுதி நூல் அறிமுக விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்பபாணம் ஜும்மா பள்ளிவாசல் வீதி ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் (எம்.ஆர்.ரி.சி) தாயகம் ஆசிரியர் க. தணிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் நூல் அறிமுக உரையினை தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சோ. தேவராஜாவும் ஆய்வுரையினை யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன், எழுத்தாளர் கருணாகரன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். (அ-9)

# லிந்துலை தீ விபத்திற்கு மின் ஒழுக்கே காரணம்

## நுவரெலிய அரச அதிபர் தெரிவிப்பு

தலவாக்கலை– லிந்துலை வோல்ரிம் தோட்டக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்திற்கு மின் ஒழுக்கே காரணம் என நுவரெலிய மாவட்ட அரசாங்க அதிபர் டீ.பீ.ஜீ. குமாரசிறி குறிப்பிட்டுள்ளார்.

தரமற்ற மின் இணைப்புக்களே இந்த விபத்திற்கு காரணம் என நுவரெலிய மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். லிந்துலை வோல்ரிம் தோட்டக் குடியிருப்பில் பரவிய தீ காரணமாக 44 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் 6 சிறுவர்களும் அடங்குவர்.

தீ பற்றியதை அடுத்து இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான சமைத்த உணவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)


கேள்வி கோரல்கள்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகார சபை,

யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள், புனர்நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்**

**பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்**

01.பின்வரும் புனர்நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச் சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக்கொள்வார்.

| | வேலை | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் |
|---|---|---|---|
| 1. | மதகு மீள் நிர்மாணம்-24-1-வழுக்கையாறு-புங்குடுதீவு-குறிகட்டுவான் வீதி | 7,650.00 | C 8 |
| 2. | மதகு மீள் நிர்மாணம்-6/2-கொக்குவில்-வட்டுக்கோட்டை வீதி | 12,850.00 | C 8 |
| 3. | மதகு மீள் நிர்மாணம்-14/2-யாழ்ப்பாணம்-பண்ணை-ஊர்காவற்றுறை வீதி | 15,000.00 | C 8 |
| 4. | மதகு மீள் நிர்மாணம்-17/4-யாழ்ப்பாணம்-பண்ணை-ஊர்காவற்றுறை வீதி | 15,000.00 | C 8 |
| 5. | மதகு மீள் நிர்மாணம்-17/1-யாழ்ப்பாணம்-பண்ணை-ஊர்காவற்றுறை வீதி | 15,000.00 | C 8 |
| 6. | மதகு மீள் நிர்மாணம்-17/3-யாழ்ப்பாணம்-பண்ணை-ஊர்காவற்றுறை வீதி | 15,000.00 | C 8 |
| 7. | மதகு மீள் நிர்மாணம்-22-3-வழுக்கையாறு-புங்குடுதீவு-குறிகட்டுவான் வீதி | 19,300.00 | C 8 |
| 8. | மதகு மீள் நிர்மாணம்-2/2-கந்தசாமி கோவில்-நாச்சிமார் கோவில் வீதி | 25,000.00 | C 8 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 07.05.2012 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் 07.05.2012 அன்று காலை 10.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப் பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம் காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப் பத்திர ஆவணங்கள் 23.04.2012 தொடக்கம் 04.05.2012 பிற்பகல் 2 மணி வரை மீள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/- + பெறுமதி சேர்வரி 12% செலுத்திப் பெறவேண்டும்.

2) தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற்குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03.கேள்விகோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

04.முன் கேள்வி கோரல் கூட்டம் 03.05.2012 அன்று காலை 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

05.கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுத்திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும் (04.09.2012)

06.மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப் பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப் பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (07.05.2012 மு.ப. 10.00) முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப் பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

09.மேலதிக விபரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

அலுவலகம்,
பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்-021 222 2968

மாகாணப் பணிப்பாளர் (வ),
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6392)

# அ.தி.மு.க. வகுத்துள்ள சக்கர வியூகத்தில் சிக்காமல் தி.மு.க. எப்படி தப்பிக்கும்...!

கடந்த 1972 ஆம்ஆண்டு எம்.ஜி.ஆர். திராவிட முன்னேற்றக் கழகத்தை உடைத்து, அ.தி.மு.க. என்ற கட்சியை தோற்றுவித்த காலம் தொட்டே, இந்த இருபெரும் கட்சிகளும் தமிழ் நாட்டுப்பிரச்சினைகளில் பிற கட்சிகள் பெயர் தட்டிக்கொண்டு போக விட்டதில்லை. தேர்தல்களில் கூட, தங்கள் இருவரையும் மீறி, மாநில அரசியலில் மூன்றாவது கட்சி முளைவிட்டாலும்கூட மரமாக வளர்வதை அவை இரசித்ததில்லை. எழுதப்படாத ஓர் ஒப்பந்தமாக, ஒவ்வொரு கால கட்டத்திலும் வெவ்வேறு மூன்றாவது கட்சியை திட்டம் போட்டு கட்டம் கட்டியுள்ளன. இன்னும் சொல்லப் போனால், அவை இரண்டும் பேச்சு வார்த்தைகள் மூலம் திட்டம் தீட்டியிருந்தால் கூட இவ்வளவு தெளிவாக செயற்பட்டு வெற்றி பெற்றிருக்க முடியாது. தற்போதைய பிரச்சினையில் தி.மு.க.வை பெயர் சொல்லிக் கருத்து தெரிவிக்க ஜெயலலிதா, விஜயகாந்தின் தே.மு.தி.க. வையோ, மாநிலத்தில் உள்ள பிற கட்சிகளையோ பாராட்டி ஒரு வார்த்தை கூட கூறவில்லை. இது திராவிட கட்சிகளின் தேர்தல் அரசியலின் பரிணாம வளரச்சியின் ஒரு பாகம் என்றே நாம் கருத வேண்டும்.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும், முதல்வர் ஜெயலலிதாவிற்கும் யார் தமிழின தலைவர் என்ற போட்டி கடுமையாக நடக்கிறது. ஒவ்வொரு முறை அ.தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதும், இது தமிழர்களுக்கு எதிரான ஆட்சி என்று தி.மு.க. தலைவர் பிரசாரம் மேற்கொள்வார். இதை "தமிழுக்காக பணிகளை மேற்கொண்டது நான்தான்" என்று முதல்வர் பதவியில் இருக்கும் ஜெயலலிதா அறிவிப்பார். அதுவும் குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முதல்வரின் நடவடிக்கையில் அதிரடியான மாற்றம் நிகழ்ந்துள்ள நிலையில், அத்தமிழருக்காக ஆதரவு கொடுக்கும் தமிழக அமைப்புகளே முதல்வர் ஜெயலலிதாவைப் பாராட்டி போஸ்டர் போடுகின்றன. இந்நிலையில் இப்போது தமிழர்களின் புத்தாண்டு சித்திரையா? தை மாதமா? என்ற பட்டிமன்றத்தில் தமிழகத்தில் உள்ள இரு அணிகளின் பட்டமன்றத் தவைர்களாக இருந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியும், இந்நாள் முதல்வர் ஜெயலலிதாவும் வாதம் செய்து வருகிறார்கள்.

சித்திரைதான் தமிழர்களின் புத்தாண்டு என்பதை அறிவித்த தமிழக முதல்வர் அந்த விழாவில் பல தமிழறிஞர்களுக்கு விருதுகளை வழங்கினார். குறிப்பாக மதுரை தமிழ் சங்கத்திற்கு தமழ்த்தாய் விருதை வழங்கி சிறப்பித்தார். சென்னை பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் ஜெயலலிதா, "அரசியலில் தந்திரம் செய்பவர்கள் தமிழுக்கு தொண்டு செய்வதுபோல் காட்டிக் கொள்கிறார்கள்" என்று குட்டிக்கதை ஒன்று சொல்லி விளாசித் தள்ளினார். இது இப்போதல்ல!

ஆட்சியில் அமரும் முன்பு இலங்கை பிரச்சினையின் உச்சத்திலேயே தி.மு.க. தலைவர் கருணாநிதியை தமிழினத்திற்கு எதிராக செயற்படுபவர் என்பதை பல கட்டங்களில் அடித்துச் சொல்லியிருக்கிறார். அது மட்டுமின்றி ஆட்சிக்கு வந்தவுடன் இலங்கைப் பிரச்சினையில் அவ்வப்போது அவர் எடுத்த நடவடிக்கைகள் அத்தமிழருக்காக ஆதரவு தெரிவித்துவரும் அமைப்புகளின் பாராட்டுதலைப் பெற்றது. இலங்கைக்கு எதிராக அமெரிக்கா- ஐ.நா.வில் கொண்டு வந்த மனித உரிமைகள் மீறல் தீர்மானத்தை ஆதரிக்கவேண்டும் என்று கூறி இருமுறை பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதினார். இப்போது இலங்கை செல்லும் இந்திய எம்.பி.க்கள் குழுவில் அ.தி.மு.க. சார்பில் வில்லியம் ரபி பெர்னாட் என்ற ராஜ்ய சபை எம்.பி. கலந்துகொள்வதாக இருந்தது. ஆனால், அக்குழுவிலிருந்து இப்போது வோர்க் அவுட் செய்திருக்கிறது அ.தி.மு.க. தலைமை. தமிழகத்திலுள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தை எதிர்ப்பது, தமிழக மீனவர்களை தாக்குவது போன்ற செயல்களில் இலங்கை அதிபர் ராஜபக்ஷ செயற்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டி, அவர் தொடர்ந்து தமிழர் விரோதமாக செயற்பட்டு வருவதாக கூறியுள்ளார் முதல்வர் ஜெயலலிதா. இந்த காரணத்தைக்கூறித்தான் இலங்கை செல்லும் இந்திய எம்.பி.க்கள் குழுவில் பங்கேற்பதைத் தவிர்த்துள்ளது. அ.தி.மு.க இப்படித் 'தமிழர்களின் புத்தாண்டு சித்திரை தான் என்றும், இலங்கை தமிழர்விடயத்தில் பெயரளவில் அனுப்பப்படும் குழுவில் கலந்து கொள்ளமாட்டோம் என்றும் கூறி அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதா தமிழர் வியூகத்தை கையிலெடுத்துள்ளார். இதன் மூலம் எதிர்வரும் காலங்களில் காங்கிரஸ் கட்சியுடன் மத்திய அரசில் பங்கேற்கும் தி.மு.க. விற்கு செக் வைத்திருக்கிறார்.

தமிழர் வியூகத்தை முதல்வர் ஜெயலலிதா கையிலெடுத்து தமிழினத் தலைவர் நான்தான் என்ற ரீதியில் முன்னகர்த்துவதால் அதை எதிர்கொள்வதற்கு முனைகிறார் முன்னாள் முதல்வர் கருணாநிதி. அதன் ஒரு கட்டமாக தி.மு.க.வும் இலங்கைக்கு செல்லும் இந்திய எம்.பி.க்கள் குழுவிலிருந்து விலகிக் கொள்கிறது என்று அவர் அறிவித்துள்ளார். "இப்படி குழுக்கள் செல்வதால் எந்தப்பயனும் ஏற்படவில்லை என்பதற்கு பழைய உதாரணங்கள் இருக்கின்றன. எனவே, அந்தப் பயணத்தை தி.மு.க.வின் சார்பில் யாரும் மேற்கொள்ளவில்லை" என்று அறிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து அ.தி.மு.க. அரசின் மின் கட்டண உயர்வை கண்டித்து போடப்பட்ட சென்னை மாங்கொல்லை கூட்டத்தில் மாலையில் அவர் பேசினார். அதில் "தமிழ்மீது தனக்கு பற்று உள்ளதைப் போலப் பேசிக் கொண்டு, தமிழகத்தை ஆளுகின்ற அரசினர் தமிழையே அழித்துக் கொண்டிருக்கின்ற காட்சியை பார்க்கிறோம். கேட்டால் தமிழை அழிப்பவன் கருணாநிதிதான் என்று கூடச்சொல்வார்கள். ஆனால், இந்த கருணாநிதிதான் கல்லக்குடி என்ற பெயர் வைக்க தண்டவாளத்தில் தலைவைத்துப்போராடியவர். தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து வாங்கிக் கொடுத்தவர். உலகத்தமிழ் மாநாட்டில் தமிழை வளர்த்ததற்காக பின்லாந்து நாட்டைச்சேர்ந்த தமிழறிஞர் அஸ்கோ பர்ப்போலாவிற்கு பத்துலட்சம் ரூபாய் சொந்தப்பணத்திலிருந்து நிதியளித்தவர் என்றெல்லாம் பேசிவிட்டு தைமாதம்தான் தமிழர்கள் புத்தாண்டு. அது மீண்டும் வரும்" என்று பேசினார். அந்தப் பொதுக்கூட்டத்தில் கடைசி ஐந்து நிமிடங்கள் தவிர மற்ற ஏறக்குறைய முக்கால் மணிநேரம் தமிழுக்கும் தமிழர்களுக்கும் தான் செய்த காரியங்களை பட்டியலிட்டுப் பேசினார்; தைமாதம்தான் தமிழர்களின் புத்தாண்டு என்பதற்கு பல்வேறு தமிழறிஞர்கள்,புலவர்கள் எழுதிய கட்டுரைகளை மேற்கோள் காட்டி பேசினார். முதல்வர்ஜெயலலிதாவின் தமிழர் வியூகத்தை முறியடிக்க அ.தி.மு.க. தலைமைமீது தாக்குதல் நடத்த இந்தப் பொதுக்கூட்டத்தை பயன்படுத்திக் கொண்டார். தி.மு.க. தலைவர் கருணாநிதி.

முதல்வரின் தமிழர் வியூகம் என்பது தி.மு.க.விற்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்துகிறது. மத்தியில் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் கட்சி இலங்கைத் தமிழர் விடயத்தில் உருப்படியான நடவடிக்கையை எடுக்கவில்லை என்று தொடர்ந்து அ.தி.மு.க. தலைமை குற்றம் சாட்டிவருகிறது. காங்கிரஸ் கட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிலவி வந்த கோபத்தை மேலும் அதிகமாக்கி, அதற்கு துணை போகும் தி.மு. கவின் நன்மதிப் பை நாசம்பண்ண வேண்டும் என்பதே இதன் நோக்கம். ஏனென்றால், நாடாளு மன்றத் தேர்தல் வரும்போது தி. மு. க. காங்கிரஸ் கூட்டணி எந்த விதத்திலும் தொ டரக் கூடாது என்று வியூகம் வகுத்துள்ளார் முதல்வர் ஜெயலலிதா. தே.மு. தி.க. தலை வர் விஜயகாந்- அ.தி.மு.க.



## தமிழகப் பார்வை

கூட்டணியிலிருந்து விலகியுள்ள நிலையில், காங்கிரஸ் -தி.மு.க.வுடன் கூட்டணியாக இருப்பது, தனது நாடாளு மன்ற வெற்றியை பாதிக்கும் ஆபத்து இருக்கிறது என்பதை உணர்ந்துள்ளார். அதனால் தான் "தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் ஒன்றும் செய்யாத காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க.வின் கூட்டணி தொடர்ந்துவிடக் கூடாது என்று கருதுகிறார். அவரைப் பொறுத் தமட்டில் தே.மு.தி.க., காங்கிரஸ் ஆகிய கட்சிகளைத் தனித்துவிட்டு, தி.மு.க.வை நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்கொள்ள விரும்புகிறார். அது கடந்த உள்ளாட் சித்தேர்தலில் தனக்கு வெற்றி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததுபோல, நாடாளு மன்றத்திலும் வெற்றியைக் கொடுக்கும் என்றே கருதுகிறார் முதல்வர் ஜெயலலிதா. அதை மனதில் வைத்துத்தான் தமிழர் வியூகம் வகுத்து தி.மு. க.வை குறி வைக்கிறது அ.தி.மு.க. தலைமை. இதை உணர்ந்துள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதியும் அதே பாணியில் காய்நகர்த்துகிறார். இலங்கை செல்லும் எம்.பி.க்கள் குழுவில் நாங்களும் பங்கேற்கவில்லை" என்று அறிவித்திருக்கிறார். அவரும் காங்கிரஸ்மீது கோபத்தில் இருக்கிறேன் என்று வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். தமிழை அழிக்கிற அரசு என்று அ.தி.மு.க. வை குறை கூறி "நான்தான் தமிழர் களுக்கும் தமிழுக்கும் உழைக்கிறேன்" என்று காரசாரமாக பேசியிருக்கிறார். அது மட்டுமின்றி இந்த ஆட்சி (அ.தி.மு.க.) தொடரவேண்டுமா என்று சிந்தியுங்கள். அதை செயலில் காட்டுங்கள் என்று ஏறக்குறைய 2014 இல் வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கான பிரசாரத்தை ஆவேசமாக தொடக்கிவைத்துள்ளார். தி.மு.க. தலைவர் கருணாநிதி.

தமிழகத்தில் இரு தலைவர்களுக்கும் இடையில் நடக்கும் இந்த தமிழினத் தலைவர் யார் என்ற யுத்தம் பரபரப்பான அடுத்தடுத்த காட்சிகளை உருவாக்கக்கூடியது. காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. நீடிக்கும்வரை இலங்கைத்தமிழர் பிரச்சினையை முன்வைத்து அ.தி.மு.க. இந்த வியூகத்தை மேலும் மேலும் உற்சாகமாக எடுத்துச் செல்லும் என்பதே இன்றைய நிலைமை. ஏனென்றால் காங்கிரஸுடன் இருந்து கொண்டு தமிழர்களுக்காக பாடுபடுகிறேன் என்று கூறுவது மடியில் பூனையை கட்டிக்கொண்டு சகுனம் பார்ப்பது போன்றதே என்றே தமிழறிஞர்கள் பலரும் கருத்து கூறுகிறார்கள். ஆகவே அ.தி.மு.க. வகுத்துள்ள தமிழர் வியூகம் என்ற சக்கர வியூகத்தில் சிக்காமல் தி.மு.க. எப்படி தப்பிக்கப் போகிறது என்பதே அக்கட்சிக்கு இப்போது சிம்ம சொப்பனமாக இருக்கப் போகிறது.

# 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தினால் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் கவிழும்

**இலங்கை சிங்கள மக்களுக்கு சொந்தமான நாடு. இதற்கு சிங்கள மக்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள்**

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காகவே இந்தியா 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை அமுல்படுத்துமாறு வலியுறுத்துகின்றது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது. இந்நாட்டின் பெரும்பான்மை இனமான சிங்கள இன மக்கள் இதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டார்களென்றும் அவ்வியக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எமது நாட்டின் மீது இந்தியாவினால் பலாத்காரமாக சுமத்தப்பட்டதே 13 ஆவது திருத்தமாகும். இதனை நடைமுறைப்படுத்துவதென்பது இலங்கையின் இறைமை சுயாதிபத்தியத்தை மீறும் செயலாகும்.

இலங்கை சிங்கள மக்களுக்கு சொந்தமானநாடு. ஒருபோதும்சிங்களமக்கள் இதனை நடைமுறைப்படுத்த இடமளிக்கமாட்டார்.

அதனையும் மீறி இந்தியாவின் தேவைக்கான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் அமுல்படுத்த முனைந்தால் அரசு கவிழும். அரசாங்கத்திற்கிருக்கும் சிங்க, பௌத்த ஆதரவை இல்லாதொழிப்பதற்கே இந்தியா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அதற்காகவே 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு வலியுறுத்துகின்றது. அவ்வாறு அமுல்படுத்தினால் அரசாங்கம் கவிழும். பின்னர் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் தேவையான கைப்பொம்மை ஆட்சியாளர்கள் கையில் ஆட்சி போய் சேரும்.

எனவே, அரசாங்கம் தமக்குள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி 13 ஆவது திருத்தத்தை அரசியலமைப்பிலிருந்து நீக்க வேண்டும். இல்லாவிட்டால் இதனை அமுல்படுத்துமாறு இந்தியாவின் வலியுறுத்தல் தொடரும்.

இந்தியாவின் அழுத்தம் அதிகரித்துச் செல்லும். தற்போதைய சூழலில் அரசாங்கம் சீனாவுடனான நட்புறவை பலப்படுத்த வேண்டும்.

சீனாவின் முதலீடுகளை இங்கு ஊக்குவிக்க வேண்டும். இலங்கையில் சீனாவின் இராணுவ பயன்பாட்டுக்கும் இடமளிக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 7 பேருந்து சாலைகளுக்கு முகாமையாளர் நியமனம்

(மல்லாவி)

வடக்கு மாகாண இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் உள்ள மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, பருத்தித்துறை, கோண்டாவில், காரைநகர் ஆகிய 7 இடங்களில் உள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து சாலைகளுக்குமான புதிய முகாமையாளராக எஸ்.அஸ்கார் நேற்று வியாழக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியில் கடமையாற்றிய கே.கணேசபிள்ளை அவர்கள் ஓய்வு பெற்றதையிட்டு அடுத்தே அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மன்னார் இலங்கை போக்கவரத்து சபை பேருந்து சாலையின் முகாமையாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# மேசை வலைப் பந்தாட்ட சுற்றுப்போட்டி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையும் மேசை வலைப்பந்தாட்ட ஆண், பெண் அணிகளும் இணைந்து நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் அணிகளுக்கான மேசை வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணி முதல் யாழ். பல்கலைக்கழக உடற் கல்வி அலகின் மேசை,வலைப்பந்தாட்ட உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

Cey Lab Computer solution pvt Ltd அனுசரணையுடன் நடைபெறவுள்ள இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் யா/ மத்திய கல்லூரி, யூனியன் கல்லூரி, யாழ்ப்பாண ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஒஸ்கா விளையாட்டுக்கழகம், ஆனைக்கோட்டை றோ.க.த. கலவன் பாடசாலை, யா/ இந்துக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி ஆகிய அணிகள் பங்கு கொள்ளவுள்ளன.

பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி; உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகிய அணிகள் பங்கு கொள்ளவுள்ளன.

இதேவேளை, ஆண்களுக்கான இறுதிப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவைத் தலைவர் கே.ஐங்கரன் அறிவித்துள்ளார். (அ-9)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திருமதி கந்தசாமி -இராசமலர்



தோற்றம் 21 . 03 . 1936



மறைவு 02 . 05 . 2011

நிலாக்காட்டி சோறூட்டி
நெஞ்சொடு அணைத்தெம்மில்
அன்பை பொழிந்து நிதம்
இன்பங் கண்ட தாயே!
நீர் எம்மை பிரிந்த பின்பு
ஊட்டி விட நீர் இல்லையென
எண்ணும் எம் கண்களில்
கண்ணீர் சொரிகிறதே
என்று வருவீர்
எமக்கு அன்னம் ஊட்டிவிட...

என்றும் உங்கள்
நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தெல்லிப்பளை வீதி,
வட்டுக்கோட்டை.

(8181)

# உருவாக்கும் திறனின் உந்துசக்தி



## ஆன்மீகம் 34

நீங்கள் எல்லோரும் இப்போது சுவாசித்துக்கொண்டிருக்கிறீகளா? நாம் சுவாசித்துக்கொண்டிருக்கிறோம். என்பதையே நாம் பல சமயங்களில் உணர்வதில்லை. இவ்வுடல் உயிரோடு இருப்பதற்குதவும் மூச்சை, நாம் சிறிதும் இலட்சியம் செய்வதில்லை. நம்முடைய மூச்சைப் பற்றியும் சிறிது அறிந்துகொள்ள வேண்டும். நம் மூச்சு உயர்ந்த இரஹஸ்யத்தை நமக்கு அளிக்கக் காத்திருக்கிறது.

பிறகு, வருவது மனம். மனம் என்பது கருதுவது, கவனிப்பது, வெளிப்படுத்துதல். அடுத்ததாக வருவது புத்தி, தீர்மானங்கள், விவாதங்கள் ஒத்துக்கொள்ளுத்தல், மறுத்தல் நமக்குள் நடக்கும் இவை அனைத்தும் புத்தியின் பகுதிகளே.

உன் நினைவாற்றலைக் கவனித்தால், அது நல்லவற்றைவிட வேண்டத்தகாத சம்பவங்களைத்தான் அதிகமாக சேமித்து வைத்துக்கொள்ளும். புகழுரைகளைவிட நிந்தனைகளை நாம் நீண்ட காலம் பாதுகாத்து வைத்துக் கொள்கிறோம்.

பிறகு வருவது தான் எனும் எண்ணம்(அகங்காரம்)எந்தளவுக்குப் படிக்கிறோமோ அந்த அளவுக்கு அறிவாளி ஆகிறோம், விறைப்பாக ஆகிறோம், நாம் புன்னகையை இழந்து விடுகிறோம், நம்முடைய கள்ளமற்ற தன்மையை இழந்துவிடுகிறோம், நம்முடைய நட்புணர்வை இழக்கிறோம், அகங்காரமானது தன்மை என்பது நான் மற்றவர்களை விட உயர்ந்தவன்; எனக்கு நிறைய தெரியும், நான் அதிகம் படித்தவன் என்று நினைத்தல். இந்த தான் என்ற உணர்வு ஒருவரின் வாழ்விலிருந்து, பல அழகான விடயங்களை இழந்துவிடச்செய்கிறது. ஒருவருடைய இயல்பான குணாதிசயங்களைத் தடைசெய்கிறது. எல்லோரும் நம்மவர்கள் எனும் உணர்வுடனும், இயல்புத் தன்மையுடனும் இருக்கவேண்டும்.

இன்று நாம் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்வதற்கு ஏற்ற நல்லியல்புகள் கொண்ட மனிதர்களுக்குப் பஞ்சமாகிவிட்டது. நூலகங்களில் பல அறிவுக் களஞ்சியங்கள் உள்ளன. ஆனால், ஒருவரின் தனி ஈர்ப்புத்தன்மையையும் அவருடைய சக்தியின் உணர்வலைகளையும் அவரது நட்புணர்வோடு கூடிய இதமான அன்புணர்வு நிறைசூழலையும் புத்தக அறிவால் உணர்த்த முடியாது. ஆன்மாதான் நம்மிடம் ஏற்படும் நம் உடல், மனம், எண்ணங்கள், நம் சுற்றுப்புறம், நம் நடத்தை என எல்லாவற்றிலும் ஏற்படும் மாற்றங்களுக்கு ஒரு ஆதாரமாக இருக்கிறது. எல்லாமே மாறிக் கொண்டிருக்கின்றன என்றால் நாம் எப்படி மாற்றத்தை உணர்வது?

மாற்றமே அடையாத ஒரு ஆதாரமாக இருப்பதால் நம்மால் மாற்றத்தை உணரமுடிகிறது. அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நம்மால் மாற்றத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் மாற்றமே அடையாத அந்த ஒன்றை ஆத்மா என்று அழைக்கிறோம். இந்த ஏழு நிலைகளைப் பற்றிய அறிவு நமக்குள் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இது உற்சாகத்தையும் புத்துணர்ச்சியையும் கொண்டு வருகிறது. நாம் உயிர்ப்புடன் குழந்தைகள் போலாகிறோம். நீ உற்சாகத்துடனிருந்தால், நீ படைப்புத் திறனுடன் இருப்பாய், இல்லையெனில், நீ மிகவும் மந்தமாகிவிடுவாய்.



இன்றைய இளைஞர்கள் அதிகம் படிக்க விரும்புவதில்லை. ஏனெனில், அவர்கள் இலக்கியத்தில், விஞ்ஞானத்தில் சாதனை படைத்த மேதைகளிடம் மகிழ்ச்சி இல்லாமலிருப்பதைக் காண்கிறார்கள். இந்த அறிஞர்களை அவர்களால் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளமுடிவதில்லை. இதுதான் உலகம் முழுவதிலும் இன்று இருக்கும் சூழ்நிலை, இளைஞர்களிடம் நாம் ஒரு விஞ்ஞான நோக்கைக் கொண்டுவர வேண்டும்; புத்தகங்களில் கிடைக்காத நம்முடைய குணாதிசயங்களில் மிளிர்கின்ற நடைமுறைத்தத்துவத்தை உணர்த்த வேண்டும்.

ஒரு நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்பு- ஒரு குழந்தை ஒரு நாளைக்கு நானூறு முறை சிரிப்பதாகவும், ஒரு இளைஞர் பதினேழுமுறை சிரிப்பதாகவும் ஆனால், வயது வந்தோர் சிரிப்பதே இல்லை என்றும் சொல்கிறது. அவரிடம் எப்போதும் நிரந்தரமான சோகம் குடிகொண்டிருக்கிறது. நாம் இப்படி வாழ்ந்தால், நம்முடைய ஆக்கும் திறனை, நம்முடைய உற்சாகத்தை, நம்முடைய கலாசாரத்தை தடைசெய்கிறோம்.

நம் நாட்டில் நாம் மக்களின் சுயமதிப்பை அழித்துவிட்டோம். கிராமப்புற இளைஞர்களிடம், பெண்களிடம் சுயமதிப்பு இல்லை. நாம் அவர்களிடம் நேரடியாகவும், மறைமுகமாகவும், தெரிந்தும் தெரியாமலும் அவர்களிடம் தாழ்வு மனப்பான்மையை ஆணித்தரமாக வேரூன்ற வைத்துவிட்டோம். "நீ எதற்கும் இலாயக்கற்றவன்" காற்சட்டையையும், கோட்டையும் அணிந்து கொள். "அப்போதுதான் நீ உயர்ந்தவன்," இந்த எண்ணத்தைப் பொது ஜனத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும், வேறு பல வழிகளாலும், அவர்கள் வாழ்வில் திணித்துவிட்டோம். தொலைக்காட்சிகளில்கூட தமிழ் செய்தி வாசிப்பவர்கள் கோட்டும்-டையும் அணிந்திருக்கிறார்கள். ஒரு கிராமவாசி இதனுடன் தன்னை எப்படித் தொடர்புபடுத்திக்கொள்வார்? கிராமவாசி இதுபோன்ற உடை அணிந்தால்தான் எனக்கு மரியாதை கிடைக்கும் என்று நினைத்துக் கொள்வார். நாம் எல்லாவற்றையும் அப்படியே நகலெடுக்கத் தேவையில்லை. நமது செய்தி வாசித்தல் அப்படியே பி.பி.சி., சி.என்.என். நகல். நாம் ஆக்கபூர்வமான கொள்கைகளைக் கொண்டு வரவேண்டும். நமது கிராமப்புற இளைஞர்களின் ஆற்றலை மேம்படுத்தவேண்டும். அவர்களுக்குள் சுயமதிப்பை ஏற்படுத்தவேண்டும். சுயமதிப்பு இல்லாவிட்டால் ஆக்கத்திறன்

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

இருக்காது. ஆக்க சக்தியில்லாத போது, வேலையில்லாதநிலை ஏற்படும். இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம் எதையும் புதியதாக தொழில் தொடங்கும் ஆர்வமின்மையும், ஊக்க மின்மையும்தான், இவை எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் .தாழந்த சுயமதிப்பீடுதான்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 34

### இரேகைகளின் அமைப்பு

**9.** இரேகைகளில் ஆங்காங்குப் புள்ளிகள் காண்படும். இது பலவாறாக அமைந்திருக்கும். இது சிறிதாகவும் பதிந்தும் பதியாமலும் தோன்றும். பொதுவாகப்புள்ளி இரேகையில் இருந்தாலும் அல்லது தனியாகவிருந்தாலும் அது தடைக்குக் காரணம். இதுவும் நலமன்று. புள்ளி கறுப்பு, சிவப்பு, நீலம், மஞ்சள், வெண்மை முதலிய நிறங்களிலும் தோன்றும். ஆயினும், தொந்தரவைக் குறிப்பதே.


**10.** சங்கிலி போன்ற கோர்வையான இரேகை, இடைவிடாது தடங்கலைக் குறிப்பதாகும். புத்தி இரேகையில் ஒரு பகுதியாயிருந்தால் தன்னடக்கமில்லாததைக் குறிக்கும். சங்கிலிபோன்ற இரேகையில் உயிர்ப்புள்ள சக்தி செல்வதற்கு அடுத்தடுத்து தடையாகும், இது மிகக் கொடுமையாகும். அந்தச் சங்கிலிக் கோர்வை முக்கியமாய் ஆயுள் இரேகையில் காணப்படுகிறது.

சக்தி

சங்கிலி இரேகைக்கருகில் சமமாய் மற்றோரு இரேகை சுத்தமாய் சென்றிருந்தால் பாதுகாப்புள்ளதாகும்.

**11.** மூக்கோண இரேகைக்குறி தனிமையாகவும் காணப்படும். பல இரேகைகளின் குறுக்கிட்ட சந்திப்பிலும் அமையப்பெறும். தனித்த முக்கோணத்திற்குரிய பலன் சில சந்தர்ப்பத்திலேற்படும். ஒரு தனித்த முக்கோணக் குறி ஒரு விரலுக்கடியிலாவது, கிரக மேட்டிலாவது இருந்தால் அபாரமான மனோ சக்தியையுடைய வரெனக் காட் டும். குருமேட் டிருந்தால் மிக்க மேன்மையான மனோ விர்த்தியைக் குறிக்கும். சந்திர மேட்டில் முக்கோணக் குறியிருந்தால் அது






# ரேகைகளும் கிரகங்களும்

ஆச்சரியமான கற்பனா சக்தியைக் காட்டும். இக்குறி அகன்ற மனோராஜ்யத்தை விளக்கும். ஆனால், தேகாரோக்கியத்தைப் பற்றியதன்று. குறுக்கிட்ட இரேகைகளால் காணப்படும் முக்கோணக் குறிக்கு அவ்வளவு விசேட பலனில்லாவிடினும் முக்கோணம் அமைந்த இடத்துக்குத்தக்க மனோ பலத்தைக் கொடுக்கும்.

**12.** இரேகைகள் பின்னலாகி வலைபோல் காணப்படில் வலைக் குறியென்று சொல்லப்படும். இதில் உயிர்ப்புள்ள மின்சார சக்தி சரிவரச் செல்வது முடியாததாகும். கம்பிகளாக் கப்பட்ட வலையில் மின்சார சக்தி எங்ஙனம் செல்லத் தடைப்படுமோ அவ்விதமே வலைக்குறியிலும் சக்தி தாராளமாகச்செல்ல முடியாமல் தேங்கித் தேங்கி வீணாகும். வலைக் குறி பொதுவாகக் கஷ்டத்தையும் சங்கடத்தையும் குறிப்பதாகும். இரேகைகள் சிவந்திருந்தால் இன்னும் அதிகக்கஷ்டத்தை அறிவிக்கும். வலைக்குறி மங்கலாயிருந்தால் விசேடமாகக் கெடுதி உண்டாகாது. கிரக மேடுகளில் வலைக்குறி காணப்படில், அது அந்தக் கிரகம் கெடுதி செய்வதைக் குறிக்கும். தேகாரோக்கியமும் பாதிக்கும். வலைக்குறி சதுரம் சதுரமாயிருந்தால் கெடுதி விளையாது. வலைக்குறி எவ்வளவுக்குப் பதிந்து காணப்படுகிறதோ அவ்வளவுக்குத் துர்ப்பலனாகும். நேர் இரேகைகளும் குறுக்கான இரேகைகளும் சதுரம்கட்டி மெல்லியதாயிருக்குமாயின் கஷ்டங்கண்ட விடங்களிலெல்லாம் பாதுகாப்பு மிகுந்துவருவதை விளக்கும். ஆகையால் வலைக்குறியை நன்றாகக் கவனித்துப் பலனறிய வேண்டும்.

(தொடரும்)

# அபிவிருத்திப்பணிகள் உண்டு; அரசியல் தீர்வுதான் எங்கே?

## இந்திய நாடாளுமன்ற குழுவினர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பு வடமாகாணத்தில் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடியதான அரசியல் தீர்வு இன்னும் முன்வைக்கப்படவில்லை என இந்திய நாடாளுமன்ற குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு ஆறு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்த இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித்தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்ற குழுவினர் நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

இந்தக்குழுவினர்க்கும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை யாழ். ஞானம் ஹோட்டல் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு இந்திய நாடாளுமன்ற குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக மேலும் தெரிவருவதாவது,

போருக்கு பின்பு வடபகுதி பல முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றது எனவும் ஆனால் அரசியல் தீர்வு இன்னும் முன்வைக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டிய இந்திய நாடாளுமன்ற குழுவினர் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இந்தக் கலந்துரையாடலில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளினால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சுட்டிக்காட்டப்பட்டதோடு இரு நாட்டு கடற்படையினரும் கூட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலமே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வட மாகாணத்தில் மாலை 6 மணிக்கு பின்பு எவரும் வெளியில் நடமாட முடியாத சூழ்நிலையுள்ளதாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றவே என கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த காலத்தில் அவ்வாறான சூழ்நிலை காணப்பட்டது. ஆனால் தற்போது 24 மணி நேரமும் ஏ9 வீதியூடாக மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர்.

தவறான பிரசாரங்களில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். அதை நம்பாதீர்கள் என கூறினார்.இவ்வாறு மீள்குடியேற்றம், அபிவிருத்திப் பணிகள். மக்களின் வாழ்வாதாரம் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப் பட்டது. (அ-6)


## சமுர்த்தி உதவித்திட்டம்

யாழ். மாவட்ட சமுர்த்தி திட்ட பயனாளிகளுக்கு வழங்கவென இம்முறை 47 மில்லியன் ரூபா அரசினால் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் இ.சிவசிறி தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்ற முத்திரையின் பெறுமதியினை இம்மாதம் அமுலுக்கு வந்த புதிய திட்டத்தின் ஊடாக இம்முறை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் தற்போது 52 ஆயிரத்து 819 சமுர்த்தி பயனாளிகள் உள்ளனர். சமுர்த்தி திட்டத்திற்காக யாழ். மாவட்டத்திற்கு என கடந்த மாதம் வரை 34 மில்லியன் ரூபா வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


யாழ்ப்பாணக் கம்பன் கழகம் நடத்தும்

### கம்பன் விழா-2012



இடம்;- நடராசா பரமேஸ்வரி மண்டபம்,
நல்லூர் கந்தசுவாமி கோவில்
அருகாமை,நல்லூர்
காலம்;- 21.04.2012 சனிக்கிழமை காலை
9.30 மணி முதல்

தலைமை:- பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்
(துணைவேந்தர்,யாழ் பல்கலைக்கழகம்)

தொடக்கவுரை:- திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
(யாழ்.மாநகரசபை முதல்வர்)
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

பங்குபெறும் அறிஞர்கள்
* கம்பவாரிதிஇ.ஜெயராஜ்
* புலவர் இரெ.சண்முகவடிவேல் (தமிழ்நாடு)
* இலக்கியச் சுடர் த.இராமலிங்கம் (தமிழ்நாடு)
* கவிஞர் சோ.ப.
* தமிழருவி த.சிவகுமாரன்
* சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் மற்றும் பலர்

நிகழ்ச்சிகள்
சுழலும் சொற்போர் கவியரங்கம்
வழக்காடு மன்றம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
"கம்பன் புகழ் பாடி கன்னித்தமிழ் வளர்ப்போம்"
யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தினர்

நீண்ட இடைவெளியின் பின் யாழ். மண்ணில் இடம் பெறும் கம்பன் விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

(சி-6396)


## அறிவித்தல்

### நல்லூர் பிரதேச சபை- நல்லூர் உப அலுவலகம்

### ஆதன பெயர் மாற்றம்

**ஆதன இலக்கம்-578,484, அரியாலை வீதி, வட்டாரம்-12**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் 12, அரியாலை வீதியில் உள்ள 484 ஆம் இலக்க ஆதனம் சொந்தக்காரர் உ.கோ.கனகரத்தினம் கைம்பெண் பொன்னம்மா எனும் பெயரிலும் 578 ஆம் இலக்க ஆதனம் கனகரத்தினம் பொன்னம்மா எனும் பெயரிலும் எமது ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

578 ம் இலக்கத்தையுடைய ஆதனத்தை 2011.01.24 ஆம் திகதிய 56ம் இல உறுதி மூலம் நில பரப்பு 2.5ஐ கனகரத்தினம் குலசேகரப்பிள்ளை தனது பேரனாகிய கிருஷ்ணபிள்ளை ரஞ்சித்குமாருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

484ம் இலக்கமுடைய ஆதனம் 3 பகுதிகளாக பிரிக்கப்பட்டு 1 பகுதி 2010.11.28ம் திகதிய 50ம் இலக்க உறுதி மூலம் நி.பர 4.5ஐ கனகரத்தினம் குலசேகரப்பிள்ளை தனது மருமகனான அற்புதராசா பரமேஸ்வரனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். 2ம் பகுதி 1993.02.17ம் திகதிய 7478ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நி.பர. 1.5யும் 2011.02.17ம் திகதிய 66ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நி.பர 2.5யும் சேர்த்து நி.பர. 4ஐ சின்னையா கிருஷ்ணபிள்ளை பெண் இந்துமதி என்பவர் பெறுகின்றார். 3ம் பகுதியை 1993.10.05ம் திகதிய 948ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நி.பர 1.5யும், 2011.02.17ம் திகதிய 67ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நி.பர 2.5யும் சேர்த்து நி.பர 4ஐ கந்தசாமி நாகேந்திரம் பெண் கலைமதி என்பவர் பெறுகின்றார்.

578ம் இலக்க ஆதனத்தினையும், 484ம் இலக்க ஆதனத்தின் பகுதிகளையும் நல்லூர் பிரதேச சபை ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய மேற்குறிப்பிட்ட நபர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனங்களான 578, 484 இன் பகுதிகள் மேற்குறிப்பிட்ட நபர்களின் பெயர்களிற்கு ஆதனப் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ப.வசந்தகுமார்,**
**தலைவர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**20.04.2012** (சி-6403)

## அறிவித்தல்

### நகரசபை, பருத்தித்துறை

### ஆதனப் பெயர் மாற்றம்

ஆதன இலக்கம்.148/25, கடற்கரை வீதி,வட்டாரம்.04

எமது நகரசபைக்குட்பட்ட வட்டாரம்04, கடற்கரை வீதியில் உள்ள 148/25 எனும் இலக்க ஆதனம் 2001 ஆம் ஆண்டு மீள்மதிப்பீட்டில் மகாலிங்கம் சாமிநாதன் என்பவரின் பெயர் சிவசம்பு பெண் சிவக்கொழுந்து என மாற்றப்பட்டது.

இந்த ஆதனமானது தங்களின் 200 வருடங்களுக்கு முன்னர் தங்கள் பிதாவின் பூட்டன் கதிர்காமர் அவர்களது ஆட்சிக்குட்பட்டது எனவும் வெளிப்படுத்தி உறுதி இலக்கம் 2558/27.01.2003 மூலமும், அதனைத் தொடர்ந்து 2005.06.07 ஆம் திகதிய 4425ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலமும் 2003.04.06 ஆம் திகதி நிலஅளவையாளர் ஆ.வேல்முருகு அவர்களால் 1345 ஆம் இலக்கப்படத்தில் விந்தாரிக்கப்பட்டவாறு நிபர 01 குளி 13.5 விஸ்தீரணமான ஆதனத்தை பத்மநாதன் கதிர்காமநாதன் எனும் பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். இந்த ஆதனத்திற்குரிய உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோரதவிடத்து குறித்த ஆதனமானது பத்மநாதன் கதிர்காமநாதன் என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**சபா.ரவீந்திரன்,**
(சி-6282) **தலைவர், நகரசபை , பருத்தித்துறை.**

# தென்சூடான் உலகவங்கியில் உறுப்பினராக இணைந்தது

(வோஷிங்டன்)

உலக வங்கியின் உறுப்பினர்கள் நாடு பட்டியலில் உலகின் புதிய நாடும் வளர்ந்து வரும் நாடுமான தெற்கு சூடான் இணைந்துள்ளது. இது குறித்து ஒப்பந்தத்தில் தெற்கு சூடான் நிதியமைச்சர் கோஷ்தி மேனிபி காய் நேற்று முன்தினம் கையெழுத்திட்டார்.

உலக வங்கியின் உதவியுடன் தெற்கு சூடானில் பல்வேறு முன்னேற்றப்பணிகள் நடைபெற்று வரும் வேளையில் இந்த ஒப்பந்தம் மேலும் பயனுள்ளதாக இருக்கும். (அ-2)

# ஈராக் குண்டுவெடிப்பில் 15 பேர் உயிரிழப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் 2 இடங்களில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 15 பேர் பலியாகியுள்ளனர். இதில் மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். பாக்தாத் மற்றும் கிர்குக்கில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கள் பயங்கரவாதிகளின் சதி வேலையாக இருக்கலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-2)

# புரட்சித்தலைவி ஆங் சாங்சூகி வெளிநாடுகளுக்கு பயணிக்க திட்டம்

(யாங்கூன்)

மியன்மார் நாட்டின் ஜனநாயக தலைவர் ஆங் சாங் சூகி நோர்வே நாட்டுக்குப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

மியன்மார் நாட்டுக்கு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றுத் தந்தவர் ஆங் சாங். இவரின் மகள் ஆங் சாங் சூகி. பிரிட்டனில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்தவர். தன்னுடன் படித்த மைக்கேல் ஆரிஸ் என்பவரை காதலித்து மணந்தார்.

இவர்களுக்கு அலெக்சாண்டர் மற்றும் கிம் என்ற மகன்கள் உள்ளனர்.

99 ஆம் ஆண்டு இவர் கணவர் புற்றுநோயால் லண்டனில் இறந்த போது கூட தாயத்தை விட்டு செல்லவில்லை.

வெளிநாடு சென்றால் இராணுவ அரசு தன்னை தாயகம் திரும்ப அனுமதிக்காது என கருதிய சூகி இராணுவ ஆட்சியாளர்களால் பல ஆண்டு காலம் வீட்டு சிறையில் அடைக்கப்பட்டு கிடந்தார்.

தற்போது அவர் அங்கு நடந்த இடைத்தேர்தலில வெற்றி பெற்று பாராளுமன்ற . உறுப்பினராகியுள்ளார்.

ஜனநாயக நடைமுறைகள்மியன்மாரில் தலையெடுத்துள்ளதால் அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை தளர்த்த உலக நாடுகள் முன்வந்துள்ளன.

சமீபத்தில் மியன்மார் வந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் சூகியை லண்டன் வரும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில் எதிர்வரும் ஜூன் மாதம் சூகி நோர்வே நாட்டுக்கு பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

இதை அவரது தேசிய ஜனநாயக லீக் கட்சியும் உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால் அவர் நோர்வே



செல்லும் திகதி இன்னும் உறுதிப் படுத்தப்படவில்லை.

இந்நிலையில் மியன்மார் ஜனாதிபதி தீன் சீன் ஜப்பானில் ஆறு நாட்கள் பங்கேற்கும் ஆசிய மாநாட்டில் பங்கேற்கிறார்.

ஜப்பானில் நேற்று முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், வியட்நாம், மியன்மார் ஆகிய நாடுகள் பங்கேற்கும் மாநாடு நடக்கின்றது.

இதில் பங்கேற்க மியன்மார் நாட்டை சேர்ந்த ஜனாதிபதி 28 ஆண்டுகளுக்குப் பின்னர் ஜப்பானுக்குச் செல்வது இதுவே முதல் முறையாகும். (அ-2)

# சூடான், தென்சூடானிடையே மோதல்; 22 இராணுவத்தினர் பலி



சூடான் மற்றும் தென் சூடான் எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் இரு நாட்டு இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலில் 22 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

தற்போது தனி நாட்டு சுதந்திரத்துடன் செயற்பட்டு வரும் தென் சூடானிடம் இருக்கும் எண்ணெய் வளம் நிறைந்த பகுதி ஒன்றை தங்களுக்கு தரும் படி சூடான் மிரட்டல் விடுத்துள்ளது.

மேலும் தெற்கு சூடான் ஒரு வேளை அப்பகுதிகளை தராத பட்சத்தில் தாக்குதல் நடத்தப்போவதாகவும் சூடான் அறிவித்திருந்தது.

இந்நிலையில் சூடான், தெற்கு சூடான் இராணுவத்தினர் எல்லைப் பகுதியில் குவிந்து வந்தனர்.

நேற்று முன்தினம் சூடான் வீரர் ஒருவர் ஆற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருக்கும் தருணத்தில் தென் சூடான் வீரரை துப்பாக்கியால் சுட மோதல் வெடித்தது.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நடைபெற்ற பயங்கர துப்பாக்கி சண்டையில் 7 தெற்கு சூடானிய வீரர்களும் 15 சூடானிய வீரர்களும் கொல்லப்பட்டனர்.

தற்போது இருநாட்டு வீரர்களுக்கும் சண்டைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் இரு நாட்டு இராணுவமும் தங்களது படைகளை எல்லைப்பகுதியான மெய்ராம் நகரத்தில் குவிந்து வருகின்றன.

ஆனால் இந்த துப்பாக்கி சூடு புரிந்துணர்வு அற்ற நிலைமை காரணமாக ஏற்பட்டதாக தெற்கு சூடானின் அரசு தொடர்பாளர் பெஞ்சமின் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (அ-2)



தாய்லாந்து பிரதமர் இன்குலக் சினவத்ரா பீஜிங்கிற்கு அரசு முறையாக விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். அவரை சீனத் தலைவர் ஹு ஜிண்டாபோ வரவேற்றதைப் படத்தில் காணலாம்.

## உலக தரிசனம்

# வடகொரியா அணுகுண்டு சோதனை; செயற்கைக்கோள் படம் அம்பலம்

ரொக்கெட் அனுப்பும் முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்தத்தயார் ஆகின்றது. இது தொடர்பாக செயற்கைக்கோள் படமும் வெளியாகியுள்ளது. கடந்த 13 ஆம் திகதி அன்ஹா-3 என்ற ரொக்கெட்டை வடகொரியா விண்ணில் செலுத்தியது. அந்த ரொக்கெட் விண்ணுக்கு அனுப்பட்ட சில நிமிடங்களில் வானில் வெடித்துச் சிதறி கடலில் விழுந்தது. வடகொரியாவின் ரொக்கெட் அனுப்பும் முயற்சி தோல்வி கண்டது.

வடகொரியாவின் ரொக்கெட் அனுப்பும் முயற்சி தோல்வி கண்டபோதே அந்த நாட்டின் அடுத்த முயற்சி அணுகுண்டு சோதனையாகத் தான் இருக்கும் என்று சர்வதேச நாடுகள் கருதின. இப்போது அது ஊர்ஜிதமாகி உள்ளது. இது தொடர்பாக வடகொரியா கூறுகையில், நாங்கள் ஏற்கனவே செய்து கொண்ட உடன்பாட்டிலிருந்து விடுபட்டு பழிவாங்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என கூறியுள்ளது.

இது பற்றி சியோலில் அமைந்துள்ள கொரிய இராணுவ ஆராய்ச்சி இன்ஸ்டிடியூட்டை சேர்ந்த பேயிக் சீயங்க் ஜு கூறும்போது, வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்தினால் அது அதிகளவில் யுரேனியம் செறிவூட்டிய அணுகுண்டு சோதனையாகத் தான் இருக்கும். தனது அணுசக்தி ஆற்றலை உலகுக்கு காட்டுகின்ற விதத்தில் வடகொரியா இந்த நடவடிக்கையை எடுக்கும் என்றார். 70 வருடங்களுக்கு முன்பாக ஜப்பானில் ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணுகுண்டு போன்ற ஒன்றையே வடகொரியா பரிசோதித்து பார்க்கும் என்றும் இராணுவ வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (அ-2)

# இந்.-அமெ.உறவை மேம்படுத்த முதலீட்டுக்கே முன்னுரிமை

## இந்தியாவுக்கான அமெ. தூதர் தெரிவிப்பு



இந்திய- அமெரிக்க உறவை மேம்படுத்தும் வகையில் முதலீட்டை அதிகரிக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்று இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்டுள்ள நான்சி பாவெல் தெரிவித்துள்ளார்.

மேலும் இரு தரப்பு உறவுகளை மேம்படுத்த முன்னுரிமை அளிக்க வேண்டிய 5 விடயங்களையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தடைகளை நீக்கும் வகையில் வர்த்தகத்தையும் முதலீட்டையும் அதிகரிப்பது. அதற்காக இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் தொடர்பாக பேச்சு நடத்துவது, அணு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதுடன் புதிய துறைகளை வர்த்தகத்துக்கு திறந்து விடுவது உள்ளிட்டவற்றிற்கு முன்னுரிமை அளிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கான முதல் அமெரிக்க பெண் தூதராக இவர் கடந்த செவ்வாய்க்கிழமை பதவியேற்றுக் கொண்டார்.

அவருக்கு வெளியுறவுத்துணை அமைச்சர் வில்லியம் பர்ன் பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

அப்போது பேசிய பாவெல் அனைத்து நிலைகளிலும் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது சர்வதேச அளவில் இரு நாடுகளும் ஒன்றுபட்டு செயற்படுவது. இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைதி, செழுமை, ஜனநாகம் தழைத் தோங்கவும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைளிலும் இந்தியாவின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வது ஆகியவை முன்னுரிமை பெறும் அம்சங்களாகும் என்று அப்போது அவர் தெரிவித்தார்.

இந்த வார இறுதியில் அவர் இந்தியாவிற்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். இந்தியாவில் பணியாற்றுவது தனக்கு அளிக்கப்பட்ட கௌரவம் என்றும் அதை மிகவும் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

பானையில் இருந்தாலன்றோ
அகப்பையில் வரும். - *தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## என்ன மோனே!... இந்தியக் குழுவால ஏதேனும்...

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு இந்திய நாடாளுமன்றக் குழு அந் நாட்டு எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் இலங்கை வந்துள்ளது. இலங்கை வந்த அந்தக் குழு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கும் வந்திருந்தது.

யாழ்ப்பாணம் வந்த குழுவிடம் தமிழ்ப் பாராளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப் பட்ட சமூகப் பிரதிநிதிகள் நிலைமையைக் கூறினர்.

இந்தியக் குழு யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள தென்பதை அறிந்த பழம் பண்டிதர் ஒருவர், இந் தியக் குழுவை சந்தித்த ஒரு அன்பரைப் பார்த்து என்னமோனே! இலங்கை வந்துள்ள இந்தியக் குழுவால் எங்களுக்கு ஏதேனும் விமோசனம் கிடைக்குமோ என்று வினவினார்.

அதற்கு அந்த அன்பர் 'கண்டதால் இன்பம் கதைத்தால் பேரின்பம்' அவ்வளவுதான் என்றார்.

என்னமோனே நான் கேட்டதற்கும் நீவிர் கூறு வதற்கும் என்ன தொடர்பு என்றார்.

ஐயா! நாங்கள் ரில்கோ ஹோட்டலில் இந்தியக் குழுவைக் கண்டோம். அது எங்களுக்கு இன்பம்.

நாலு பேருக்கு சொல்லலாமல்லவோ! நாங்கள் இந்தியக் குழுவை கண்டனாங்கள். அவர்களு டன் இராப்போசனம் உண்டனாங்கள் என்று. அதைத்தான் இன்பம் என்றேன் என்றார்.

அவ்சரப்பட்ட பழம் பண்டிதர் அப்படியானால் பேரின்பம் எது? என்றார்.

நாங்கள் இந்தியக் குழுவுடன் விருந்து உண்ட வர்கள். எங்களைவிட இன்னொரு பகுதியினர் இந்தியக் குழுவிற்கு சில விடயங்களை எடுத்துக் கூறியவர்கள்.

தங்கள் மனதில் நீண்டகாலமாக சுமந்து வைத்திருந்த- இனப்பிரச்சினையில் முக்கிய பிரச் சினை என்று தாங்கள் கருதியவற்றை இந்தியக் குழுவிடம் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

சுஷ்மா சுவராஜ் தலைமையில் வந்திருந்த இந் தியக் குழுவினர் இவர்கள் கூறியதைக் கேட்டார் களோ இல்லையோ? கூட இருந்த எங்களவர்கள் கேட்டிருப்பார்கள் அல்லவா?

போகிறகாலத்தில், ஒரு அஞ்சலி உரைக்கே னும் அது பயன்படும் அல்லவோ!

சுஷ்மா சுவராஜ் யாழ்ப்பாணத்திற்கு வந்த போது எங்கள் பிரச்சினையை இவர் எடுத்துக் கூறினார். இவரின் கருத்துக்களைக் கேட்ட இந்தியக்குழு அதிர்ந்து போயிற்று... என்று புகழ் பாடி உரையெழுதலாம் அல்லவா?

இதுதான் பேரின்பம் என்றேன்.

அப்ப! தம்பி எங்கட பிரச்சினை... பண்டிதர் ஏக்கத்துடன் கேட்டார்.

ஐயா! இந்தியக் குழுவைச் சந்தித்த ஒரு தமிழ்ப் புத்திஜீவி கூறியதை இவ்விடத்தில் சொல்லத்தான் வேண்டும்.

'...கால்போனது போனது தான். உயிர் போனது போனதுதான். மானமிழந்தது இழந்ததுதான். இப்ப இங்க நடப்பதெல்லாம் வெறும் கண்துடைப்பு' இதைவிட வேறு எதை நான் கூற.

ஆனாலும் ஒன்று சுஷ்மா சுவராஜிடம் கருத்துக் கூறியவர்களின் முகத்தில் தனி ஈழம் கிடைத்து விட்ட மகிழ்ச்சி தெரிந்தது.

என்ன செய்வது! எங்கள் பிரச்சினை என்ன வென்று எங்களுக்கு இன்னமும் தெரியவில்லை.

இதை நிச்சயம் நாச்சியப்பன் உணர்ந்திருப்பார்.

# பூட்டிய வீட்டில் புகுந்த திருடர் தங்க நகைகளை திருடினர்

## யாழ். சிவப்பிரகாசம் வீதியில் நடந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் சிவப்பிரகாசம் வீதியில் உள்ள இரண்டு வீட்டில் பல இலட்சம் ரூபாய் பெறுமதி யான தங்க நகைகள் மற்றும் இலத் திரனியல் சாதனங்கள் என்பன திருடப் பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நாச்சிமார் கோவில் பகுதியிலுள்ள சிவப்பிரகாசம் வீதியிலுள்ள இரண்டு வீட் டில் நேற்று முன்தினம் இரவு திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை புங்குடுதீவுபாணாவிடைச்சிவன்கோவில் வருடாந்தத்திருவிழாஉற்சவத்தில்கலந்து கொள்வதற்காக சாந்தகுமார் என்பவர் தனது குடும்பத்தினருடன் சென்றுள்ளார்.

குடும்பத்தினருடன் சென்ற அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 4 மணியளவில் வீட்டிற்கு வந்து பார்த்த போது வீட்டிலிருந்த பொருட்கள் சிதறிக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

வீட்டின் முன்பக்க வாயில் பூட்டிய வாறே இருந்துள்ளது. ஆனால் வீட் டின் பின்பக்க வாயிலை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் பொருட்களைத் திருடிச் சென்றனர்.

தொலைக்காட்சிப் பெட்டி, லப்டொப் வகைக் கணனி, டி.வி.டி. பிளேயர், டிஜிற்றல் கமரா போன்ற இலத்திரனி யல் சாதனங்கள் மட்டும்தான் திருடப் பட்டுள்ளது என ஆறுதல் அடைந்த வீட் டின் உரிமையாளருக்கு வீட்டின் அறை யினை திறந்து பார்த்தபோது தான் வீட்டின் அறையில் அலுமாரிக்குள் இருந்த நகைகள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலி ஸாருக்கு தகவல் கொடுக்கப் பட்டதோடு முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று முன்தினம் மாலையும் நேற்றுக்காலை யும் குறித்த வீட்டுக்குச் சென்று விசார ணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை இந்த வீட்டின் அரு கில் நீண்ட நாட்களாக பூட்டி வைக்கப் பட்டுள்ள வீட்டினையும் திருடர்கள் உடைத்து பொருட்களைத் திருடியுள்ள னர் என்பது பொலிஸ் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

ஒரே இரவில் ஒரேபாணியில் பூட்டியி ருந்த இரண்டு வீடுகளிலும் மேற்கொள் ளப்பட்ட இந்த திருட்டு சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டுள் ளது. (ந-6)

## தபால் பொதியில் போதைப்பொருள்

கொழும்பு மத்திய தபால் பரிமாற் றத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த தபால் பொதியொன்றில் இருந்து ஒரு தொகை போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட் டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

இந்தச்சம்பவம் தொடர்பில் சந்தேகத் தின் பேரில் வெளிநாட்டவர் ஒருவர்கைது செய்யப்பட்டுள்ளதாகபொலிஸ்ஊடகப்பேச் சாளர்அஜித்ரோஹணதெரிவித்துள்ளார்.

கொழும்பு மத்திய தபால் பரிமாற் றகத்திற்கு பெண் ஒருவரின் பெயரில் 3 தபால் பொதிகள் கிடைத்துள்ளன. இந்த பொதி களை சோதனையிட்டபோது வாழ்த்துமடல் போன்ற மடலொன்றிற்குள் இருந்து போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் கூறுகின்றனர்.

இந்த பொதிகளை கொண்டு செல்வத ற்காக வெளிநாட்டவர் ஒருவர் வருகை தந் துள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-2)

## மஹா கும்பாபிஷேகம்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான புனராவர்த்தன 33 குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10.15 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கான கிரியைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதலும் நடைபெறவுள்ளது என ஆலய தேவஸ்தானத்தினர் அறிவித் துள்ளனர். (அ-9-78)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேலணை மேற்கு ஞான வைரவர் தேவஸ்தான மஹா கும்பாபிஷே கப் பெருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரையுள்ள சுபவேளையில்நடைபெற வுள்ளதாக ஆலய தர்மகத்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

இவற்றிற்கான கிரியைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை தொடக்கம் நடைபெறவுள்ளதாகவும் மறு நாள் செவ்வாய்க்கிழமை பக்தர்கள் பால்க் காப்பு சாத்துதலும் நடைபெறவுள்ளதாக அறிவித்துள்ளனர். (அ-9)




குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக் கும் என்பர். ஒருவர் ஒரு பிழையைச் செய்யும்போது கவலைப்படுவதில்லை. பின்னர் தான் அதனை நினைத்து வருந்துவர். இதனை உலகியல்பு என்பர். தனது செயற்பாட்டால் தீமை களை எதிர்கொள்ள நேரும்போது கவலை உண்டாகிறது. கவலை என் பது பல வழிகளாலும் ஏற்படும் சிக் கலாகும். பின்விளைவுகளை எண்ணிப் பாராமல் செய்த காரியம் பெருங்கவ லையைத் தரும். மணிவாசகர் இத் தகைய கவலையை அனுபவித்தவர். இறைவழிபாடு செய்யாமல் உலகியல் இன்பமே மெய்யான இன்பமென எண்ணி வாழ்வு நடத்தியவர். அவ ருக்கு குரு வடிவில் இறைவன் அருள் கிட்டியது. ஆனால் அதை அவர் பெரி தாகக் கருதாமல் மீண்டும் உலகியல் செயற்பாடுகளிலே ஈடுபட்டார். எனவே மீண்டும் இறையருளைப் பெறவழிபாடு செய்ய நேர் ந்தது.

முடிவாகிய பேரன்புடைய மெய் யன்பர்களை அவரினும் மேம்பட்ட பேரருளினால் இறைவன் ஆட்கொள் ளும் கருணையை நினைத்து வழிபடு கின்றார். தன்னுடைய பொய்யான அன் பையும் ஒரு பொருட்டாகக் கொண்டு முன்னர் இறைவன் ஆட்கொண்ட கருணையை எண்ணிப் பார்கிறார். அப்போதுதான் இறைவனுடைய பெருந் தன்மையை உணர்கிறார். இறைவனு டைய பிறிதொரு அருட்செயல் அவருக்கு நினைவுக்கு வருகிறது. பொங்கி நின்றெ ழுந்த பாற்கடலிலே தோன்றிய நஞ் சினை தான் உண்டு தேவர்களுக்கு அமு தம் அளித்த வள்ளல் தன்மையை வணங் குகின்றார். பிறருக்காக நஞ்சுண்பது மனிதரால் முடியாத காரியம். ஆனால் கடவுட் குணமுடையவர் இத்தகைய செயலைச் செய்யும் பண்புடையவர். உண்ணற்கரிய நஞ்சை யுண்டவர் எனச் சம்பந்தர் பாடியுள்ளார். விரி கடல் நஞ் சுண்டு அமுதம் ஈந்த தேவன் என நாவுக் கரசர் போற்றியுள்ளார். கடல்நஞ்சம் அருந்து நம்பி எனச் சுந்தரர் பாடியுள்ளார்.

மணிவாசகர், சம்பந்தர், சுந்தரர் பாடல் களால் இச்செய்தியை அறிந்துள்ளார். நீல கண்டனின் கருணை எல்லோருக் கும் நலமே செய்யும் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டாகின்றது. அதனால் நஞ்சயின்று வானோர்க்கு அமுதம் ஈ வள்ளல் போற்றி எனப் போற்றி வழிபடு கிறார்.


அத்தோடு நலமார்ந்த நின் திரு வடிகளை நாயேற்குத் தந்தருள வேண் டுமென விண்ணப்பித்து வழிபடுகிறார். பிறருக்காகத் தன் உயிருக்கு விளை யும் கேட்டையும் எண்ணிப் பாராமல் ஏற்ற உதவி செய்யும் உயர்ந்த உள்ள முடையவரே நாம் நேரில் காணும் கடவுளராகும். இந்த உயர்ந்த பண் பினை உலகியல் நிலையில் வைத்து வள்ளுவர் நயத்தக்க நாகரிகம் எனக் குறட் பாவிலே குறிப்பிட்டுள்ளார்.

வள்ளுவர் மனித வாழ்வியலில் இப்பண்பைச் சுட்டிக்காட்டினார். மணிவாச கர் பக்தி வாழ்வில் இப்பண்பை எடுத் துரைத்துள்ளார். அவர் தன்னை இப் பண்பு நிலையில் வைத்து ஒப்பிட்டுப் பார்க்கிறார். அப்போது தான் அவரு க்குத் தன்குறை நன்றாகத் தெரிகின் ற்றது. நாய் போலத் தான் உலகில் வாழ் வதையிட்டு கவலை கொள்கின்றார். பொய்யான அன்புடைய தன்னை ஆட் கொண்ட பெருமையான குணத்தை நினைந்து வருத்துகின்றார். இறைவன் உயிர்களிடத்துச் செய்யும் அன்பு பேரருளாகும். அதனைப் பெறவே மணி வாசகர் விழைகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

*தீர்த்த அன்பாய அன்பர்கவரினும்*
*அன்ப போற்றி*
*பேர்த்தும் என் பொய்மை யாட்*
*கொண்டருளிடும் பெருமை போற்றி*
*வார்ந்த நஞ்சயின்று வானோர்க்*
*கமுதம் ஈ வள்ளல் போற்றி*
*ஆர்ந்த நின் பாதம் நாயேற்*
*கருளிட வேண்டும் போற்றி*

# கண்டம் விட்டு கண்டம் தாக்கி அழிக்கும் அக்னி-5 ஏவுகணை விண்ணில் பாய்ந்தது



(புவனேஸ்வர்)

கண்டம் விட்டு பாய்ந்து தாக்கும் அக்னி 5 ஏவுகணை வெற்றிகரமாக நேற்றுக் காலை விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த ஏவுகணை சோதனையின் வெற்றி மூலம் இந்தியாவுக்கு பெருமை கிடைப்பதுடன் பல நாடுகளும் கண்டு மிரளும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் அக்னி ஏவுகணை சோதித்துப் பார்க்கப்படுவதாக இருந்தது. மோசமான வானிலை காரணமாக இந்த சோதனை நேற்றுக் காலை நடத்தப்பட்டது.

இதுபோன்ற ஏவுகணைகளை அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் சீனா போன்ற நாடுகள் மட்டுமே சோதனை செய்துள்ளது. அக்னி 5 ஏவுகணை சோதனை வெற்றியடைவது மூலம் இந்தியாவும் ஏவுகணைத் தொழில் நுட்பத்தில் முன்னேறிய நாடுகளின் பட்டியலில் இடம்பெறுகின்றது. 17 மீற்றர் உயரமும் 50 தொன் எடையும் உள்ள அக்னி 5 ஏவுகணை ஒலியை விட் 24 மடங்கு வேகத்திலும் பயணிகள் விமானத்தை விட 30 மடங்கு வேகத்திலும் சென்று குறிப்பிட்ட இலக்கை தாக்கும் வல்லமை உடையது. மேலும், இந்த ஏவகணை ஒரு தொன் எடையுள்ள அணு ஆயுதங்களை கொண்டு செல்லும் திறனுடையது என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

அமைச்சர் ஏ.கே. அந்தோனி தொலைபேசியில் விஞ்ஞானிகளை தொடர்பு கொண்டு மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டார். இவர் இது குறித்து கூறுகையில்,

இந்த அரிய வெற்றி மூலம் இந்தியா உயர்ந்து நிற்கின்றது. இது அரும்பெரும் வெற்றி ஆகும். இது நாட்டின் மற்றொரு மைல்கல் என்றார்.

**அக்னி ஏவுகணையின் சிறப்பு அம்சங்கள்**

இந்திய எல்லை அருகேயுள்ள திபெத் பகுதிகளில் சீனா ஏவுகணைகளை குவித்து வரும் நிலையில் அக்னி 5 ஏவுகணை இந்திய பாதுகாப்புத்துறையில் மிகவும் முக்கியமானது. அக்னி 5 ஏவுகணை ஒரு தொன் எடை கொண்ட அணு குண்டுகளை சுமந்து சென்று தாக்கும் வல்லமை கொண்டது. இதன் மூலம் உலக நாடுகள் இந்தியாவை பார்த்து அஞ்சும் நிலை ஏற்படும். இந்த ஏவுகணை அமெரிக்காவை தவிர மற்ற உலகின் மற்ற பகுதிகளில் தாக்கும் திறன் கொண்டது. இந்த ஏவுகணை இயக்கிய பின்னர் இதனை நிறுத்த முடியாது. துப்பாக்கி புல்லட்டை விட வேகமாக செல்லும் திறன் கொண்டது. வீதிப் பகுதியிலிருந்துகூடஏவும்சக்திகொண்டது.

அக்னி 5 ஏவுகணை சிறிய செயற்கை கோள்களை தாக்கும் திறன் உடையது. அக்னி 5 ஏவுகணை பிரதமரின் நேரடி உத்தரவின் பேரில் தான் தாக்க செய்ய முடியும். இந்த ஏவுகணையை அமைதி திட்டங்களுக்கு பயன்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. (அ-2)





# இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகத்தை மாற்றியமைப்பேன்

## முதல்வர் ஜெயலலிதா சபதம்

எதிர்வரும் 2023 இற்குள் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகத்தை மாற்றுவேன் என முதல்வர் ஜெயலலிதா மீண்டும் சூளுரைத்துள்ளார்.

சென்னை ஓரகடத்தில் டைம்லர் நிறுவன வர்த்தக வாகன உற்பத்தி மையத்தை ஆரம்பித்து வைத்து அவர் பேசியதாவது, டைம்லர் நிறுவனம் சர்வதேச அளவில் நடத்தி வரும் 27 வாகன உற்பத்தி மையங்களில் சென்னை மையம் ஜேர்மனிக்கு வெளியே அமைக்கப்பட்ட மூன்றாவது மிகப் பெரிய மையம் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

உல்கில் மிக வேகமாக வளரும் இரண்டாவது ஆட்டோ மொபைல் சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளது. பிரிட்டன் நிறுவன கணிப்புப்படி இந்தியா 2015 இல் மூன்றாவது மிகப் பெரிய ஆட்டோ மொபைல் சந்தையாக திகழும்.



ஆட்டோ மொபைல் உற்பத்தித் துறையில் தமிழகம் சிறந்து விளங்குகிறது.

ஓராண்டுக்கு 13 இலட்சம் கார்கள் மற்றும் 3 இலட்சத்து 60 ஆயிரம் வர்த்தக வாகனங்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக தற்போது தமிழகம் இருக்கிறது. இதன்படி ஒரு நிமிடத்துக்கு மூன்று கார்கள், 75 வினாடிகளுக்கு ஒரு வர்த்தக வாகனம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆட்டோ மொபைல் உதிரிப்பாகங்கள் தயாரிப்பிலும் மிகப் பெரிய அடித்தளத்தை தமிழகம் கொண்டுள்ளது.

தாய்லாந்து, மலேசியா மற்றும் சீனா போன்ற நாடுகள் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கும் மேல், 7 முதல் 10 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளன. அந்த உந்துதலைக் கொண்டு தமிழகத்திலும் இந்த வளர்ச்சி விகிதம் சாத்தியமாகும். என் இலக்கு அனைத்து துறைகளிலும் தமிழகத்தை நம்பர் 1 மாநிலமாக ஆக்குவது தான். இதெல்லாம் சாத்தியமா என சில விமர்சகர்கள் கேள்வி எழுப்பலாம்.

யாரேனும் என்னைப் பற்றி சந்தேகப்பட்டால் என் வெற்றியின் மூலம் தான் அவர்களை நம்ப வைக்கிறேன். வெற்றி தான் ஆகச் சிறந்த பழிவாங்கல். வரலாறு வெற்றியாளர்களால் தான் எழுதப்படுகிறது.

இந்திய மாநிலங்களிடையே வளர்ச்சிக்கான ஒரு புதிய வழிகாட்டியாக தமிழகத்தை உருவாக்க என் அரசு தீர்மானித்துள்ளது என முதல்வர் தெரிவித்தார். (அ-2)

# ராமர் தேசிய சின்ன வழக்கு ஒத்திவைப்பு

(புதுடில்லி)

ராமர் பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்கும் திட்டமில்லை என்ற மத்திய அரசு அறிவித்துள்ள து.

முன்னதாக பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டும் என்ற சுப்ரமணிய சுவாமி உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் மத்திய அரசு பதிலளிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து ராமர் பாலத்தைத் தேசிய சின்னமாக அறிவிக்கும் திட்டம் எதுவும் இல்லையென்று மத்திய அரசு பதிலளித்துள்ளது. மத்திய அரசின் இந்த பதிலைத் தொடர்ந்து வழக்கு விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு ஒத்திவைத்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மத்திய அரசின் இந்த பதிலால் ராமர் பாலம் தேசிய சின்னமாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (அ-2)

# அதிகாரம் மிக்க தலைவர்கள் பட்டியலில் முதல்வர் மம்தாவின் பெயரும் இணைப்பு



(நியூயோர்க்)

உலக அரங்கில் 2012 ஆம் ஆண்டில் அதிகாரமிக்க 100 தலைவர்களின் பெயர்களை டைம் இதழ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இதில் அமெரிக்காவைச் சேர்ந்த ஜனாதிபதி பராக் ஒபாமா, அமெரிக்க நாட்டின் வெளியுறவு செயலாளர் ஹிலாரி கிளின்டன் மற்றும் தொழிலதிபர் வாரன் பப்பெட் ஆகியோர் பெயர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தப் பட்டியலில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் இடம்பெற்றுள்ளார். மம்தா பானர்ஜி தவிர சட்டத்தரணி அஞ்சலி கோபாலன் பெயரும் இதில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்குவங்க மாநிலத்தில் உள்ள அரசு நூலகம் மற்றும் அரசு உதவி பெறும் நூலகங்களில் குறிப்பிட்ட நாளிதழ்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவது மற்றும் முதல்வர் குறித்தான கார்ட்டூன் வெளியிட்ட பேராசிரியர் கைது போன்ற செயல்கள் விமர்சனத்திற்கு உள்ளாகிவரும் நிலையில் இச்செய்தி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் டைம் இதழ் மம்தா பல ஆண்டுகளாக போராடி தன்னை வலிமைமிக்க அரசியல்வாதியாக உலகிற்கு காட்டியுள்ளார் எனவும் புகழாரம் சூட்டியுள்ளது. (அ-2)



வோஷிங்டனில் நடந்த பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அமெரிக்காவுக்கான இந்திய தூதர் நிருபமாராவ், அமெரிக்கத் தூதர் நான்சி பவல்சைச் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# உலகம் முழுவதும் சொக்லேட் தட்டுப்பாடு விரைவில்?

## அவுஸ். நிபுணர்கள் எச்சரிக்கை

உங்களுக்கு பிடித்தமான சொக்லேட்டை இப்போதே வாங்கி சாப்பிடுங்கள், ஏனெனில் உலகம் முழுவதும் சொக்லேட் தட்டுப்பாடு வரப் போகிறது என்று அவுஸ்திரேலிய நிபுணர் எச்சரிக்கிறார்.


அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழக ஊட்டச்சத்து துறை பேராசிரியர் டேவிட் பெஸ்ட், உலகில் மிக விரைவில் சொக்லேட் நெருக்கடி வரும் என்று சொல்கிறார். அதற்கான காரணங்களில் இந்தியாவும் சீனாவும் ஒன்று என்கிறார்.

இதற்கு காரணம் இந்தியா, சீனா உட்பட வேகமாக வளரும் நாடுகளில் சொக்லேட் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இப்போது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பிடித்தமான ஒன்றாக சொக்லேட் மாறிவிட்டது.

இப்படி மக்கள் தொகையில் பெரும் பகுதியை கொண்டுள்ள இந்தியா, சீனாவில் சொக்லேட் தேவை அதிகரிக்கும் நிலையில் அதன் மூலப் பொருளான கொக்கோ கொட்டை உற்பத்திக்கான சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. ஆபிரிக்கா, தென்கிழக்குஆசியா, தென்அமெரிக்க நாடுகள் சிலவற்றில் மட்டுமே கொக்கோ உற்பத்தியாகிறது. அதிக தேவை காரணமாக அந்நாடுகளால் கோரப்பட்டதை சமாளிக்க முடியவில்லை.

அதனால் விலைவில் உலகம் முழுவதும் சொக்லேட் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது என்றார். (அ-2)

# டெக்கானை வீழ்த்தியது டில்லி




ஐ.பி.எல். தொடரில் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் டில்லி டேர்டேவில்ஸ் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. 5ஆவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரின் டில்லி டேர்டேவில்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ் அணிகள் டில்லி ஃபெரோஷா கோட்லா மைதானத்தில் நேற்று மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய அணித்தலைவர் குமார் சங்கக்கார ஒரு ஓட்டத்தில் யோகேஷ் நாயர் பிடியில் ஆட்டமிழந்தார்.

மற்றொரு தொடக்க வீரர் ஷிகர் தவான் 44 ஓட்டங்களும் அடுத்துக்களமிறங்கிய பார்த்திவ் பட்டேல் 45 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பின்பு களமிறங்கிய டானியல் கிறிஸ்டியன் 19 ஓட்டங்களும் போல் டுமினி 4 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

டெக்கான் 20 ஓவர் முடிபில் 8 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் எடுத்தது. பாரத்சிப்லி 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தார்.

இதனையடுத்து 158 ஓட்டங்கள் இலக்குடன் டில்லி டேர்டேவில்ஸ் அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

தொடக்க வீரர்களான நாமன் ஓஜா ஒரு ஓட்டத்துடன் போல் டுமினியின் பிடியிலும் அணித்தலைவர் வீரேந்திர சேவாக் 7 ஓட்டங்களில் கிறிஸ்டியன் பிடியிலும் ஆட்டமிழந்தனர்.


அடுத்துக்களமிறங்கிய றோஸ் டெய்லர் 13 ஓட்டங்களும் மஹேல ஜெயவர்த்தன 6 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியாக டெல்லி டேர்டேவில்ஸ் அணி 19.1 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 162 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் வெற்றிக்கு வழிவகுத்த பீற்றர்சன் 64 பந்துகளில் 6 பவுண்டரி, 9 சிக்ஸருடன் சதம் கடந்து 103 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்ததுடன் இப் போட்டியின் சிறப்பு ஆட்டக்காரராகவும் தெரிவானார்.

# சென்னை அணி புனேயை 13 ஓட்டங்களால் வென்றது

ஐ.பி.எல். போட்டித் தொடரின் 24ஆவது லீக் ஆட்டம் சென்னையில் நேற்றிரவு நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கங்குலி தலைமையிலான புனே வாரியஸ் அணியும் மோதின.




சென்னை அணியில் கடந்த போட்டியில் விளையாடிய முரளி விஜய், அல்பி மோர்கல், யோ மகேஷ் ஆகியோர் நீக்கப்பட்டு விர்த்திமன் சஹா, பொல்லிங்கர், சதாப் ஜகதி ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

புனே அணியில் கடந்த போட்டியில் விளையாடிய அசோக் டின்டா நீக்கப்பட்டு முரளி கார்த்திக் சேர்க்கப்பட்டுள்ளார்.

நாணயச் சுழற்சியில் வென்ற புனே வாரியஸ் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. அதன்படி சென்னை அணியின் தொடக்க வீரர்களாக டுபிளிசிஸ்ஸும் பத்ரிநாத்தும் களமிறங்கினர்.

இந்த ஜோடி 116 ஓட்டங்கள் எடுத்தது. இந் நிலையில் டு பிளிஸ்ஸி 58 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து பத்ரிநாத்தும் 57 ஓட்டங்களில் வீழ்ந்தார்.

களமிறங்கிய உடனேயே அதிர்டியாக ஆட முயன்ற ரெய்னா ஓட்டமேதும் எடுக்காமலும் பிராவோ 12 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

ஆட்டத்தின் கடைசிப்பந்தில் ஜடேஜா 7 ஓட்டங்களில் அவுட்டாக சென்னை அணி 20 ஓவர்கள் முடிபில் 5 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்கள் எடுத்தது. தோனி 12 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமலிருந்தார்.

புனே அணித்தரப்பில் சாமுவேல்ஸ் 3 விக்கெட்டுக்களையும் நெகரா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் 165 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய புனே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 151 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் சென்னை அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப் போட்டியின் சிறப்பு ஆட்டக்காரராக குலசேகர தெரிவானார்.

# சங்கக்காரவுக்கு பேட்டியளிக்க தடையா?



இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரும், முன்னாள் அணித்தலைவருமான குமார் சங்கக்கார ஊடகங்களில் பேட்டிகளை வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

சமீபத்தில் விஸ்டன் கிரிக்கெட் வீரர் மற்றும் சிறந்த 5 கிரிக்கெட் வீரர்களுள் ஒருவராகவும் குமார் சங்கக்கார தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இதற்காக இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையில் டெஸ்ட் தொடர் இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது விஸ்டன் ஆசிரியர் லோரன்ஸ் பூத், இலங்கைக்கு வந்திருந்தார் எனவும், அப்போது அவர் சங்கக்காரவைச் சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டார் எனவும் நாளிதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சங்கக்காரவை சந்திப்பதற்கான அனுமதியை கிரிக்கெட்டின் பைபிள் என்று அழைக்கப்படும் விஸ்டன் சஞ்சிகையின் ஆசிரியர் இலங்கைக் கிரிக்கெட் சபையிடம் வேண்டிய போதிலும், இவ் அனுமதி அவருக்கு மறுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விஸ்டனின் கிரிக்கெட் வீரர் விருது வழங்கப்பட முக்கிய காரணமாக அமைந்த சங்க்காரவின் லோட்ஸ் உரை காரணமாகவே இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அந்த லோட்ஸ் உரையில் சங்கக்கார இலங்கையின் வரலாறு, கிரிக்கெட்டின் வரலாறு என்பனவற்றைப் பற்றி விரிவாக எடுத்துரைத்ததுடன், 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ண வெற்றியின் பின்பு இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகிகள் வர்த்தக நோக்கில், தனிப்பட்ட சுயலாபங்களுக்காகச் செயற்படுகின்றனர் என்று கூறியிருந்தார்.

இந்த சங்கக்காரவின் உரை சர்வதேச அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்த போதிலும், இலங்கையில் கிரிக்கெட் சபை வட்டாரத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொள்ள வில்லை.

அந்த உரை தொடர்பாக சங்கக்காரவிடம் விளக்கம் கேட்கப்படும் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

சங்கக்கார தற்போது ஐ.பி.எல் போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு தலைமை தாங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகிந்தவின் இராஜதந்திர...

புதிய பயணத் திட்டத்தின்படி, 21-ம் திகதி ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் சிற்றுண்டி உண்பதாக இருந்த திட்டம் மாற்றப்பட்டு, 20-ம் திகதி மாலை அவரைச் சந்தித்து உரையாடுவதாக மாற்றப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுடன் நேரிடையாகக் கலந்துரையாடவும், அவர்களது உள்ளக் குமுறலைக் கேட்டு அறியவும் வாய்ப்பு இல்லாமல் பயணத் திட்டம் அமைந்துள்ளது.விருந்துக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கு சாதகமான கருத்து இந்தியாவில் ஏற்படத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிநிரல் போன்று உள்ளது என்று குழுவில் தமது கட்சி இடம்பெறாததற்கான காரணத்தை முதல்வர் ஜெயலலிதா கூறியிருந்தார்.

பா.ஜ.க. சார்பில் சென்றுள்ள சுஷ்மா சுவராஜ் இந்தப் பிரச்சினை இருமுனை கத்தி என்பதை உணர்ந்தவர்.நாளைக்கு மத்தியில் பா.ஜ.க. அரசு அமையுமானால் அப்போது இலங்கையுடனான இராஜிய உறவுகளை எப்படி எதிர்கொள்வது என்பதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் பேசுவார்.கருத்துச் சொல்வார்.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களைப் பற்றி சொல்லவே வேண்டாம். அவர்கள் கட்சித் தலைமையின் ஒப்புதல் இல்லாமல் ஒரு வார்த்தைகூடப் பேசப் போவதில்லை. கேள்வி கேட்கப் போவதும் இல்லை.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை இலங்கை அரசு வரவேற்றதன் காரணமே ஐ.நா.சபையின் குழு எதுவும் இலங்கையைப் பார்வையிட வந்துவிடாமல் தடுப்பதற்காகத்தான்.

மனித உரிமை ஆணைக்குழுவில் எங்களுக்கு எதிராக வாக்களித்த இந்தியாவே தனது நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை அனுப்பி எங்களுக்கு நற்சான்றிதழ் வழங்கி விட்டது என்று சொல்லிக் கொள்வதற்காகத்தான் இது. ஜனாதிபதி ராஜபக்ஷ விரித்த இராஜ தந்திர வலையில் மறுபடியும் விழுந்திருக்கிறது இந்திய அரசு.

இலங்கையில் இருந்து திரும்பி வரும் இந்தக் குழுவின் கைளில் விருந்தின் மணம் இருக்குமே தவிர ஆற்றொணாது அழுத ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைத்த ஈரம் இருக்கப்போவதில்லை.

அப்படியானால் அவர்தம் துயரங்களை எப்படித்தான் அறிந்து கொள்வது?பாரதி காட்டிய வழிதான்.....

அவர் விம்மி விம்மி விம்மி அழும் குரல் கேட்டிருப்பாய் காற்றே. துன்பக் கேணியிலே எங்கள் பெண்கள் அழுத சொல் மீட்டும் உரைப்பாயோ என இந்த ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

# புயல் வேக...

கெடுபிடி ஏதும் இருப்பதாக எந்தத் தமிழரும் கூறவில்லை என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் கூறியுள்ளார்.

எனவே, இந்திய நாடாளுமன்ற குழுவின் பயணம் எந்த விதத்திலும் பயனளிக்காது என்று கூறப்பட்டுள்ள கருத்துக்கள் உண்மையாகியுள்ளன. இன்றளவும் தமிழர்கள் கடத்தப்படுகின்றனர் என்பதை விசாரித்து அறியாமையிலேயே இந்த உண்மையைக் கண்டறியும் குழு பயணம் செய்து கொண்டிருக்கிறது.

எனவே, இப்படிப்பட்ட குழுவின் பயணத்தால் துயரத்திலும்,அவலத்திலும் வாழும் தமிழர்களின் வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. மேம்போக்காக ஒரு பயணத்தை மேற்கொண்டு இந்தக் குழு அளிக்கும் அறிக்கை உண்மையை மறைப்பதாகவும், இலங்கை அரசை காப்பதாகவுமே இருக்கும் என்பதற்கு சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ள கருத்துக்களே சான்றாகும்.

எனவே, இலங்கையில் போர் நடந்த பகுதிகளுக்கு மனித உரிமையாளர்கள், ஊடகவியலாளர்கள் கொண்ட பன்னாட்டுக் குழுவை ஐக்கிய நாடுகள் மன்றம் அனுப்பிவைக்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படுகின்ற யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்ட சுற்றுப் போட்டி-2012 இன் இறுதிப் போட்டி நாளை காலை 9.00 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக விளையாட்டுமைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப்போட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணியினை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இவ் இறுதி நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக புனித பத்திரிசியார் கல்லூரியின் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியரும் முன்னாள் யாழ். பல்கலைக்கழக துடுப்பாட்ட வீரருமாகிய எஸ்.சகாயராஜாவும், சிறப்பு விருந்தினராக வவுனியா கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவிப் பணிப்பாளரும் முன்னாள் யாழ்.பல்கலைக்கழக துடுப்பாட்ட வீரருமாகிய கே.சசிகரனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# ஹொக்கிச் சுற்றுப்போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுஅவை நடத்தும் கழகங்களுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகின்றது.

நேற்று வியாழக்கிழமை இப்போட்டியினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் ஹொக்கி அணி வீரரும் யாழ்.நாவற்குழி மகா வித்தியாலய ஆசிரியருமாகிய எஸ்.சிவானந்தன் ஆரம்பித்து வைத்தார்.

இச் சுற்றுத் தொடரின் நேற்றைய போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியும், யூனியன்ஸ் கழக அணியும் மோதிக் கொண்டன.

இன்றைய போட்டியில் ஜொனியன்ஸ் அணியும் கிராஸ் ஹொப்பர்ஸ் அணியும் மோதவுள்ளன.

# பிரபாகரன் உயிரோடு...

நாள் காலை மதுரையில் என் வீட்டு முன்பாக ஒரு ஜீப் வந்து நின்றது. பிரபாகரன் சிரித்துக் கொண்டே இறங்கி வந்தார். சிறுமியான என் மகள் உமாவை இழுத்து அணைத்துக் கொண்டு, மாமாதான் வந்திருக்கின்றேன். மாமாவின் ஆவி அல்ல என்றார். எல்லோரும் துயரம் மறந்து சிரித்தோம்.

1989 ஜூலை மாதம் த இந்து நாளேட்டில் விடுதலைப்புலிகள் அமைப்பின் அடுத்த நிலையில் உள்ள மாத்தையா குழுவினரால் பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டார். பிரபாகரனின் உடல் வவுனியாவில் இருந்து வடகிழக்கே அனந்தர் பெரியகுளம் கிராமத்தில் வைக்கப்பட்டுள்ளது. மக்கள் இரு நாட்களாக பிரபாகரனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர் என்று செய்தி வெளியானது. அது பொய் என்பதை காலம் வெகுவிரைவிலேயே உணர்த்தியது.

2004-ம் ஆண்டு சுனாமி வந்தபோது அதில் சிக்கி பிரபாகரன் இறந்து விட்டதாகவும் அவரது உடலை எடுத்துச் செல்ல விலை உயர்ந்த சவப் பெட்டி தயாராக இருப்பதாகவும் சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அதில் இருந்து 10 நாட்கள் கழித்து நோர்வே நாட்டின் வெளியுறவுத் துறைச் செயலாளரைப் புன்னகை மாறாமல் சந்தித்தார் தம்பி.

2007 ஆம் ஆண்டு சிங்கள விமானப் படை நடத்திய தாக்குதலில் பிரபாகரன் படுகாயம் அடைந்திருப்பதாகவும், பிழைப்பது கடினம் என்றும் இலங்கைப் பாதுகாப்புத் துறை செய்தி வெளியிட்டது. அது பொய் என்பது பின்னர் உலகுக்குத் தெரிய வந்தது.

அவை போலத்தான் இப்போதும். 2009ம் ஆண்டு மே மாதத்தில் முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாக அறிவித்தார்கள். ஓர் உடலையும் காட்டினார்கள். ஆனால், மே 30 ஆம் திகதி வரை அவரது பாதுகாவல் படையில் இருந்தவர்களைச் சந்தித்து பேசும் போது, மே 17 ஆம் திகதி பிரபாகரனுக்கு எதுவும் நடந்துவிடவில்லை என்பதை உறுதி செய்கின்றனர்.

ஆகவே, மரணத்தை வென்ற அந்த மாவீரன் உயிரோடு தான் இருக்கிறார் என்பதை நம்பத் தகுந்த ஆதாரங்கள் மற்றும் முந்தைய வரலாறுகளில் இருந்தே பேசுகிறேன். எனது சொந்த விருப்பத்தில் இருந்து அல்ல! தம்பி நிச்சயம் ஒரு நாள் வருவார். தமிழீழ விடுதலைக்கு மறுபடியும் தலைமை தாங்குவார் என்றார். (ந-8,11)

# சலவை இயந்திரத்தில் மின் ஒழுக்கு-பெண் மரணம்

(அம்பாறை)

கல்முனை சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் சலவை இயந்திரத்தில் ஏற்பட்ட மின்சார ஒழுக்கிற்கு பெண் ஒருவர் பலியானார்.

மின் ஒழுக்கினால் ஏற்பட்ட தீயில் சிக்கியே இந்தப் பெண் உயிரிழந்துள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று மாலை நிகழ்ந்துள்ளது.

மேற்படி பெண் சலவை இயந்திரத்தினுள் ஆடைகளை கழுவிக் கொண்டிருந்த நிலையில் மின்சார ஒழுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் குறித்த இயந்திரம் தீப்பற்றிக் கொண்டது. இந்த தீயிலேயே பெண் சிக்கி உயிரிழந்துள்ளார். (ந-8;11)

# இந்தியக் குழுவினர்...

பாராளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் இலங்கை வந்துள்ள குழு வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டதன் பின்னரே இவ்வாறு நன்றி தெரிவித்திருப்பதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க எதிர் காலத்தில் வடக்கின் கல்வி மற்றும் சுகாதார அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்காக இந்திய அரசின் உதவி பெற்றுத் தரப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. (ந-8-11)

# தே.அ.அ.கண்டெடுப்பு

892001928 V என்ற இலக்கம் கொண்ட தியாகராஜா ஜீவித்தன் என்பவருடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ந-11)

# இந்தியக் குழு...

தொடர்பில் தகவல்களைப் பெறுவதில் யாழ்.அரச அதிபருடனான சந்திப்பு முக்கியமானதாக இருந்தபோதிலும் அச்சந்திப்பு திட்டமிட்டு தவிர்க்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. (ந-8;11)

# நல்லிணக்க...

கருத்து வெளியிட்ட அவர், இலங்கையின் தேசிய ரீதியான நெருக்கடிக்கு உள்நாட்டு ரீதியான தீர்வையே பெற்றுக்கொடுக்க உள்ளதாக இந்திய குழுவுக்கு அரசாங்கம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டார். (ந-8;11)

நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான
திருமண அழைப்பிதழ்கள் மற்றும்
அனைத்துவிதமான அச்சுவேலைகளையும்
தரத்துடனும், குறைந்த செலவுடனும்
விரைந்து பெற்றுக்கொள்ளவும்
இவற்றுடன்....
கல்வெட்டுப் புத்தகங்களுக்கான
4 வர்ணக் கவர்களுக்கும்...
பாரதி பதிப்பகம்
இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3081

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
ஆங்கிலம், பிரெஞ்சு புதிய பிரிவு
ஆரம்பம் 21.4.2012 சனிக்கிழமை
ஆங்கிலம் | பிரெஞ்ச்
பிரிவு 1 - காலை 8 - 9 | காலை 10 - 11
பிரிவு 2 : மாலை 3 - 4 | வெறும் 25% கட்டணம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456

# லலித், குகன்...

இரண்டு லேண்ட்ரோவர் வாகனத்தில் லலித் மற்றும் குகன் ஆகியோர் ஏற்றப்பட்டு வேறு இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த வாகனத்தின் கண்ணாடிகள் முற்றுமுழுதாக கறுப்பு நிறத்தில் டிண்டட் செய்யப்பட்டிருந்தன.

அத்துடன் இருவரும் ஒரே இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போதும் அவர்கள் தனியாகவே அங்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த வாகனங்கள் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் தலைமையகத்திற்கு சென்ற போது, தலைமையகத்தின் விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டதுடன் அருகில் இருந்த பெட்டிக் கடையில் இருந்தவர்களும் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-8;11)

புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை
ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கிளிநொச்சிக் கிளையில் முற்பணக் கொடுப்பனவுத் திட்டத்தில் இணைந்த தரம் 5 மாணவர்களிற்கான முதலாவது புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை நாளை காலை 9.00 மணிக்கும் மதியம் 12.00 மணிக்கும் இரண்டு பிரிவுகளாக நடைபெறும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறேன்.
அ. நஞ்சித்
கிளிநொச்சிக் கிளை முகாமையாளர்
(C-6400)

மேலதிக ஆளணியினருடன்
ஆஸ்திரேலியா திசைகாட்டியின் கிளை
விஸ்தரிக்கப்படுகின்றது

எம்மிடம் இலங்கையில்
ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
Student Visa
ஆலோசனை பெற்றுச் செல்பவர்களை
★ ஆஸ்திரேலியாவில் விமான நிலையத்தில் இருந்து இலவசமாக அழைத்துச் செல்வதற்காகவும்.
★ குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும்.
★ பகுதி நேர வேலை வாய்ப்புக்கள் தொடர்பான ஆலோசனைகளுக்காகவும்.
THISAIKADDI (Pvt) Ltd. (PV82703)
504, Hampton Street,
Malborne,
Australlia.
Land Phone : 0061390437100

எங்கள் கிளை எந்நேரமும் திறந்திருக்கும் என்பதை அனைத்து அன்புள்ளங்களுக்கும் பெரும் மகிழ்வோடு அறியத் தருகின்றோம்.
திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
தலைமைக் காரியாலயம்
இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 2219016
இல. 115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 021 228 5544.
இல. 22A, பிராங்பெட் பிளெஸ், பம்பலப்பிட்டி. 0112508443 0756438553
(C-6405)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 23.04.2012 | Batch II: 24.04.2012 | Batch III : 25.04.2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Quick Learning Course 1 ½ Months
(Spoken English with Grammar)
Diploma In English 2 ½ Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்
A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2½ Months
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.